வி. இ. லெனின்

எங்கிருந்து தொடங்குவது?

கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்

தொழிலாளர் வர்க்கமும் அதன் பத்திரிகைகளும்

அயல் மொழிப் பதிப்பகம்

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின்

எங்கிருந்து தொடங்குவது?

கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்

தொழிலாளர் வர்க்கமும் அதன் பத்திரிகைகளும்

அயல் மொழிப் பதிப்பகம்
மாஸ்கோ

பொருளடக்கம்

எங்கிருந்து தொடங்குவது? 5
கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும் . . . 23
தொழிலாளர்களும் ''பிராவ்தா''வும் . . . 36
ருஷ்யத் தொழிலாளர் பத்திரிகைகளின் சென்ற கால வரலாற்றிலிருந்து 41
நமது கடமைகள் 60
தொழிலாளர் வர்க்கமும் அதன் பத்திரிகைகளும் 68
நம்முடைய செய்தித்தாள்களின் தன்மை . . . 83
குறிப்புகள் 89
பெயர்ப் பட்டியல் 104

எங்கிருந்து தொடங்குவது?

"என்ன செய்யவேண்டும்?" என்ற கேள்வி, கடந்த சில ஆண்டுகளாக, ருஷ்ய சோஷல்-டெமாக்ரட்டுகளை எதிர்நோக்கும் மிக அவசரமான கேள்வியாக உருப்பெற்றிருக்கிறது. (1880-1889 ஆண்டுகளின் இறுதியிலும் 1890-1899 ஆண்டுகளின் தொடக்கத்திலும் இருந்ததுபோல) எந்தத் திசைவழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது என்பதல்ல, தேர்ந்து தெளிந்த திசைவழியில் செல்வதற்கு என்னென்ன நடைமுறை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தான் இப்போதைய பிரச்சினை. நடைமுறை வேலைக்கான அமைப்பு, திட்டம் ஆகியவற்றைப் பற்றியது இப்போதைய பிரச்சினை. நடைமுறை வேலையில் ஈடுபடும் கட்சியைப் பற்றிய இந்த அடிப்படையான பிரச்சினை—போராட்டத்தின் தன்மையையும் வழிமுறைகளையும் பற்றிய இந்தப் பிரச்சினை—நம்மால் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், இப்பிரச்சினை சிந்தனையின் வருந்தத்தக்க நிலையின்மையையும், ஊசலாட்டத்தையும் வெளிப்படுத்துகின்ற ஆழமான கருத்து வேற்றுமைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக்

கொள்ளவேண்டும். ஒருபுறத்தில், ''பொருளாதார வாத''ப்[1] போக்கு அழிந்தொழிவதற்கான அறிகுறி ஏதும் இல்லை; அது அரசியல் ஸ்தாபன வேலையையும் அரசியல் கிளர்ச்சி (agitation) வேலையையும் குறைக்கவும் குறுக்கவும் முயன்று கொண்டிருக் கிறது. மறுபுறத்தில், கோட்பாடற்ற கதம்பவாதப் போக்கு முன்போலத் தற்பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது. இந்தக் கதம்பவாதம் ஒவ் வொரு புதிய ''போக்குக்கும்'' உகந்தவாறு தன்னைச் சீரமைத்துக்கொள்கிறது. முழு இயக்கத்தின் அடிப் படையான கடமைகளிலிருந்தும் நிரந்தரத் தேவை களிலிருந்தும் தாற்காலிக அவசியங்களை அதனால் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது. இக்கதம்பவாதப் போக்கு, இருப்பிடமாக ''ரபோச்சேயே தேலோ'' வைத்[2] தேர்ந்தெடுத்து விட்டதென்பது தெரிந்த விஷயம். இந்தப் போக்கின் கடைசித் ''திட்ட'' அறிக்கை — ''சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருப்பம்'' என்ற ஆடம்பரத் தலைப்பிட்ட ஆடம் பரக் கட்டுரை ('''ரபோச்சேயே தேலோ'வின் லிஸ்தோக்'', எண் 6) — இந்தப் போக்கைப் பற்றிய நமது வருணனையைத் தெள்ளத் தெளிவாக மெய்ப்பிக்கிறது. அவர்கள் நேற்றுத்தான் ''பொரு ளாதாரவாதத்''துடன் பசப்புக் காதல் புரிந்தார் கள்; ''ரபோச்சயா மிஸில்''[3] பற்றிய உறுதியான கண்டனத்தைக் கண்டு வெஞ்சினம் கொண்டார்கள்; யதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட் டத்தைப் பற்றிப் பிளெகானவ் முன்வைத்த கருத் தின் வேகத்தைக் ''குறைக்க'' முயன்றனர். இன் றோ, ''சூழ்நிலைகள் 24 மணி நேரத்தில் மாறினால்

போர்த்தந்திரங்களும் 24 மணி நேரத்திற்குள் மாறவேண்டும்'' என்று லீப்க்னெஹ்ட் சொன்னதை மேற்கோள் காட்டுகிறுர்கள்; யதேச்சாதிகாரத்தை நேரடியாகத் தாக்குவதற்கு, வலிமையாகத் தாக்கி அழிப்பதற்கு, ''பலம் வாய்ந்த போராட்ட ஸ்தாபனம்'' வேண்டும் என்று பேசுகிறுர்கள்; ''பரவலான, புரட்சிகரமான அரசியல் கிளர்ச்சியை (இப்போது எத்தகைய செயலூக்கம்! புரட்சிகரமான கிளர்ச்சியாம்! அரசியல் கிளர்ச்சியாம்!) பொது மக்களிடையே நடத்துவதை''ப் பற்றியும், ''கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தும்படி பொதுமக்களை இடைவிடாமல் அழைக்கவேண்டும்'' என்பதைப் பற்றியும், ''அழுத்தமான (கவனிக்க!) அரசியல் தன்மை பெற்ற தெரு ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும்'' என்பதைப் பற்றியும், இவற்றை யொத்த பிறவற்றைப்பற்றியும் பேசுகிறுர்கள்.

''இஸ்க்ரா''வின்[4] முதல் இதழிலேயே நாம் முன்வைத்த திட்டத்தை—தனித்தனிச் சலுகைகளைப் போராடிப் பெறுவதோடு நில்லாமல், யதேச்சாதிகாரக் கோட்டையையே வன்மையாகத் தாக்கி அழிப்பதை நோக்கமாகக் கொண்ட, ஸ்தாபன ரீதியில் அணிதிரண்ட ஓர் உறுதியான கட்சியை அமைக்க வேண்டுமென்ற நம் திட்டத்தை—''ரபோச்சேயே தேலோ'' இவ்வளவு விரைவாக மேற்கொண்டதைக் குறித்து நாம் ஒருகால் திருப்தியைத் தெரிவித்திருக்கலாம்; ஆனுல் நம் திட்டத்தை மேற்கொண்டவர்களிடம் எவ்வித உறுதியான நோக்கு நிலையும் இல்லாதிருப்பது, முழு திருப்தியைப் பாழ்படுத்திவிடக் கூடியது.

''ரபோச்சேயே தேலோ'', லீப்க்னெஹ்ட் பெயரைக் குறிப்பிட்டது வெறும் பாசாங்கு. ஒரு தனிப்பட்ட பிரச்சினை பற்றிய கிளர்ச்சியின் போர்த் தந்திரங்களையோ, கட்சி ஸ்தாபனத்தின் ஏதாவதொரு விவரம் பற்றிய போர்த்தந்திரங்களையோ, 24 மணி நேரத்தில் மாற்றிக்கொள்வது சாத்தியம். ஆனால் போர்த்தன்மை கொண்ட ஸ்தாபனமும் வெகு ஜனங்களுக்கிடையே அரசியல் கிளர்ச்சியும் பொதுவாக எப்போதும் இன்றியமையாத தேவைதானா என்பதைக் குறித்துத் தம் கருத்தை 24 மணியில், ஏன், 24 மாதத்தில் கூட, எந்தக் கோட்பாடும் இல்லாத நபர்கள்தான் மாற்றிக்கொள்ள முடியும். இதைப் பொறுத்தமட்டில், சூழ்நிலை மாறிவிட்டதென்றும், காலம் மாறிவிட்டதென்றும் வாதிப்பது பரிகசிக்கத்தக்கதாகும்; போர்த்தன்மை வாய்ந்த ஸ்தாபனத்தை உருவாக்குவதும் அரசியல் கிளர்ச்சியை நடத்துவதும் ''மந்தமான, சமாதான மான'' எல்லாச் சூழ்நிலைகளிலும், ''புரட்சிகரமான ஊக்கம் குன்றித் தேயும்'' எல்லாக் காலங்களிலும் கட்டாயமாக ஆற்றவேண்டிய கடமையாகும். அது மட்டுமல்ல. அந்தச் சூழ்நிலையிலும் அந்தக் காலங்களிலும்தான், இத்தகைய வேலை மிக அவசியமாகும்; ஏனென்றால், புரட்சிக் கலகங்கள் திடீரென்று வெடித்தெழும் நேரங்களில் ஸ்தாபனத்தை அமைப்பதென்பது காலம் கடந்த முயற்சி ஆகிவிடும். நொடி நேர எச்சரிக்கையில் செயலில் இறங்குவதற்குச் சித்தமாக ஸ்தாபனம் அமைந்திருக்க வேண்டும். ''இருபத்துநான்கு மணி நேரத்தில் போர்த்தந்திரங்களை மாற்றிக்கொள்''வதாம்! ஆனால் போர்த்

தந்திரங்களை மாற்றிக்கொள்வதற்கு, முதலிலேயே போர்த்தந்திரங்களை வகுத்திருக்கவேண்டுமே. எல்லாவிதச் சூழ்நிலைகளிலும் எல்லாக் காலங்களிலும் நடத்தப்பட்ட அரசியல் போராட்டத்தில் சோதிக்கப்பெற்ற வலுவான ஸ்தாபனம் இல்லாமல், உறுதியான கோட்பாடுகளால் ஒளியுறுத்தப்பட்டு விடாப்பிடியாக நிறைவேற்றப்பெறும் முறையான செயல் திட்டத்தைப்பற்றிப் பேசுவதற்கே இடமில்லை. அத்தகைய செயல்திட்டமே போர்த்தந்திரங்களென்று குறிப்பிடப் பெறுவதற்குத் தகுதியானது. இவர்களது கூற்றைத்தான் சற்றுப் பார்ப்போம்; ''சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நேரம்'', பயங்கரவாதம் என்ற ''புத்தம் புதிய'' பிரச்சினையை நம் கட்சிக்குமுன் வைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நேற்று அரசியல் ஸ்தாபனமும் கிளர்ச்சியும் ''புத்தம் புதிய'' பிரச்சினையாக இருந்தனவாம்; இன்றோ பயங்கரவாதம் ''புத்தம் புதிய'' பிரச்சினையாக உருவாகியிருக்கிறதாம். முந்தையதற்கும் பிந்தையதற்கும் இடையே உள்ள தொடர்பைச் சிறிதும் நினைவுகூராத இந்த நபர்கள், போர்த்தந்திரங்களைத் தீவிரமாக மாற்றுவதைப்பற்றி விவாதிப்பது விந்தையாக இல்லையா?

நல்ல காலமாக ''ரபோச்சேயே தேலோ''வின் கருத்து சரியில்லை. பயங்கரவாதம் என்பதைப் புதிய பிரச்சினையாகக் கருதுவதற்குச் சிறிதும் ஆதாரம் இல்லை. இப்பிரச்சினையைப் பற்றி ருஷ்ய சோஷல்-டெமாக்ரட்டுகளுக்கிடையே உறுதியாக நிலவிய கருத்து என்ன என்பதைச் சுருக்கமாக விளக்கினால் போதுமானது.

கோட்பாடு ரீதியில் நாம் பயங்கரவாதத்தை ஒரு பொழுதும் நிராகரித்ததில்லை; நிராகரிக்க வும் முடியாது. பயங்கரவாதம் என்பது ராணுவ நடவடிக்கையின் ஒருவகையாகும். அது படைக ளின் குறிப்பிட்ட நிலையையும், குறிப்பிட்ட சூழ் நிலைகளையும் பொறுத்து, போராட்டத்தின் குறிப் பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக விருப் பதுமட்டுமின்றி இன்றியமையாததாகவும்கூட இருக் கலாம். ஆனல் இவர்களது கூற்றின் சாரம் என்ன? போராட்டத்தின் முழு ஏற்பாட்டுடன் நெருக்க மாகப் பின்னிப் பிணைந்த வகையில், களம் புகுந்து போர் புரியும் ராணுவத்தின் ஒரு நடவடிக்கை யாக இவர்கள் இப்போது பயங்கரவாதத்தைக் கருதாமல், எந்த ராணுவத்துடனும் தொடர்பற்ற விதத்தில், தனிப்பட்டோரைத் தாக்கும் தனிப்பட்ட முறையாகவே அதனைக் கருதிப் பேசுகிருர்கள். மத்திய ஸ்தாபனம் இல்லாத நிலையில், ஸ்தலப் புரட்சி ஸ்தாபனங்கள் பலவீனமாக இருக்கும் நிலையில், பயங்கரவாதம் இந்த வகையிலே தான் உருவாகும். எனவேதான், தற்போதைய சூழ்நிலையில், இத்தகைய போராட்டமுறை, காலத்திற்கு ஒவ்வாததாயும் பொருத்தமற்றதாயும் உள்ளதென்று நாம் உறுதி யாகச் சாதிக்கிறேம். மேலும் இப்போராட்ட முறை தீவிரமாகப் போராடும் வீரர்களின் கவனத்தை, முழு இயக்கத்தின் நலன்களைக் கருதுங்கால் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த உண்மைக் கடமையிலிருந்து அப்பால் திருப்புகிறது என்றும், அது அரசாங்கச் சக்திகளை அல்ல, புரட்சிச் சக்திகளையே சீர்குலைக் கிறது என்றும் நாம் உறுதியாகப் பிரகடனம் செய்து

வருகிறோம். சமீபகால நிகழ்ச்சிகளை நினைவூட்டிக் கொள்ளுங்கள்: நம் கண்ணெதிரே, பெருந்திரளான நகரத் தொழிலாளரும் ''சாமானியக் குடிகளும்'' போராட்டத்தில் குதிக்கத் துடிதுடிக்கிறார்கள். ஆனால் புரட்சிக்காரர்களுக்குத் தலைவர்களையும் அமைப்பாளர்களையும் கொண்ட செயற்குழு எதுவும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் ஆற்றல் மிக்க புரட்சிக்காரர்கள் பயங்கரவாதத்தைத் தழுவுவதால், நாம் எந்தப் போர்ப்படைகள் மீது உண்மையில் நம்பிக்கை வைக்கலாமோ அந்தப் போர்ப்படைகள் பலவீனமடையும் என்ற ஆபத்து ஏற்படாதா? அதிருப்தி அடைந்து, எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டு, போராட்டத்துக்குச் சித்தமாயிருப்பவர்களும், சிதறியிருக்கும் காரணத்தால் மட்டுமே வலுக்குறைந்திருப்பவர்களுமான, சிதறிக்கிடக்கின்ற வெகு ஜனங்களுக்கும் புரட்சி ஸ்தாபனங்களுக்குமிடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பெறும் என்ற ஆபத்து ஏற்படாதா? அந்தத் தொடர்புதானே நமது வெற்றிக்கான ஒரே உத்தரவாதம்? தனிப்பட்ட வீரச் செயல்களின் முக்கியத்துவத்தை மறுக்கும் நோக்கம் நமக்கு சிறிதும் இல்லை. ஆனால் பயங்கரவாதத்தை மிக அதிகமாகப் பயன்படுத்துவதை எதிர்த்தும், அதை முதன்மையான, அடிப்படையான போராட்ட முறையாகக் கருதுவதை எதிர்த்தும் கடுமையாக எச்சரிப்பது நம் கடமை. மேற்சொன்ன கருத்து இப்போது மிகப் பலரை ஈர்த்திருக்கிறது. பயங்கரவாதம் என்பது ராணுவ நடவடிக்கையின் முறையான அம்சமாக ஒருபொழுதும் இருக்க முடியாது. அதிகமாகச் சொல்லப் போனால், தீர்

மானமான தாக்குதலின் வழிதுறைகளில் ஒன்ருக அது பயன்படலாம். ஆனுல் தீர்மானமான தாக்குதலைத் தொடுக்கும்படி மக்களை இப்போது அழைக்க முடியுமா? ''ரபோச்சேயே தேலோ'' அப்படித்தான் நினைப்பதாகத் தோன்றுகிறது. எவ்வாருயினும், ''தாக்கும் படையில் அணிதிரளுங்கள்!'' என்று அது கூவுகிறது. ஆனுல் இவ்வாறு கூவுவது வெறும் உணர்ச்சி வேகமே தவிர விவேகமல்ல. நம் படை பலத்தின் பெரும்பகுதி, தொண்டர்களையும் எழுச்சிக்காரர்களையும் கொண்டது. நிரந்தரமான படைப் பிரிவுகள் ஒரு சிலவே நம்மிடம் உள்ளன; அவையும் திரட்டப்படவில்லை; ஒன்ருேடொன்று இணைக்கப்படவில்லை; தாக்கும் படைகள் அமைப்பது கிடக்க, இந்தப் படைகள் பொதுவில் ராணுவ வரிசையில் அணிவகுப்பதற்கான பயிற்சியைக் கூடப் பெறவில்லை. இந்தச் சூழ்நிலைகளில் நம்முடைய போராட்டத்தின் பொது நிலைமைகளைக் கூர்ந்து நோக்கவல்ல எவருக்கும், நிகழ்ச்சிகளின் வரலாற்று வளர்ச்சியில் உள்ள ஒவ்வொரு ''திருப்பத்''திலும் அந்தப் பொது நிலைமைகளைப்பற்றி விழிப்பாயிருக்க வல்ல எவருக்கும், தெளிவாயிருக்க வேண்டியது என்னவென்ருல், இந்த நேரத்தில் நமது கோஷம் ''தாக்குவதற்கு முற்படு'' என்பதாகாது; மாருக, ''பகைவனின் கோட்டையை முறையாக முற்றுகை இடு'' என்பதாதல் வேண்டும். வேறு வகையில் சொன்னுல், நம் கட்சியின் உடனடிக் கடமை, நமக்கு இப்போது உள்ள எல்லாச் சக்திகளையும் உடனே தாக்குதலுக்கு அழைப்பதல்ல; மாருக, புரட்சிகரமான ஸ்தாபனத்தை நிறுவுவதற்கு அழைப்

பதாகும். அந்த ஸ்தாபனத்திற்கு எல்லாச் சக்திகளையும் ஒன்றுசேர்க்கவும், இயக்கத்தைப் பெயரளவில் அன்றி, நடைமுறையில் நடத்தவும் ஆற்றல் இருக்க வேண்டும்; அதாவது அந்த ஸ்தாபனம் ஒவ்வொரு கண்டன நடவடிக்கையையும் திடீர் எழுச்சியையும் ஆதரிக்கவும், தீர்மானப் போருக்கு வேண்டிய ராணுவ பலத்தை அதிகப்படுத்தி வலுப்படுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்தவும் எந்த நேரத்திலும் சித்தமாயிருக்கவேண்டும்.

கோட்பாடு ரீதியில் இந்த முடிவை ஆட்சேபிக்கும் நபர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாகும். ஏனென்றால் பிப்ரவரி-மார்ச்சு நிகழ்ச்சிகள்[5] கற்பிக்கும் பாடம் மிகவும் தெளிவானது. ஆனால் இந்த நேரத்தில் நமக்கு வேண்டியிருப்பது பிரச்சினைக்குக் கோட்பாடு ரீதியில் முடிவு காண்பது அல்ல; அதற்கு நடைமுறைத் தீர்வு காண்பதேயாகும். எத்தகைய ஸ்தாபனம் தேவை, எவ்வகைப்பட்ட வேலைக்கு அது அவசியம்— இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது மட்டுமல்லாமல் அந்த ஸ்தாபனத்துக்குரிய சரிநுட்பமான திட்டத்தையும் வகுக்கவேண்டும்; அப்போதே, அந்த ஸ்தாபனத்தைக் கட்டியமைக்கும் வேலையை எல்லாத் திசைகளிலிருந்தும் தொடங்கமுடியும். இந்தப் பிரச்சினையின் அவசரத்தையும் முக்கியத்துவத்தையும் கருதி, நாம் ஒரு திட்டத்தின் சுருக்கத்தைத் தோழர்கள் முன் சமர்ப்பிக்கிறோம்; இதனை விபரமாக விளக்கும் ஒரு துண்டுப்பிரசுரம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

நம் அபிப்பிராயத்தில், ஓர் அகில ருஷ்ய அரசியல்

செய்தித்தாளே நிறுவுவதே, நம் செயலின் ஆரம்பப் புள்ளியாக, நாம் விரும்பும் ஸ்தாபனத்தைப் படைக்கும் முதல் நடைமுறை வேலையாக, இருக்கவேண்டும். இந்தச் செய்தித்தாளே, ஸ்தாபனத்தை ஒரே சீராக வளர்க்கவும், செழுமைப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அடிப்படையம்சமாகப் பயன்படும். எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு அவசியமானது ஒரு செய்தித்தாளே. அதில்லாமல் நாம் கோட்பாடுரீதியில் முரணில்லாததும் சர்வ வியாபகமானதுமான பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் முறையாக நடத்தமுடியாது. ஆனால் அத்தகைய பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் நடத்துவது பொதுவில் சோஷல்-டெமாக்ரஸியின் நிலையான பிரதானக் கடமையாக, குறிப்பாக இப்பொழுதைய அவசரக் கடமையாக, திகழ்கிறது; ஏனெனில் இப்பொழுதே மிகப் பரவலான ஜனப்பகுதிகளிடையே அரசியலிலும் சோஷலிஸம் பற்றிய பிரச்சினைகளிலும் மிக அதிக அக்கறை கிளம்பியிருக்கிறது. தனி நபர்களின் செல்வாக்கினாலும், வட்டாரத் துண்டுப் பிரசுரங்களாலும், சிறு புத்தகங்களாலும் பிறவற்றாலும் நடைபெறுகின்ற சிதறலான கிளர்ச்சியை முறையான பொதுக் கிளர்ச்சிமூலம் வலுப்படுத்தும் அவசியம் இன்று போல் என்றும் நேர்ந்ததில்லை. இந்தப் பொதுக் கிளர்ச்சியைப் பத்திரிகைகள் மூலமே முறையாக நடத்தமுடியும். இதுவே நமது ராணுவ நடவடிக்கைகளின் ஆரம்பத் துறையானாலும் மிக முக்கியமான துறையாகும். இதை நாம் எவ்வளவு உறுதியாக நிறுவியிருக்கிறோம் என்பதை, செய்தித்தாள் எவ்வளவு அடிக்கடியும் ஒழுங்

காகவும் வெளியிடப்படுகிறது (வினியோகிக்கப்படு கிறது) என்பதன் அடிப்படையிலேயே பிசகற்ற முறையில் கணித்துவிடலாம் என்ருல் அது மிகை யாகாது. மேலும், நமக்குத் தேவையான பத்திரி கை, அகில ருஷ்யப் பத்திரிகையாகவே இருக்கவேண் டும். பத்திரிகைகளின் மூலம் மக்கள்மீதும் அரசாங் கத்தின் மீதும் நமக்குள்ள செல்வாக்கை நாம் ஒன்றுபடுத்த முடியவில்லையானுல், அவ்வாறு இருக் கும் வரையில், செல்வாக்கின் அதிக சிக்கலான, சிரமமான, ஆனல் தீர்மானமான இதர வழி முறைகளை ஒன்றிணைப்பது பற்றிச் சிந்திப்பதெல்லாம் வெறுங் கற்பனையேயாகும். சித்தாந்த ரீதியிலும் நடைமுறை ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும் நம் இயக்கத்தை மிக அதிகமாகப் பாதிக்கும் குறைபாடு என்ன? சிதறியிருப்பதேயாகும்; மிகப் பெரும்பாலான சோஷல்-டெமாக்ரட்டுகள், கிட்டத் தட்ட முழுமையாக ஸ்தல வேலைகளில் முழுகிக் கிடப்பதேயாகும். இந்த வேலைகள் அவர்களின் தூரதிருஷ்டியையும், செயல்களின் அளவையும், மறைமுகமாகச் செயல்படும் திறனையும் ஆயத்த மான நிலையையும் குறுக்கிவிடுகின்றன. சிதறுண்டு கிடக்கும் இந்நிலையில்தான் முன்னே குறிக்கப்பட்ட நிலையில்லாமை, ஊசலாட்டம் ஆகியவற்றின் மிக ஆழமான வேர்களைப் பார்க்க வேண்டும். இந்தக் குறைபாட்டைக் களைந்தெறிவதில், பல்வேறு ஸ்தல இயக்கங்களை ஒரே அகில ருஷ்ய இயக்கமாக மாற்றியமைப்பதில், எடுத்துக் கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை, அகில ருஷ்யச் செய்தித்தாளைத் தொடங்குவதேயாகும்.

கடைசியாக, நமக்குத் தேவையான பத்திரிகை ஓர் **அரசியல்** செய்தித்தாளாகவே இருக்க வேண்டும். அரசியல் செய்தித்தாள் ஒன்று இல்லாமல், அரசியல் இயக்கம் என்று அழைக்கத் தகுதியுடைய இயக்கத்தைப் பற்றி இன்றைய ஐரோப்பாவில் சிந்திக்கவே முடியாது. அச்செய்தித்தாள் இல்லாமல், நமது கடமையை—அரசியல் ரீதியான அதிருப்தியும் எதிர்ப்பும் வெளிப்படுத்தும் அம்சங்கள் அனைத்தையும் ஒன்றுசேரத் திரட்டி, அவற்றைக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் இயக்கத்தைச் செழுமைப் படுத்தும் கடமையை — நாம் நிறைவேற்ற முடியவே முடியாது. நாம் முதல் நடவடிக்கையை எடுத்திருக்கிறோம்; அதாவது, தொழிலாளி வர்க்கத்திடையே, ''பொருளாதார நோக்கில்'' பாக்டரிகளில் நிகழும் அக்கிரமங்களை அம்பலப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பை எழுப்பிவிட்டிருக்கிறோம். இப்பொழுது அடுத்த நடவடிக்கையை எடுக்கவேண்டும்: அதாவது கூடுதலாகவோ குறைவாகவோ அரசியல் உணர்வு பெற்றுள்ள சகல ஜனப்பகுதிகளிடமும் ''**அரசியல் நோக்கில்**'' அக்கிரமங்களை அம்பலப்படுத்த வேண்டுமென்ற மனவெழுச்சியை உண்டாக்குவது அவசியம். தற்பொழுது, அரசியல் அக்கிரமங்களை அம்பலப்படுத்தும் குரல்கள் மெலிந்து நலிவுற்று, அரிதாகி, நடுங்கிநிற்கும் நிலையினால், நாம் மனந்தளரவே கூடாது. மக்கள் அனைவரும் போலீஸ் அடக்குமுறைக்கு முற்ற முழுக்க அடங்கிக் கிடக்கிறார்கள் என்பது இதற்குக் காரணம் இல்லை. உண்மையான காரணம் என்னவென்றால் இச்செயலில் ஈடுபடத் திறமையும் சித்த

மும் உள்ளவர்களுக்கு ஏறிப்பேச ஒரு மேடை இல்லை; பிரசங்கிகளின் பேச்சுகளை ஆவலுடன் கேட்டு அவர்களை ஊக்குவிக்கக் கூட்டத்தினர் இல்லை. தவிரவும், ''சர்வ வல்லமை வாய்ந்த'' ருஷ்ய அரசாங்கத்தின் மீது குறை சொல்வதற்கேற்ற சக்தியை மக்களிடையே எங்கும் அவர்கள் காணுவதற்கில்லை. ஆயினும் இவையெல்லாம் மின்னல் வேகத்துடன் இப்பொழுது மாறிவருகின்றன. இப்படிப்பட்ட சக்தி இருக்கத்தான் செய்கிறது. இது புரட்சிகரமான பாட்டாளி வர்க்கமாகும். அரசியல் போராட்டத்திற்குத் தன்னைக் கூவி அழைக்கும் அறை கூவலுக்குச் செவிகொடுத்து அதை ஆதரிப்பதுமட்டும் அல்லாமல், போராட்டத்தில் தைரியமாக இறங்குவதற்கும் தான் ஆயத்தமாக இருப்பதை அது ஏற்கனவே வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. நாம் இப்போது நாடெங்கும் ஜார் ஆட்சியை அம்பலப் படுத்துவதற்கான ஓர் அரங்கத்தை அமைக்கும் நிலையில் இருக்கிறோம், அத்தகைய அரங்கத்தை அமைப்பது நம் கடமையாகும். அந்த அரங்கம் சோஷல்-டெமாக்ரடிக் பத்திரிகையாக இருக்க வேண்டும். ருஷ்யத் தொழிலாளி வர்க்கம், ருஷ்ய சமுதாயத்தின் மற்ற வர்க்கங்களினின்றும் பிரிவுகளிலிருந்தும் வேறுபட்டதாய் அரசியல் அறிவைப் பெறுவதில் நிலையான அக்கறை காட்டுகிறது; அவ்வர்க்கத்திடையே சட்டவிரோதமான இலக்கியத்துக்கு எப்பொழுதும் (அதிகக் கொந்தளிப்பு ஏற்படும் காலகட்டங்களில் மட்டும் அல்ல) மிகப் பெரிய கிராக்கி உண்டு. வெகு ஜனங்களிடையே இத்தகைய பெரிய கிராக்கி ஏற்பட்டிருப்பது,

அனுபவமுள்ள புரட்சித் தலைவர்கள் தோன்றியிருப்பது, தொழிலாளி வர்க்கம் ஓர் இடத்தில் குவிந்திருப்பது — இதுதான் இவ்வர்க்கத்தைப் பெரிய நகரங்களின் தொழிலாளர் சேரிகளிலும் தொழிற்சாலை, பாக்டரிக் குடியிருப்புகளிலும் உண்மையான எஜமானனாகச் செய்கிறது — இக்காரணங்களினால் எல்லாம் ஓர் அரசியல் செய்தித்தாளைத் தொடங்குவது, பாட்டாளி வர்க்கத்திற்கு முற்றிலும் சாத்தியமான செயலாகிவிடுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வாயிலாக, அந்தப் பத்திரிகை, நகர்ப்புறக் குட்டி பூர்ஷ்வாக்கள், நாட்டுப்புறக் கைத்தொழிலாளர்கள், கிராம விவசாயிகள் ஆகியோரின் அணிகளில் ஊடுருவி, உண்மையிலேயே பொதுமக்களுக்குரிய அரசியல் செய்தித்தாளாகிவிடும்.

எனினும், செய்தித்தாள் ஆற்றவேண்டிய பங்கு, கருத்துக்களைப் பரப்புவதிலும் அரசியல் அறிவைப் புகுத்துவது, அரசியல் கூட்டாளிகளை ஈர்த்துக்கொள்வது ஆகிய நடவடிக்கைகளிலும் மட்டும் அடங்கிவிடுவதில்லை. பத்திரிகை என்பது கூட்டுத்துவப் பிரசாரகனாகவும் கூட்டுத்துவக் கிளர்ச்சிக்காரனாகவும் இருப்பதோடு கூட்டுத்துவ ஸ்தாபகனாகவும் உள்ளது. இவ்வகையில் இதனைக் கட்டிடம் கட்டும்பொழுது அதனைச் சுற்றி எழுப்பும் சாரத்திற்கு ஒப்பிடலாம்; சாரம் கட்டிடத்தின் புற வடிவத்தைக் காட்டுகிறது; தனித்தனிச் சிற்பிகளுக்கிடையே உள்ள தொடர்புக்கு வசதி ஏற்படுத்தி வேலையைப் பிரித்துக் கொடுக்கவும் ஸ்தாபன ரீதியில் அமைந்த உழைப்பினால் அடையப் பெற்ற பொதுப் பலன்களைக் கணித்தறியவும் உதவுகின்

றது. செய்தித்தாளின் உதவியாலும், தொடர்பினுலும் ஒரு நிரந்தர ஸ்தாபனம் தாளுகவே அமையத் தொடங்கும். அந்த ஸ்தாபனம் ஸ்தல வேலைகளில் மட்டும் அன்றி, முறையான பொது வேலையிலுங் கூட ஈடுபடும்; அரசியல் நிகழ்ச்சிகளைக் கவனமாகக் கண்காணிக்கவும், அவற்றின் முக்கியத்துவத்தையும் ஜனத்தொகையின் பல்வேறு பகுதியினரின்மீது அவை செலுத்தும் செல்வாக்கையும் மதிப்பிடவும், புரட்சிகரமான கட்சி இந்நிகழ்ச்சிகளை மாற்றி உருவாக்குவதற்கேற்ற வழிமுறைகளை வகுக்கவும் அது தன் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும். பத்திரிகைகளுக்கு முறையாக விஷயதானம் செய்வது பிரதிகளைச் சரியாக வினியோகிப்பது ஆகிய தொழில்துறைப் பணிமட்டுமே ஒன்றுபட்ட கட்சியின் ஸ்தல ஏஜெண்டுகளடங்கிய வலைப்பின்னலைப் படைப்பதை இன்றியமையாததாக்கிவிடும். அந்த ஏஜெண்டுகள் ஒருவரோடொருவர் நேரடியான தொடர்பு கொள்வார்கள்; பொது நிலைமைகளோடு அறிமுகமாகி இருப்பார்கள், அகில ருஷ்ய வேலையின் தனித்தனிக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றப் பழக்கம் பெறுவார்கள்; மேலும், அந்தந்தப் புரட்சி நடவடிக்கைகளை நடத்துவதன்மூலம் தங்கள் வன்மையைச் சோதித்துப் பார்ப்பார்கள். இந்த ஏஜெண்டுகளின் வலைப்பின்னல் அமைப்பே*

---

* நமது கட்சியின் ஸ்தலக் கமிட்டிகளோடு (குழுக்கள், வட்டங்கள் ஆகியவற்ருேடு) நெருங்கிய தொடர்புகொண்டு உழைத்தால்தான் இந்த ஏஜெண்டுகளுக்கு வெற்றி கிடைக்கும் என்பது தெளிவு. பொதுவில், கட்சியை ஒன்றுபடுத்துவதற்காகப் பன்முறை முயன்ற கமிட்டிகளின்—இன்றில்லாவிட்டால் நாளைக்கு, ஓர் உருவில் இல்லாவிட்டால் வேருெரு

நமக்குத் தேவையான ஸ்தாபனத்தின் அடிப்படையாக விளங்கிவிடும்; அதாவது நாடு முழுமையும் தழுவிநிற்கக்கூடிய அளவுக்குப் பெரிய ஒரு ஸ்தாபனமாகும் அது; கருரான, விவரமான வேலைப் பிரிவினை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு அது பரந்ததாயும் பல வகைப்பட்டதாயும் அமையும்; எல்லாவிதச் சூழ்நிலைகளிலும் எல்லாத் ''திருப்பங்''களிலும் எதிர்பாரா நிலைமைகளிலும் தனது சொந்த வேலையைத் தளர்ந்துகொடுக்காமல் நடத்துவதற்கு அதற்குத் தேவையான உறுதி இருக்கும்; அதிக பலம் படைத்த எதிரி, தன் அணிகளை எல்லாம் ஒரே இடத்தில் திரட்டிக்குவிக்கும்போது, அவனுடன் திறந்த வெளியில் போர் செய்வதைத் தவிர்க்கவும், ஆயினும் இந்த எதிரி எளிதில் இயங்கமுடியாததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அவன் சற்றும் எதிர்பாராத நேரத்திலும் இடத்திலும் அவனைத் தாக்குவதற்கும் போதிய அளவு திறன் அதற்கு இருக்கும். இன்று பெரிய நகரங்களின் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்ற கடமை நம்மை எதிர்நோக்கியிருக்கிறது. அது ஒப்பு நோக்கில் எளிதான கடமையாகும். நாளைக்கோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள வேலையற்றவர்களின் இயக்கத்தை ஆதரிப்பது போன்ற ஒரு கஷ்டமான கடமை நம்மை எதிர்நோக்கியிருக்கலாம். அதற்கு மறுநாள், விவசாயிகளின் எழுச்சியில்

வடிவில், அந்த ஒற்றுமையை நிச்சயமாக நிறுவவிருக்கும் அக்கமிட்டிகளின்—தீவிர ஆதரவுடன்தான், நாம் முன்வைத்திருக்கும் திட்டம் முழுவதையும் நிறைவேற்ற முடியும்.

புரட்சிகரமான பங்கைக் கொள்ளும்படி நாம் தயாராய் இருக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். இன்றைக்கு ஜெம்ஸ்த்வோவுக்கு[6] எதிரான அரசாங்க நடவடிக்கைகளினுல் உண்டான அரசியல் நெருக்கடியை நாம் சாதகப்படுத்திக்கொள்ள வேண்டும். நாளேக்கோ வெறிகொண்ட ஒரு ஜாரிஸ்ட் கொள்ளேக்கார அதிகாரிக்கு எதிரான வெகுஜனச் சீற்றத்தை ஆதரிக்க வேண்டியிருக்கும்; பகிஷ்காரம், பொதுக் கண்டனம், ஆர்ப்பாட்டங்கள் முதலியவற்றின் மூலமாக அவனே வெளிப்படையாகப் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தி அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டியிருக்கும். போருக்கு இவ்வளவு தயாராயிருக்கும் நிலேயை, ஒழுங்கான படையணிகளது நிலேயான நடவடிக்கையின் அடிப்படையில் மட்டும்தான் அடையமுடியும். பொதுவான செய்தித்தாளே நடத்தும் நோக்கத்திற்காக, நம் சக்திகளே நாம் ஒன்றுதிரட்டினுல், அந்த வேலே, அதிகத் திறமை வாய்ந்த பிரசாரகர்களுக்கு மட்டுமல்லாமல், மிகவும் தகுதியான ஸ்தாபகர்களுக்கும் கட்சியின் அதிகத் திறன் படைத்த அரசியல் தலேவர்களுக்கும் தேவையான பயிற்சியளிக்கும், அவர்களே முன்னணிக்குக் கொண்டுவரும்; அவர்கள் தக்க தருணத்தில் தீர்மானமான போருக்காக அழைப்பு விடுக்கவும் அதற்குத் தலேமை தாங்கவும் முடியும்.

இறுதியாக, சாத்தியமான தப்பெண்ணத்தைத் தவிர்ப்பதற்காகச் சில சொற்கள் கூறுவோம். முறையான திட்டமிட்ட தயாரிப்பைப் பற்றியே எப்போதும் பேசிவருகிருேம்; ஆனுல், சரியான முற்றுகை அல்லது ஸ்தாபனரீதியான தாக்குதல் மூலமே

யதேச்சாதிகாரம் வீழ்ந்து ஒழியும் என்று உட்குறிப்பாக உணர்த்துவது நம்முடைய விருப்பமல்ல. அத்தகைய கருத்து, முட்டாள்தனமாகவும் புத்தகப் புழுவுக்குரியதாகவும் இருக்கும். அதற்கு மாருக, தன்னியல்பாக வெடித்தெழும் திடீர்க் கிளர்ச்சிகளில் ஒன்றின் நிர்ப்பந்தத்தாலோ, சகல பக்கங்களிலிருந்தும் இடைவிடாமல் அச்சுறுத்தும் எதிர்பாராத அரசியல் சிக்கல்களின் நிர்ப்பந்தத்தாலோ யதேச்சாதிகாரம் தகர்ந்து ஒழியும் என்பது முற்றிலும் சாத்தியமானது; வரலாற்றுப் போக்கில் அதிக வாய்ப்புள்ளது. ஆனுல் யோசனையற்ற முரட்டுத் துணிச்சலான செயல்களில் வழுக்கி விழுவதைத் தவிர்க்க விரும்பும் எந்த அரசியல் கட்சியும், மேற்சொன்ன திடீர்க் கிளர்ச்சிகளையும் சிக்கல்களையும் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் தன் நடவடிக்கையை அமைத்துக்கொள்ளமுடியாது. நம் வழியே நாம் போகவேண்டும்; தம் முறையான வேலையில் ஒரே விடாப்பிடியாக ஈடுபடவேண்டும்; எதிர்பாராத நிகழ்ச்சிகள் மீது எவ்வளவு குறைவாக நாம் நம்பிக்கை வைக்கிருேமோ, அவ்வளவுக்கு ''வரலாற்றுத் திருப்பங்''கள் நம்மைத் திகைக்கச் செய்ய மாட்டா என்ற உறுதி அதிகமாகும்.

1901 மே மாதத்தில் எழுதியது. 1901 மே மாதத்தில், ''இஸ்க்ரா''வின் 4வது இதழில் அச்சானது

வி. இ. லெனின், நூல்கள், 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 5, பக்கங்கள் 1-12

கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்

ருஷ்யாவில் அக்டோபர் புரட்சிக்குப் பின்னர், சோஷல்-டெமாக்ரடிக் வேலைக்கு ஏற்பட்ட புதிய நிலைமைகள், கட்சி இலக்கியத்தைப் பற்றிய பிரச்சினையை முன்னணிக்குக் கொண்டுவந்திருக்கின்றன. சட்டவிரோதப் பத்திரிகைகளுக்கும் சட்டபூர்வமான பத்திரிகைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் — ருஷ்யாவின் நிலப்பிரபுத்துவ-யதேச்சாதிகார சகாப்தத்தின் வருந்தத்தக்க இந்த வழிவழி உடைமை — மறையத் தொடங்கியிருக்கிறது. அது இன்னும் மாய்ந்து விடவில்லை என்பதும், மாய்ந்துவிட்டதென்று சொல்வதற்குச் சிறிதும் ஆதார மில்லை என்பதும் உண்மை. நமது பிரதமரின் நயவஞ்சக அரசாங்கம் இன்னும் சீறித்துள்ளுகிறது. இதனால் ''இஸ்வேஸ்தியா சோவேதா ரபோச்சிஹ் தெபுதாதவ்''[7] பத்திரிகை ''சட்டவிரோதமாக'' அச்சிடப்படுகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு இழிவைக் கொண்டுவருவதைத் தவிர, நீதிநெறி ரீதியில் அது மேலும் மொத்துண்டு சிரமப்படுவதைத் தவிர, தடை செய்யும் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றைத் ''தடை

செய்ய'' முயலும் முட்டாள்தனமான முயற்சிகளால் அதற்கு எந்தப் பயனும் விளையாது.

சட்டவிரோதப் பத்திரிகைகளுக்கும் சட்ட பூர்வப் பத்திரிகைகளுக்கும் இடையே வேற்றுமை இருந்த நிலையில் கட்சிப் பத்திரிகைகள், கட்சிச் சார் பற்ற பத்திரிகைகள் ஆகியவை சம்பந்தமான பிரச் சினைக்கு மிக எளிதாகவும் மிகப் பொய்யாகவும் விகாரமான வழியிலும் தீர்வு காணப்பட்டது. சட்ட விரோதப் பத்திரிகைகள் அனைத்தும் கட்சிப் பத் திரிகைகளேயாகும். இவை, கட்சி ஸ்தாபனங்களால் அச்சிடப்பட்டு, ஏதேனும் ஒரு வகையில் நடைமுறை வேலைசெய்யும் கட்சி ஊழியர்களோடு இணைக்கப் பட்டிருந்த குழுக்களால் நடத்தப்பட்டன. சட்ட பூர்வப் பத்திரிகைகள் அனைத்தும், கட்சிச் சார்பு தடை விதிக்கப்பட்டிருந்தமையால், கட்சிச் சார் பற்றவையாக இருந்தன. இருப்பினும் அவை ஒவ் வொன்றும் ஏதாவது ஒரு கட்சியால் ''ஈர்க்கப்பட் டன''. இதனல் இயற்கைக்கு விரோதமான கூட் டுறவுகள், விதிமுறை மீறிய ''சக வாழ்வு'', போலி வேஷங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க முடியவில்லை. கட்சிக் கருத்துக்களை வெளிப்படுத்த விரும்பியவர் கள் வேறுவழியில்லாமல் கடைப்பிடித்த ஒளிவு மறைவு, கட்சிக் கருத்துக்களைத் தழுவும் தரத்துக்கு முன்னேருதவர்களின், சாராம்சத்தில் கட்சியினராக இல்லாதவர்களின், முதிர்ச்சியடையாத சிந்தனை, மனநடுக்கம் ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்தது.

அந்நாட்கள், ஈசாப் கதைகளின் சொல்முறைக் கும், இலக்கியத் தொழும்புக்கும், அடிமைப் பேச்சுக்கும், சித்தாந்தப் பண்ணையடிமை முறைக்

கும் உரிய சாபக்கேடான நாட்களே! ருஷ்யாவில் உயிர்த்துடிப்பும், புதுமையும் பெற்ற ஒவ்வொன்றையும் திக்குமுக்காடச் செய்த இக்கீழான சூழ்நிலைக்குப் பாட்டாளி வர்க்கம் முடிவுகட்டியிருக்கிறது. ஆனல் இதுவரை பாட்டாளி வர்க்கம் ருஷ்யாவுக்குப் பாதி விடுதலே மட்டுமே வென்று தந்திருக்கிறது.

புரட்சி இன்னும் முற்றுப்பெறவில்லே. ஒரு புறத்தில் ஜாராட்சி புரட்சியைத் தோற்கடிக்கும் திறனை **ஏற்கனவே** இழந்துவிட்டது; ஆனல் மறு புறத்தில், ஜாராட்சியைத் தோற்கடிக்கும் அளவு சக்தி புரட்சிக்கு **இன்னும்** இல்லே. நாம் வாழும் இக்காலத்தில் எவ்விடத்திலும் எவ்விஷயத்திலும் வெளிப்படையானதும், நேர்மையானதும், நேரானதும், முன்பின் முரணற்றதுமான கட்சியுணர்வு, மறைமுகமான, ஒளிவுமறைவான, ''குயுக்தியான'', துவளும் தன்மையுள்ள ''சட்டபூர்வ நிலே''யோடு இயற்கைக்கு மாருகச் சேர்ந்துள்ளது. இயற்கைக்கு மாருன இந்தச் சேர்க்கை, நம்முடைய செய்தித்தாளேயும் பாதிக்கிறது. ஏனெனில் மிதமான போக்குள்ள மிதவாத பூர்ஷ்வா செய்தித்தாள்களே அச்சிட மறுக்கும் சோஷல்-டெமாக்ரட்டுகளின் கொடுங்கோன்மையைப் பற்றித் திரு. குச்கோவ் பேசும் நகைச்சுவைப் பேச்சுக்கள் ஒருபுறமிருக்க, உண்மையில், ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் மத்தியப் பிரசாரக் கருவியான ''புரோலிதாரிய்''[8] போலீஸ் பேயாட்டம் நிறைந்த **யதேச்சாதிகார** ருஷ்யாவில் இன்னும் உரிமையின்றித் தடைப்பட்டு இருக்கிறது.

அது எவ்வாருயினும் இருக்கட்டும். பாதியள வே பூர்த்தியாகியுள்ள புரட்சி, உடனே எல்லாவற் றையும் புதுமுறையில் அமைக்கும் வகையில் வேலே செய்யத்தொடங்கும்படி நம் எல்லோரையும் கட் டாயப்படுத்துகிறது. இன்றைக்குச் ''சட்டத்திற்கு உட்பட்டு''ப் பதிப்பிக்கப்படும் இலக்கியம் கூட, பத்தில் ஒன்பது வீதம் கட்சி இலக்கியமாக இருக்கக் கூடும். அது கட்சி இலக்கியமாக ஆகவேண்டும். பூர்ஷ்வா வழக்கங்களுக்குப் பதிலாகவும் லாப நோக் கில், வியாபாரத் தோரணேயில் நடத்தப்பெறும் பூர்ஷ்வாப் பத்திரிகைகளுக்குப் பதிலாகவும் பூர்ஷ்வா இலக்கியத்தில் நிலவும் புகழ் வேட்டைக்கும் தனித் துவத்திற்கும் பதிலாகவும் ''பிரபுத்துவ அராஜக வாதத்''திற்குப் பதிலாகவும் லாபம் சம்பாதிக்கும் ஆசைக்குப் பதிலாகவும் சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கம் **கட்சி இலக்கியம்** என்ற கோட்பாட்டை முன்வைக்க வேண்டும்; பிறகு அந்தக் கோட்பாட் டை விருத்தி செய்து, கூடிய அளவு முழுமையாக வும் நிறைவாகவும் வாழ்க்கையில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

கட்சி இலக்கியக் கோட்பாடு என்பதுதான் என்ன? சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்திற்கு இலக்கியம் என்பது தனியார்களோ அல்லது குழுக் களோ தத்தம் செல்வத்தைப் பெருக்கிக்கொள் ளும் கருவியாக இருக்கமுடியாது என்பது மட்டு மல்ல, பாட்டாளி வர்க்கத்தின் பொது லட்சியத் துடன் தொடர்பில்லாத தனியார் முயற்சியாக அது இருக்கமுடியாது. கட்சிச் சார்பு கடந்த எழுத்தா ளர்கள் வீழ்க! இலக்கிய அதிமானுடர்கள் (supermen)

வீழ்க! இலக்கியம் பாட்டாளி வர்க்கத்தின் பொதுப்படையான குறிக்கோளின் பகுதியாக வேண்டும்; முழுத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வுபெற்ற முன்னணிப் படை முழுமையாலும் இயக்கப்பெற்றுவரும் ஒரே ஒரு மாபெரும் சோஷல்-டெமாக்ரடிக் இயந்திரத்தின் ''பல்லும் சக்கரமும்'' ஆக வேண்டும். இலக்கியம் என்பது ஸ்தாபன ரீதியானதும், திட்டமிடப்பட்டதும், ஒன்றிணைந்தது மான சோஷல்-டெமாக்ரடிக் கட்சி வேலையின் உள்ளுறுப்பாக வேண்டும்.

''ஒப்புமை அனைத்தும் ஊனமானது'' என்கிறது ஒரு ஜெர்மன் பழமொழி. இலக்கியத்தைச் சக்கரப் பல்லோடு, அதாவது, உயிருள்ள இயக்கத்தை இயந்திரத்தோடு ஒப்பிடும் என் ஒப்புமையும் ஊன மானது தான். மேலும், சித்தாந்தப் போராட்டச் சுதந்திரம், விமர்சனச் சுதந்திரம், இலக்கியப் படைப்புச் சுதந்திரம் முதலியவற்றைச் சிறுமைப் படுத்தி அழித்து ''அதிகார வர்க்க ஆணவத்திற்கு உட்படுத்தும்'' இவ்வொப்புமையைப் பற்றி உணர்ச்சிக் கொதிப்பேறிய அறிவாளிகள் ஊளையிடுவார்கள் என்பது சாத்தியம். சாராம்சத்தில் அத்தகைய கூக்குரல்கள் பூர்ஷ்வா அறிவாளிகளின் தனித்துவத்தை வெளிப்படுத்துவனவே தவிர வேறு ஒன்றுமில்லை. இலக்கியம் என்பது, இயந்திர வகைச் சமன்பாடு, ஒருநிலைத்தர நிர்ணயம், சிறுபான்மையோர் பெரும்பான்மையோருக்குக் கீழ்ப்படுதல் ஆகியவற்றுக்குச் சிறிதும் கட்டுப்பட்டதல்ல என்பது சர்ச்சைக்கு இடமில்லாத உண்மையாகும். இலக்கியக் கலையில் சுயமுயற்சி, தனிப்பட்ட விருப்பங்

கள், சிந்தனை, கற்பனை சக்தி ஆகியவற்றிற்கும் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றிற்கும் அதிகச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பது சர்ச்சைக் கிடமில்லாத உண்மையாகும். இவை யாவும் மறுக்க முடியாதவையே. ஆனால் இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? பாட்டாளி வர்க்கக் கட்சி வேலை யின் இலக்கியப் பகுதியும் பிற பகுதிகளும் ஒன்றே என ஜடத்தனமாகக் கருதக் கூடவே கூடாது என் பதைக் காட்டுகின்றன. எனினும் இவையெல்லாம் இலக்கியம் சோஷல்-டெமாக்ரடிக் கட்சி வேலையின் மற்றப் பகுதிகளோடு பிரிக்கமுடியாதபடி இணைந் திருப்பது அவசியமானதும் இன்றியமையாததும் என்ற நம் கூற்றை—பூர்ஷ்வாக்களுக்கும் பூர்ஷ் வா ஜனநாயகத்திற்கும் அயலானதும் விந்தையான துமான அந்தக் கூற்றை— தவறென்று காட்டவே யில்லை. பத்திரிகைகள், பல்வேறு கட்சி ஸ்தாபனங் களின் கருவிகளாக வேண்டும். எழுத்தாளர்கள் கட்சி ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களாக வேண் டும். பதிப்பகங்களும் கிட்டங்கிகளும், புத்தகக் கடைகளும் வாசகசாலைகளும், நூல்நிலையங்களும் பல்வேறு புத்தக வியாபார முறைகளும்—இவை யாவும் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்க வேண்டும். ஸ்தாபன ரீதியாகத் திரண்ட சோஷ லிஸ்ட் பாட்டாளி வர்க்கம் இந்த வேலை அனைத் தையும் கண்காணித்து முழுமையாகச் சரிபார்க்க வேண்டும். மேலும், இந்த வேலை அனைத்திலும், ஒன்றும் பாக்கியில்லாமல், உயிர்த்துடிப்புமிக்க பாட்டாளி வர்க்கத்தின் ஜீவசக்தி வெள்ளத்தை உட்செலுத்த வேண்டும். இவ்வாறாக, ‘‘எழுத்தா

ளன் எழுதுகிறுன், வாசகன் வாசிக்கிறுன்'' என்ற பழைய ருஷ்யக் கோட்பாட்டின் அடிப்படைகள்—பாதி அப்லோமவ்[9] முறையிலும் பாதி வணிக முறையிலும் அமைந்த அக்கோட்பாட்டின் அடிப்படைகள்—எல்லாவற்றையும் நீக்க வேண்டும்.

மிலேச்சத்தனமான தணிக்கை முறையாலும் ஐரோப்பிய பூர்ஷ்வாக்களாலும் கறைப்படுத்தப் பட்ட இலக்கியப் பணியை இந்த வகையில் உடனே உருமாற்ற முடியும் என்று நாம் கூறவில்லை. ஒரே மாதிரியான ஏற்பாடு ஒன்றை வகுக்கலாம் என்ருே, சில கட்டளைகள் மூலம் தீர்வு காணமுடியும் என்ருே வாதிக்கும் நோக்கம் நமக்குச் சிறிதும் இல்லை. வறட்டுச் சட்டகவாதம் வேறு எங்கு பொருந்தினு லும் இங்கு கொஞ்சமும் பொருந்தாது. நம் கட்சி முழுவதும் ருஷ்யாவெங்கும் அரசியல் உணர்வு பெற்ற சோஷல்-டெமாக்ரடிக் பாட்டாளி வர்க்கம் முழுமையும் இப்புதிய கடமையை அறிந்து, தெளிவாக வரையறை செய்துகொண்டு, அதற்குத் தீர்வு காணும் வேலையில் எங்குமே ஈடுபடவேண்டும். பண்ணையடிமை முறைத் தணிக்கையின் பிடிப்பிலிருந்து வெளிப்படும் நாம், பூர்ஷ்வா கடைக்கார இலக்கிய உறவுகளின் கைதிகளாக விரும்பவில்லை; அவ்வாறு ஆகவும் மாட்டோம். நாம் சுதந்திரமான பத்திரிகைகளை ஏற்படுத்த விரும்புகிருேம்; ஏற்படுத்தியே தீருவோம். இந்தப் பத்திரிகைகள் போலீஸ் அடக்குமுறையிலிருந்து விடுபட்டிருப்பதோடு மூலதனத்திலிருந்தும் பதவிவேட்டையிலிருந்தும், எல்லாவற்றுக்கும் மேலாக, பூர்ஷ்வா- அராஜகத் தனித்துவத்திலிருந்தும் விடுபட்டிருக்கும்.

இந்தக் கடைசிச் சொற்கள் முன்பின் முரணுகவோ வாசகரைக் கேலி செய்வதாகவோ தோன்றலாம். ''இது என்ன? இலக்கியப் படைப்புப் போன்ற மென்மையான, தனித்தன்மை வாய்ந்த ஒன்றின்மீது நீங்கள் கூட்டுத்துவத்தின் ஆதிக்கத்தைத் திணிக்க விரும்புகிறீர்கள்! விஞ்ஞானம், தத்துவஞானம், அழகியல் ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளைத் தொழிலாளர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முடிவுசெய்ய விரும்புகிறீர்கள்! முழுக்க முழுக்கத் தனித்தன்மை வாய்ந்த சித்தாந்தப் படைப்புக்கான பரிபூரண சுதந்திரத்தை நீங்கள் மறுக்கிறீர்கள்!'' என்று சுதந்திரத்தை ஆர்வத்துடன் நாடும் அறிவாளிகள் கூக்குரலிடலாம்.

அவர்களுக்கு இப்படித்தான் சொல்லுகிறோம்: 'கனவான்களே, அமைதியாக இருங்கள்! முதலாவதாக, நாம் கட்சி இலக்கியத்தைப்பற்றியும், அது கட்சிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருக்க வேண்டுமென்பதைப்பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவனுக்கும் தான் விரும்புவது எதையும், எவ்விதத் தடையுமில்லாமல், எழுதவோ பேசவோ உரிமையுண்டு. ஆனல் தன்னிச்சையாகச் சேர்ந்து அமைந்த ஒவ்வொரு சங்கத்துக்கும் (கட்சிக்கும் உள்பட) கட்சி விரோதக் கருத்துக்களை வெளியிடுவதற்காகக் கட்சி மேடையைப் பயன்படுத்தும் அங்கத்தினர்களை வெளியேற்றும் உரிமையும் உண்டு. பேச்சுச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பரிபூர்ணமானவையாக இருக்கவேண்டும். அதே பொழுதில் சங்கம் அமைக்கும் சுதந்திரம்கூடப் பரிபூர்ணமாகவே இருக்கவேண்டும்.

பேச்சுச் சுதந்திரம் என்ற பெயரால், இஷ்டமான படி கூப்பாடு போடவும் பொய் சொல்லவும் எழுதவும் உங்களுக்கு முழு உரிமை கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல் சங்கச் சுதந்திரம் என்ற பெயரால், ஏதேனும் ஒரு கருத்தை ஆதரிக்கும் மக்களுடன் கூட்டுச் சேரவோ, அவர்களிடமிருந்து விலகவோ எனக்கு உரிமை வழங்க நீங்களும் கடமைப்பட்டிருக்கிறீர்கள். கட்சி என்பது மக்கள் தம்மிச்சையாகச் சேர்ந்து அமைத்துக்கொண்ட ஒரு சங்கம்; அது கட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களை நீக்கித் தன் தூய்மையைக் காத்துக்கொள்ளவில்லையானல், முதலில் சித்தாந்த ரீதியிலும் அதன் பின்னர் ஸ்தாபன ரீதியிலும் அந்தக் கட்சி சிதறுண்டு போவது உறுதி. கட்சிச் சார்பு எது, கட்சி விரோதம் எது என்பதை நிர்ணயிப்பதற்குக் கட்சி வேலைத் திட்டமும் போர்த்தந்திரங்களைப் பற்றிய கட்சியின் தீர்மானங்களும் அதன் விதிகளும் பயன்படுகின்றன. கடைசியாக, சர்வதேச சோஷல்-டெமாக்ரட்டுகளின் முழு அனுபவமும் பாட்டாளி வர்க்கம் தன்னிச்சையுடன் அமைத்த சர்வதேசச் சங்கங்களின் முழு அனுபவமும் அதற்குப் பயன்படுகின்றன. பாட்டாளி வர்க்கமோ, முற்றிலும் முரணற்றவையோ, முற்றிலும் மார்க்ஸீயப் பாங்குள்ளவையோ, முற்றிலும் சரியானவையோ அல்லாத அம்சங்களையும் போக்குக்களையும் தன் கட்சிகளுக்குள் எப்போதும் சேர்த்துக்கொண்டுவந்துள்ளது. அதே சமயம், கட்சி விரோதிகளைத் தன் அணிகளிலிருந்து வெளியேற்றும் ''மாசு நீக்கப்பணி''யையும் அது எப்போதும்

முறையாகச் செய்து வந்திருக்கிறது. கட்சியின் உள்ளே, பூர்ஷ்வா ''விமர்சனச் சுதந்திரம்'' வேண்டுமென்று பேசும் கனவான்களே, நாமும் அதே வழியைத் தான் தழுவோம். இப்போது நம் கட்சி திடீரென்று வெகுஜனக் கட்சியாக ஆகிக்கொண்டிருக்கிறது. இப்போது அது பகிரங்கமாகச் செயல்படும் ஸ்தாபனமாகவும் விரைவாக மாறிக் கொண்டிருக்கிறது. (மார்க்ஸீய நோக்கில்) முரணுன கருத்துடையவர்கள் பலர் நம்முடன் சேர்வது தவிர்க்கமுடியாதது. ஒருவேளை கிறிஸ்தவ மதத்தினர் சிலர், அத்தியாத்தும் வாதிகள் சிலர்கூட, நம்மோடு சேரலாம். ஆனுல் நமக்கு நல்ல ஜீரண சக்தி உண்டு. நாம் எஃகு உறுதி வாய்ந்த மார்க்ஸீயவாதிகள். இந்த முரணுன கருத்துடையவர்களை ஜீரணித்துத் தன் மயமாக்கிக்கொள்ள நம்மால் முடியும். கட்சிகள் என்று குறிப்பிடப்பெறும், தம்மிச்சையாக அமைந்த சங்கங்களில் சேரும் சுதந்திரத்தை நாம் மறக்குமாறு செய்ய, கட்சிக்குள்ளிருக்கும் சிந்தனைச் சுதந்திரம், விமர்சனச் சுதந்திரம் ஆகியவற்ருல் ஒருபொழுதும் முடியாது.

இரண்டாவதாக, திருமிகு பூர்ஷ்வா தனித்துவ வாதிகளே, பூர்ண சுதந்திரத்தைப் பற்றிய உங்கள் பேச்சு வெறுங் கபடமே. பணத்தின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில், மக்களில் பெரும்பாலோரான உழைப்பாளர்கள் வறுமையில் தவிக்கும்போது விரல்விட்டு எண்ணக் கூடிய பணக்காரர்கள் ஒட்டுண்ணிகளாக வாழும் சமுதாயத்தில், உண்மையும் யதார்த்தமுமான ''சுதந்திரம்'' இருக்கமுடியாது. திரு எழுத்தாளர்

அவர்களே, பூர்ஷ்வாப் பதிப்பாளரோடு உங்களுக்குள்ள உறவில் நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்களா? நீங்கள் பால் உறவு பற்றிய அப்பட்டமான விவரங்களைச் சித்திரித்துச் சிங்காரம் செய்து தர வேண்டுமென்றும், ''புனித'' நாடகக் கலைக்கு ''அனுபந்த''மாக விபசார வர்ணனையை வழங்க வேண்டுமென்றும் கோரும் பூர்ஷ்வா மகாஜனங்களோடு உங்களுக்குள்ள உறவில் நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்களா? இந்தப் பூர்ண சுதந்திரம் என்பது பூர்ஷ்வாக்கள் அல்லது (அராஜகவாதத் தத்துவம் என்பது பூர்ஷ்வாத் தத்துவத்தின் உட்புற உருவமே ஆதலால்) அராஜகவாதிகளுக்குரிய வெறுந்தொடர் மொழியாகும். சமூகத்தில் வாழ்ந்து கொண்டு, சமூகத்திலிருந்து சுயேச்சையாயிருக்க யாராலும் முடியாது. பூர்ஷ்வா எழுத்தாளன், ஓவியன், நடிகை ஆகியோருடைய சுதந்திரம் என்பது பணமூட்டைகள், லஞ்ச ஊழல்கள், விபசாரம் ஆகியவற்றைச் சார்ந்திருப்பதைத் திரையிட்டு மறைப்பதாகும் (அல்லது கபடமாகத் திரையிட்டு மறைப்பதாகும்).

சோஷலிஸ்டுகளாகிய நாம், இந்தக் கபடத்தை அம்பலப்படுத்துகிறோம்; பொய் வேஷங்களை அகற்றுகிறோம். எதற்காக? வர்க்கச்சார்பற்ற இலக்கியத்திற்காகவும் கலைக்காகவும் அல்ல (அது வர்க்கப் பேதமற்ற சோஷலிஸ்ட் சமுதாயத்தில்தான் சாத்தியம்). மாறாக, போலியான சுதந்திரமுள்ளது போன்று பகட்டுவதும் உண்மையில் முதலாளித்துவத் தளையில் கட்டுண்டிருப்பதுமான இலக்கியத்துக்கு எதிராக, உண்மையில் சுதந்திரமுள்ளதும் பாட்

டாளி வர்க்கத்துடன் வெளிப்படையாக இணைந்திருப்பதுமான இலக்கியத்தை உருவாக்கவே நாம் இந்தக் கபடத்தை அம்பலப்படுத்துகிறோம்.

இது சுதந்திர இலக்கியமாகும். ஏனெனில், இதனுடைய அணிகளுக்குப் புதிய புதிய சக்திகளைக் கொண்டுவருபவை சோஷலிஸத் தத்துவமும் உழைப்பாளி மக்கள்மீது உள்ள அனுதாபமுமே—பேராசையும் பதவி வேட்டையும் அல்ல. இது சுதந்திர இலக்கியமாகும். ஏனெனில் இது இன்ப நுகர்ச்சியில் தெவிட்டி நிற்கும் ஒரு சீமாட்டிக்கோ, சலிப்புற்றிருக்கும் கொழுத்த ''மேல்தட்டுப் பதினயிரம் மக்க''ளுக்கோ அல்ல, மாருக, நாட்டின் சிறந்த பகுதியும் அதன் பலமும் அதன் எதிர்காலமும் ஆகிய கோடிக்கணக்கான உழைப்பாளிகளுக்குச் சேவை புரியும். சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் அனுபவத்தையும் உயிர்த்தியங்கும் வேலையையும் கொண்டு மனிதகுலத்தின் புரட்சிகரமான சிந்தனையின் கடைசிச் சாதனைகளை வளப்படுத்தும் சுதந்திர இலக்கியமாக இது அமையும். கடந்தகால அனுபவத்திற்கும் (சோஷலிஸத்தின் முதிராத, கற்பனவாத வடிவங்களுடன் தொடங்கிவிட்ட வளர்ச்சியின் முழுநிறைவாக விளங்கும் விஞ்ஞான சோஷலிஸம்) தற்கால அனுபவத்திற்கும் (தொழிலாளத் தோழர்களின் தற்காலப் போராட்டம்) இடையே நிரந்தரமான செயல் தொடர்பை நிறுவித் தரும் சுதந்திர இலக்கியமாக இது அமையும்.

எனவே, வேலையில் இறங்குவோம், தோழர்களே! சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் இயக்கத்

தோடு பிரிக்கமுடியாதபடி இணைந்து பரந்ததும் பலவகைப்பட்டதும் பல் உருவம் கொண்டதுமான இலக்கியத்தைப் படைக்கவேண்டும் என்ற கடமை—புதிய, கடினமான, ஆனால் மகத்தான அருங்கடமை—நம்மை எதிர்நோக்கியிருக்கிறது. சோஷல்-டெமாக்ரடிக் இலக்கியம் முழுக்கவும் கட்சி இலக்கியமாக வேண்டும். ஒவ்வொரு செய்தித்தாளும், சஞ்சிகையும், பதிப்பகமும், பிறவும், தத்தம் வேலையை உடனடியாகத் திருத்தி அமைத்துக்கொள்ளும் பணியை மேற்கொள்ள வேண்டும்; அவை அனைத்தும் ஏதாவது ஒரு வடிவத்தில் அந்தந்தக் கட்சி ஸ்தாபனங்களில் சேரவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்துவது அவசியம். அப்பொழுதுதான் ''சோஷல்-டெமாக்ரடிக்'' இலக்கியம் உண்மையில் அந்தப் பெயருக்குத் தகுதியாயிருக்கும்; அப்பொழுதுதான் அது தன் கடமையை நிறைவேற்ற முடியும்; அப்பொழுதுதான் அது முதலாளித்துவ சமுதாயத்தின் எல்லைகளுக்குள்ளேயே, முதலாளித்துவ அடிமைத்தனத்துடன் தொடர்பை முறித்துக் கொண்டு, உண்மையில் முற்போக்கானதும், முரணில்லாத புரட்சித்தன்மை வாய்ந்ததுமான வர்க்கத்தின் இயக்கத்தோடு கலந்து ஒன்றாகமுடியும்.

''நோவயா ஷிஸ்ன்'', எண் 12, நவம்பர் 13, 1905.
கையெழுத்து: **என். லெனின்**

வி. இ. லெனின், நூல்கள் 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 10, பக்கங்கள் 26-31

தொழிலாளர்களும் "பிராவ்தா"வும்[10]

''பிராவ்தா'' ஏற்கனவே தனது அரை ஆண்டு வேலையின் சில விளைவுகளைச் சுருக்கமாகத் தொகுத்துரைத்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லாவற்றிற்கும் தலைமையாக, இந்த விளைவுகள் எதனைப் புலப்படுத்துகின்றன? தொழிலாளர்கள் தாமே மேற்கொண்ட முயற்சிகளால் **தான்** அவர்களுடைய ஊக்கம், மனவுறுதி, போராட்டத்தில் விடாப்பிடியாயிருக்கும் தன்மை ஆகியவற்றின் மாபெரும் எழுச்சியினுல் **தான்**, ஏப்ரல்-மே இயக்கத்திற்குப் பிறகு **தான்**, பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களின் செய்தித்தாளாகிய ''பிராவ்தா'' வெளிவர முடிந்தது என்பதைப் புலப்படுத்துகின்றன.

விளைவுகளைப் பற்றிய ''பிராவ்தா''வின் தொகுத்துரை, முதலாவதாக, தொழிலாளர்களின் குழுக்கள் தினசரிச் செய்தித்தாளுக்குக் கொடுத்துள்ள நன்கொடைகளைப்பற்றிய புள்ளிவிவரங்களைத் தெரிவிப்பதோடு நிறுத்திக்கொள்கிறது. தொழிலாளர் ஆதரவின் ஒரு **சிறு பகுதியை** மட்டுமே அப்புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இன்னும் அதிகமாக மதிக்கத்தக்கதும் அதிகக் கஷ்டம் வாய்ந்ததுமான நேரடியான ஆதரவை—மானசீக ஆதரவு, செய்தித்தாளை வெளியிடுவதில் நேரடியாகப் பங்கு கொள்வது, பத்திரிகையின் கொள்கையை ஏற்றுக்கொண்டும், அதற்கு விஷயதானம் செய்தும், அதன் உள்ளடக்கத்தை விவாதித்தும், அதன் பிரதிகளை வினியோகித்தும், பிறவகைகளிலும் அவர்கள் அளித்த ஆதரவை — அத்தொகுத்துரை நமக்குத் தெரிவிக்கவில்லை.

ஆனால் ''பிராவ்தா''வின் கைவசம் உள்ள குறைவான விபரங்கள்கூட, மிகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ள தொழிலாளர் குழுக்கள் அதனோடு **நேரடியாக** இணைந்து செயல்படுவதைக் காட்டிவிட்டன. விளைவுகளைப் பொதுவில் நோக்குவோமாக:

''பிராவ்தா''விற்கு நன்கொடைகள் தந்த
தொழிலாளர் குழுக்களின் எண்ணிக்கை

1912	..ஜனவரிக்காக	14
1912	..பிப்ரவரிக்காக	18
1912	..மார்ச்சுக்காக	76
1912	..ஏப்ரலுக்காக	227
1912	..மே மாதத்திற்காக	135
1912	..ஜூனுக்காக	34
1912	..ஜூலைக்காக	26
1912	..ஆகஸ்ட்டிற்காக (19ம் தேதிவரை)	21
	மொத்தம்	551

ஆக, **ஐந்நூற்று ஐம்பத்தொரு** தொழிலாளர் குழுக்கள் மொத்தமாக நன்கொடையளித்துப் ''பிராவ்தா''வை ஆதரித்தன.

தொழிலாளர்களின் வேறு பல பணவசூல்கள், நன்கொடைகள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை அணுகி ஆராய்வது சுவையானதாயிருக்கும். பல்வேறு வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவாகக் கிடைத்த நன்கொடைகளின் பட்டியல்களை நாம் எப்போதும் ''பிராவ்தா''வில் கண்டோம். ''அடக்கு முறைக்குப் பலியானவர்களுக்காகவும், லேனு தங்கச் சுரங்கத்தில் பலியானவர்களுக்காகவும்[11], சில ''பிராவ்தா'' ஆசிரியர்களுக்காகவும் திரட்டப்பட்ட நிதிகளுக்குத் தரப்பட்ட தொகைகளின் பட்டியல்களையும், தேர்தல் நிதிகளுக்கும், பஞ்ச நிவாரண நிதிகளுக்கும், மற்ற பிறவற்றிற்கும் கொடுக்கப்பட்ட தொகைகளின் பட்டியல்களையும் பார்த்தோம்.

இந்த வசூல்கள் எல்லாம் பலவகைப்பட்ட தன்மை வாய்ந்தவை. அதனால் இங்கு விளைவுகளை ஆராய்வது அதிகக் கஷ்டமாகும். புள்ளிவிபரங்கள், உண்மை நிலவரத்தைத் திருப்தியான முறையில் சித்திரிக்கும் என்று சொல்லக்கூடிய நிலையில் நாம் இல்லை. அது எவ்வாறாயினும் இந்தப் பல்வேறு வசூல்கள் **தொழிலாளர் வாழ்வின்** முக்கிய அம்சமாக விளங்குவது கண்கூடு.

தொழிலாளர் வசூல்களைப் பற்றிய குறிப்புகளை, ருஷ்யாவின் சகல பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களிடமிருந்தும் அலுவலக ஊழியர்களிடமிருந்தும் பெற்ற கடிதங்களுடன் **சேர்த்துப்** பார்க்கும் போது, ருஷ்யாவின் கஷ்டமான வெளி நிலைமைகளால் அநேகமாகச் சிதறுண்டிருக்கும் ''பிராவ்தா'' வாசகர்களுக்கு அந்தந்தத் தொழி

லேச் செய்யும் பாட்டாளிகள், அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த பாட்டாளிகள் எப்படிப் போராடிக் கொண்டிருக்கிருர்கள், அவர்கள் தொழிலாளர் ஜனநாயகத்தின் நலன்களே எப்படிக் காக்க முன் வருகிருர்கள் என்பது ஓரளவுக்கு மனதில் பதியும்.

தொழிலாளர் வாழ்க்கையைப் பற்றிய செய்திக் கோவை வெளியிடுவது இப்போதுதான் ''பிராவ்தா''வில் உருப்பெற்று, வளரத் தொடங்கியிருக்கிறது. வருங்காலத்தில், பாக்டரிகளில் இழைக்கப்படும் கொடுமைகளேப் பற்றியும் புதிய பாட்டாளி வர்க்கப் பகுதியின் விழிப்பைப் பற்றியும் தொழிலாளர் இயக்கத்தின் அந்தந்தத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட வசூல்களேப் பற்றியும் எழுதப்பெறும் கடிதங்களோடுகூடத் தொழிலாளிகளின் செய்தித் தாளுக்கு வேறு அறிக்கைகளும் அனுப்பி வைக்கப் பெறும் என்பதில் ஐயமில்லே. அவ்வறிக்கைகள், தொழிலாளர்களின் கருத்துக்களேயும் மனோபாவங்களேயும் பற்றியும், தேர்தல் நடவடிக்கைகள் பற்றியும், தொழிலாளர் பிரதிநிதிகளின் தேர்தல்களேப் பற்றியும், தொழிலாளர்கள் எதைப் படிக்கிருர்கள் என்பதைப் பற்றியும், அவர்களுக்கு விசேஷ அக்கறையூட்டும் பிரச்சினேகள் எவை என்பதைப் பற்றியும், இவை போன்ற விஷயங்களேப் பற்றியும் தகவல் தரும்.

தொழிலாளர்களின் செய்தித்தாள், அவர்களின் பேச்சரங்கம் ஆகும். இதன் மூலம் பொதுவாகத் தொழிலாளி வர்க்க வாழ்க்கையின் பிரச்சினேகளேயும், குறிப்பாகத் தொழிலாளி வர்க்க ஜனநாயகத்தின் பிரச்சினேகளேயும், ஒன்றன் பின் ஒன்ருக

ருஷ்யா அனைத்தின் முன் வைக்கவேண்டும். பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் தொடங்கி வைத்துவிட்டார்கள். கஷ்டம் நிறைந்த, சலிப்பூட்டும் பல நீண்ட ஆண்டுகளுக்குப்பிறகு தொழிலாளிகளின் முதல் தினசரிச் செய்தித்தாள் தோன்றியதற்கு, ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களின் முயற்சிகளுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. எனவே, தலைநகரத்திலுள்ள தொழிலாளர் செய்தித்தாளை மனப்பூர்வமாக ஆதரித்தும் வளர்த்தும் தொழிலாளர் லட்சியத்திற்கு ஆக்கம் தேடுவோமாக. இந்தச் செய்தித்தாள், தொழிலாளர் செய்தித்தாள்களோடு கூடிய தொழிலாளர் ஸ்தாபனங்களின் வலைப்பின்னல் ருஷ்யா முழுமையும் பரவிப்படர்ந்த வசந்தகாலத்தின் முன்னோடியாக விளங்குகிறது.

இவ்வகை ருஷ்யாவைக் கட்டியமைக்கும் செயல், தொழிலாளர்களாகிய நம்மை எதிர்நோக்குகிறது. **இவ்வகை** ருஷ்யாவை நாம் நிச்சயமாகப் **படைப்போம்.**

''பிராவ்தா'', எண் 103, ஆகஸ்டு 29, 1912. கையெழுத்து: எஸ். டி.

வி.இ. லெனின், நூல்கள், 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 18, பக்கங்கள் 274-275

ருஷ்யத் தொழிலாளர் பத்திரிகைகளின் சென்ற கால வரலாற்றிலிருந்து

ருஷ்யாவில் தொழிலாளர் பத்திரிகைகளின் வரலாறு, ஜனநாயக, சோஷலிஸ்ட் இயக்கங்களின் வரலாற்ருேடு பிரிக்கமுடியாமல் பிணைந்துள்ளது. எனவே விடுதலை இயக்கத்தின் முக்கியமான கட்டங்களை அறிந்துகொண்டால்தான், தொழிலாளர் பத்திரிகைகளின் முன்னேற்பாடும் தோற்றமும் வேறு எந்த வழியிலும் செல்லாமல், இந்த வழியில் ஏன் சென்றன என்பதை உண்மையாகப் புரிந்து கொள்ளமுடியும்.

ருஷ்ய விடுதலை இயக்கத்தின்மீது தன் முத்திரையைப் பதித்திருந்த ருஷ்ய சமுதாயத்தின் மூன்று முக்கியமான வர்க்கங்களுக்கு ஏற்ப, அந்த விடுதலை இயக்கம் மூன்று முக்கியமான கட்டங்களைக் கடந்தது. அவையாவன: 1.பிரபுக்கள் காலம், சுமாராக 1825 முதல் 1861 வரை; 2. 'ரஸ்னேசினெட்ஸ்' அல்லது பூர்ஷ்வா - ஜனநாயகக் காலம், ஏறக்குறைய 1861 முதல் 1895 வரை; 3. பாட்டாளி வர்க்கக் காலம், 1895 முதல் இன்று வரை.

பிரபுக்கள் காலத்தில் தலைசிறந்து விளங்கிய

வர்கள் டிசெம்பரிஸ்டுகளும்[12] கெர்ட்ஸனுமேயா வர். அந்தக் காலத்தில், பண்ணையடிமை முறை யில், எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டும் மிகவும் ''தாழ்த்தப்பட்டும்'' ''இழிவுபடுத்தப்பட்டும்'' இருந்த எஸ்டேட்டிலிருந்து, அதாவது பெருந்திரளான பண்ணையடிமைகளின் எஸ்டேட்டிலிருந்து தொழி லாளி வர்க்கம் என்று ஒன்றைப் பிரித்துப் பேசு வதற்கே வழியில்லை. அந்தக் காலத்தில் கெர்ட்ஸ னுடைய ''கோலகல்''[13] பத்திரிகையின் தலைமையில் இருந்த பொதுப்படையான ஜனநாயகத் தன்மை வாய்ந்த சட்டவிரோதப் பத்திரிகைகளே, தொழி லாளர்களின் (பாட்டாளி வர்க்க-ஜனநாயக அல்லது சோஷல்-டெமாக்ரடிக்) பத்திரிகைகளின் முன் னோடியாக இருந்தன.

டிசெம்பரிஸ்டுகள், கெர்ட்ஸனுக்கு எழுச்சி ஊட்டியது போல, கெர்ட்ஸனும், அவருடைய ''கோலக''லும், ரஸ்னோசினெட்ஸுகளுக்கு எழுச்சி பெற உதவினர். ரஸ்னோசினெட்ஸுகள் யார் என் றால் மிதவாத, ஜனநாயக பூர்ஷ்வாக்களின் படிப் புள்ள பிரதிநிதிகளாவர். இவர்கள் பிரபுக்களின் வர்க்கத்தினர் அல்ல. அரசாங்க உத்தியோகஸ்தர் கள் அணிகளிலிருந்தும் கீழ் நடுத்தர வர்க்கத்தி லிருந்தும் வியாபாரிகளிடையிருந்தும் விவசாயிகள் மத்தியிலிருந்தும் வந்தவர்கள். நமது விடுதலை இயக் கத்திலிருந்து ரஸ்னோசினெட்ஸுகளால் பிரபுக்கள் முற்றிலும் நீக்கப்படுவார்கள் என்பதை, பண்ணை யடிமை முறை ஒழிக்கப்படுவதற்கு முன்பே ஊகித் துணர்ந்து குறிப்பிட்டவர் வி.கி. பெலீன்ஸ்கிய் தான். கோகலுக்கு எழுதிய பிரபல கடிதம், பெலீன்ஸ்

கியின் இலக்கியத் தொண்டின் பயன்களைத் தொகுத்துரைக்கும் அக்கடிதம், சட்டவிரோத ஜனநாயகப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் மிகச் சிறந்த ஒன்ருகும். அது இன்றும் கூட உயிர்த் துடிப்புடனும் மாபெரும் முக்கியத்துவத்துடனும் விளங்குகிறது.

பண்ணையடிமை முறையின் அழிவு, பொதுவாக விடுதலை இயக்கத்திலும், குறிப்பாகச் சட்ட விரோத ஜனநாயகப் பத்திரிகை உலகிலும், ரஸ்னேசினெட்ஸுகள் பிரதானமாக வெகுஜனப் பாத்திரம் வகிப்பதற்கு வழிசெய்தது. நரோதிஸம்[14], ரஸ்னேசினெட்ஸுகளின் கருத்தோட்டத்தோடு ஒத்திருந்த தலைமையான போக்காக ஆயிற்று. பொது வாழ்வின் ஒரு போக்கு என்ற முறையில், வலது சாரியில் மிதவாதத்திலிருந்தோ, இடது சாரியில் அராஜகவாதத்திலிருந்தோ விலகிச்செல்வதில் நரோதிஸம் ஒருகாலும் வெற்றி பெற்றதில்லை. ஆனால் கெர்ட்ஸனுக்குப் பிறகு, நரோதிஸக் கொள்கையை வளப்படுத்திய செர்னிஷேவ்ஸ்கிய் கெர்ட்ஸனேடு ஒப்பிட்டுப்பார்த்தால், மிகப் பெரிய முன்னேற்றத்தை உண்டாக்கினர். செர்னிஷேவ்ஸ்கிய் கெர்ட்ஸனைக்காட்டிலும் எவ்வளவோ அதிகமாக ஒத்தியைந்த, போரார்வமுள்ள ஜனநாயகவாதியாக இருந்தார். அவர் எழுத்துக்களில் வர்க்கப் போராட்ட உணர்வு துடிக்கிறது. அவர் மிதவாதிகளின் வஞ்சகத்தை அம்பலப்படுத்தும் போக்கை உறுதியாகப் பின்பற்றினர். அப்போக்கு இன்றுவரை காடெட்டுகளாலும், லிக்விடேட்டர்களாலும்[15] வெறுக்கப்பட்டு வருகிறது.

அவர் கற்பனுவாத சோஷலிஸத்தைத் தழுவியவர் என்ருலும், முதலாளித்துவத்தை வியக்கத்தக்க ஆழமான முறையில் விமர்சிப்பவராக விளங்கினுர்.

*1860*க்கும் *1880*க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் சட்டவிரோத வெளியீடுகள் பல தோன்றின. போரூக்கமுள்ள ஜனநாயகத் தன்மையும் கற்பனுவாத சோஷலிஸப்போக்கும் உடைய அவை அப்போதே ''வெகுஜனங்கள்'' மத்தியில் பரவத் தொடங்கின. அக்காலத்தியப் பிரமுகர்களில் பியோத்தர் அலெக்ஸேயெவ், ஸ்தெபான் ஹல்தூரின் என்ற தொழிலாளிகளும் மற்றவர்களும் முக்கியமானவர்கள். ஆனுல் பாட்டாளி வர்க்க-ஜனநாயகக் கருத்தோட்டம், நரோதிஸத்தின் பொதுப் போக்கிலிருந்து முறித்துக்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறு முறித்துக்கொள்வதில், ருஷ்ய மார்க்ஸீயப் போக்கு (*1883*ல் தோன்றிய ''உழைப்பு விமோசனக்'' குழு[16]) சித்தாந்த வடிவைப் பெற்றபிறகுதான், சோஷல்-டெமாக்ரட்டுகளோடு இணைந்து பிணைந்த உறுதியான தொழிலாளர் இயக்கம் தோன்றிய பிறகுதான் (*1895-1896*ல் நடந்த பீட்டர்ஸ்பர்க் வேலைநிறுத்தங்கள்) அது வெற்றியடைந்தது.

ஆயினும் ருஷ்யாவில் தொழிலாளரின் பத்திரிகைகள் உண்மையிலேயே தோன்றிய காலகட்டத்தைப் பரிசீலிக்குமுன், வரலாற்றின் மேற்குறிப்பிட்ட மூன்று காலப்பகுதிகளின் இயக்கங்களிடையே உள்ள **வர்க்க** வேறுபாடுகளைத் தத்ரூபமாகக் காட்டும் புள்ளிவிபரங்களைத் தருவோம். இராஜ்ஜிய (அரசியல்) குற்றம் சாட்டப்பட்டவர்களின் எஸ்டேட் அல்லது தொழில் வாரியாக (வர்க்கரீதி

யாக) பிரித்துக்காட்டும் புள்ளிவிபாரங்கள் இவை. அரசியல் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு நூறு பேரிலும்:

	பிரபுக்கள்	சிறுமத்தியதர வகுப்பினரும் விவசாயிகளும்	விவசாயிகள்	தொழிலாளர்கள்	அறிவுஜீவிகள்
1827-1846ல் . .	76	23	?	?	?
1884-1890ல் . .	30.6	46.6	7.1	15.1	73.2
1901-1903ல் . .	10.7	80.9	9.0	46.1	36.7
1905-1908ல் . .	9.1	87.7	24.2	47.4	28.4

பிரபுக்கள் காலத்தில், பண்ணையடிமை முறைக் காலத்தில், (1827-1846) நிலப்பிரபுக்கள், மக்கள் தொகையின் மிகச்சிறு பிரிவினராயிருந்தும், 'அரசியல் குற்றவாளி' களில் மிகப் பெரும்பான்மையோராக (76%) இருந்தனர். நரோத்னிக்குகள் ரஸ்னேசி னெட்ஸுகள் காலத்தில் (1884-1890; 1860க்கும் 1880க்கும் இடைப்பட்ட ஆண்டுகளுக்கும் துரதிர்ஷ்டவசமாகப் புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை) பிரபுக்கள் இரண்டாந்தரமான நிலையை அடைந்தாலும், கணிசமான சதவிகிதமாகவே (30.6%) இருந்தனர். ஜனநாயக இயக்கத்தில் ஈடுபட்டவர்களில் அறிவுஜீவிகள் மிகப் பெரும்பான்மையினராக (73.2%) இருந்தனர்.

1901-1903 காலகட்டத்தில், அதாவது முதலாவது மார்க்ஸீய அரசியல் செய்தித்தாளான பழைய ''இஸ்க்ரா''வின் காலகட்டத்தில், தொழிலாளர்

கள் (46.1%) அறிவுஜீவிகளை (36.7%) காட்டிலும் **அதிகமாகி மேம்படுவதுடன்**, இயக்கம் முழுவதும் ஜனநாயகமயமாகிறது (பிரபுக்கள் 10.7%; ''சலுகையுரிமையற்றவர்கள்'' 80.9%).

முன்னேக்கி விரைந்தால், முதல் வெகுஜன இயக்கக் காலகட்டத்தில் (1905-1908) ஒரே மாறுபாடு தான் தெரிகின்றது: அறிவுஜீவிகளின் பங்குவிகிதம் குறைந்து (36.7%-லிருந்து 28.4%-க்கு) விவசாயிகளின் பங்குவிகிதம் (9.0%-லிருந்து 24.2%-க்கு) அதிகமாயிற்று.

1883ல் வெளிநாட்டில் ஏற்பட்ட ''உழைப்பு விமோசனக்'' குழு ருஷ்யாவில் சோஷல்-டெமாக்ரஸியை ஸ்தாபித்ததாகும். இக்குழுவின் இலக்கிய வெளியீடுகள் வெளிநாட்டில் தணிக்கை செய்யப்படாமல் அச்சடிக்கப்பட்டன. அவையே, முதன் முதலாக மார்க்ஸீயக் கருத்துக்களையும் முறையாக வரையறுத்தன; அவற்றிலிருந்து ஏற்படும் நடைமுறை முடிவுகள் அனைத்தையும் வகுத்துக் கொண்டன. தொழிலாளர் இயக்கம், அதன் கடமைகள் ஆகியவற்றின் சாரத்தை, மார்க்ஸீயக் கருத்துக்கள் மட்டுமே வெளிப்படுத்துகின்றன என்பதை உலகம் முழுவதின் அனுபவம் காட்டுகின்றது. பன்னிரண்டு ஆண்டுக் காலத்தில், 1883முதல் 1895 வரையில், ருஷ்யாவில் சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் பத்திரிகையை நிறுவுவதற்கு அநேகமாக ஒரே ஒரு முயற்சி செய்யப்பட்டது. அது தான் 1885ல் பீட்டர்ஸ்பர்க்கில் ''ரபோச்சிய்'' என்ற சோஷல்-டெமாக்ரடிக் செய்தித்தாள் வெளியிடப்பெற்றதாகும். அது சட்டவிரோதப் பத்தி

ரிகை என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஆனு லும் இரண்டு இதழ்கள்தான் வெளிவந்தன. வெகு ஜனத் தொழிலாளி வர்க்க இயக்கம் இல்லாததால், தொழிலாளர் பத்திரிகைகள் பரவலாக வளர முடி யாமற்போயிற்று.

1895-1896லிருந்து, அதாவது புகழ்பெற்ற பீட்டர்ஸ்பர்க் வேலைநிறுத்தங்களின் காலத்திலிருந்து சோஷல்-டெமாக்ரட்டுகளின் பங்கீட்டுடன் வெகு ஜனத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆரம்பமா யிற்று. அப்பொழுதுதான் உண்மையிலேயே தொழி லாளர் பத்திரிகைகள் ருஷ்யாவில் தோன்றின என்று சொல்லலாம். அந்நாட்களின் முக்கிய வெளியீடுகள், பெரும்பாலும் சட்டவிரோதமான துண்டுப் பிரசுரங் களாகும். அவற்றில் மிகப்பெரும்பான்மையானவை ''பொருளாதார''க் கிளர்ச்சியை (வேறு வகைக் கிளர்ச்சியையும்) பற்றியவை: அவை பல்வேறு பாக் டரிகளிலும் தொழில் துறைகளிலும் வேலை செய் யும் தொழிலாளர்களின் தேவைகளையும் கோரிக் கைகளையும் எடுத்துப் பேசின. இந்தப் பிரசுரங் களைத் தயாரிப்பதிலும் வினியோகிப்பதிலும் முற் போக்கான தொழிலாளர்கள் மிகத் தீவிரமான பங்குகொண்டிராவிட்டால், அவை நிலவியிருக்க முடியாதென்பது தெளிவு. அக்காலத்தில் செயலில் ஈடுபட்ட பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களில், வசீ லிய் அந்திரேயெவிச் ஷெல்குனேவ், இவான் வசீலியெ விச் பாபுஷ்கின் இருவரது பெயர்களையும் குறிப்பிட லாம்; முதலவர் பின்னர் கண்பார்வையிழந்ததால் பழைய ஊக்கத்துடன் செயல்படமுடியவில்லை. இவான் வசீலியெவிச் பாபுஷ்கின், ஆர்வமுள்ள

''இஸ்க்ராவாதி'' (1900-1903) ஆகவும் ''போல் ஷெவிக்'' (1903-1905) ஆகவும் இருந்தார். 1905ம் ஆண்டின் முடிவிலோ, 1906ம் ஆண்டின் தொடக்கத்திலோ சைபீரியாவில் மூண்ட புரட்சிகர எழுச்சியில் பங்குகொண்டதற்காகச் சுடப்பட்டார்.

பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்ட சோஷல்-டெமாக்ரடிக் குழுக்கள், வட்டங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவை பெரும்பாலும் ''தொழிலாளி வர்க்க விமோசனப் போராட்டச் சங்கங்கள்'' என்று 1895 ஆண்டின் முடிவிலிருந்து பெயர் பெற்றன. 1898ல், ஸ்தல சோஷல்-டெமாக்ரடிக் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளது பேரவைக்கூட்டத்தில், ''ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர்கட்சி'' ஸ்தாபிக்கப்பட்டது.

துண்டுப் பிரசுரங்களைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்கத்தின் சட்டவிரோதச் செய்தித்தாள்கள் தோன்றின: எடுத்துக்காட்டாக, 1897ல் பீட்டர்ஸ்பர்க்கில் தோன்றிய ''எஸ்.பி.பி. ரபோச்சிய் லிஸ்தோக்'',[17] ''ரபோச்சயா மிஸில்'' ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ''ரபோச்சயா மிஸில்'' விரைவில் வெளிநாட்டுக்கு மாற்றப்பட்டது. அக்காலத்திலிருந்து, புரட்சித் தொடக்கம் வரையில் சோஷல்-டெமாக்ரடிக் ஸ்தலச் செய்தித்தாள்கள் அநேகமாக இடைவிடாமல் சட்டவிரோதமாக வெளிவந்து கொண்டிருந்தன; அவை மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்கு உட்பட்டன என்பது உண்மை; ஆனாலும் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலும் அவை திரும்பத் திரும்ப வெளிவந்தன.

மொத்தத்தில், இருபதாண்டுகளுக்கு முந்தைய

அக்காலத்துத் தொழிலாளர் தாள்களும் சோஷல்-டெமாக்ரடிக் செய்தித்தாள்களும் தற்போதைய தொழிலாளர் பத்திரிகைகளின் உடனடியான, நேரடியான முன்னோடிகளாக திகழ்ந்தன. இன்றுபோல் அன்றும் பாக்டரிக் கொடுமைகள் ''அம்பலப்படுத்தப்பட்டன'';''பொருளாதார''ப்போராட்டத்தைப் பற்றிய செய்திக் கோவைகள் வெளிவந்தன; மார்க்ஸீயம், முரணற்ற ஜனநாயகத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நோக்கங்கள் கோட்பாடு ரீதியில் வகுக்கப்பெற்றன; முடிவில் **அதே இரண்டு அடிப்படைப் போக்குகள்** — மார்க்ஸீயப் போக்கு, சந்தர்ப்பவாதப் போக்கு ஆகிய இரண்டும் — இன்றுபோல் அன்றும் வெளிப்பட்டன.

இதுவரை உரிய முறையில் பெரும்பாலும் மதிப்பீடு செய்யப்படாவிடினும், குறிப்பிடத்தக்க உண்மை என்னவென்றால், தொழிலாளி வர்க்க **வெகுஜன** இயக்கம் ருஷ்யாவில் தொடங்கிய உடனேயே (1895-1896) மார்க்ஸீயப் போக்கு என்றும் சந்தர்ப்பவாதப் போக்கு என்றும் பிரிவு தோன்றியது. வடிவம், தோற்றம் முதலியவற்றில் மாறிய போதிலும், அப்பிரிவு சாராம்சத்தில் 1894ல் இருந்தது போலவே, 1914லும் இருக்கிறது. இதிலிருந்து தெளிவாகத் தெரிவதென்ன? சோஷல்-டெமாக்ரட்டுகளிடையே மற்றொரு வகையில் அல்லாமல் இவ்வகையிலேயே பிரிவினையும் உட்போராட்டமும் ஏற்படுவதற்கு முக்கியமான சமுதாய, வர்க்கக் காரணங்கள் உள்ளன என்பதாகும்.

மேலே குறித்த ''ரபோச்சயா மிஸில்'', ''பொரு

4—562

ளாதாரவாதம்'' என்று குறிப்பிடப்பெறும் அக்காலத்திய சந்தர்ப்பவாதப் போக்கைப் பிரதிபலித்தது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஸ்தல பிரமுகர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதங்களில் இந்தப் போக்கு 1894-1895லேயே வெளிப்படையாகப் புலனுயிற்று. வெளிநாட்டிலோ, ருஷ்யத் தொழிலாளர்கள் விழிப்படைந்ததன் விளைவாக 1896 லிருந்தே சோஷல்-டெமாக்ரடிக் இலக்கியம் மிக அதிகமாக வளம் பெற்று வளர்ந்தது; அங்கே ''பொருளாதாரவாதி''கள் தோன்றியதும் அணிதிரண்டதும் 1900ம் ஆண்டின் இளவேனிற்காலத்தில் (அதாவது ''இஸ்க்ரா'' வெளிவருவதற்கு முன்னர். அதன் முதல் இதழ் அச்சகத்திலிருந்து 1900ம் ஆண்டின் முடிவில் வெளிப்பட்டது) பிளவில் முடிந்தன.

தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளின் இருபது ஆண்டு (1894-1914) வரலாறு ருஷ்ய மார்க்ஸீயத்திலும், ருஷ்ய (சரிநுட்பமாகச் சொன்னுல் அகில ருஷ்யாவின்) சோஷல்-டெமாக்ரஸியிலும் உள்ள இரு போக்குகளின் வரலாறேயாகும். ருஷ்யத் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளின் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு, பல்வேறு பத்திரிகைகளின் பெயர்களைத் தெரிந்துகொள்வது அவ்வளவு முக்கியமல்ல; இக்காலத்தில் வாசகருக்கு அந்தப் பெயர்கள் பொருளற்றவையாக இருக்கும்; அவருக்கு வெறும் குழப்பத்தையே தரும். எனவே அதனைவிட உள்ளடக்கம், தன்மை, சோஷல்-டெமாக்ரஸியின் பல்வேறு பிரிவுகளின் சித்தாந்தப் போக்கு ஆகியவற்றை அறிந்துகொள்வதே மிகவும் அவசியமாகும்.

''பொருளாதாரவாதி''களின் முக்கியச் செய்தித்தாள்கள் ''ரபோச்சயா மிஸில்'' (1897-1900), ''ரபோச்சேயே தேலோ'' (1898-1901) என்பவையே. பின்னுளில் ஸிண்டிக்கலிஸ்டுகளோடு[18] சேர்ந்துகொண்ட பி. கிரிசேவ்ஸ்கிய், முக்கியமான மென்ஷெவிக்கும், தற்போது லிக்விடேட்டருமான அ. மார்தீனவ், இப்போது ''சுயேச்சையான சோஷல்-டெமாக்ரட்''டாக இருந்தபோதும், எல்லா முக்கியமான விஷயங்களிலும் லிக்விடேட்டர்களோடு இணங்கிச் செல்பவரான அகீமவ் ஆகியவர்களே ''ரபோச்சேயே தேலோ''வை நடத்தியவர்கள்.

பிளெகானவும் ''உழைப்பு விமோசன''க் குழு முழுவதும் தான் (''ரபோத்னிக்'' என்ற சஞ்சிகை முதலியன) முதலில் பொருளாதாரவாதிகளை எதிர்த்துப் போராடினர். பிறகு (1900 முதல் ஆகஸ்ட் 1903 வரை, ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேரவைக் கூட்டம் நடந்த வரை) ''இஸ்க்ரா'' பொருளாதாரவாதிகளை எதிர்த்துப் போராடியது. ''பொருளாதாரவாதத்''தின் சாரம்தான் என்ன?

''பொருளாதாரவாதி''கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வெகுஜனத்தன்மையையும், தொழிலாளர்களின் சுயேச்சையான நடவடிக்கையையும் சொல்லளவில் அதிக ஊக்கத்தோடு ஆதரித்துப் பேசினுர்கள்; ''பொருளாதார''க் கிளர்ச்சி தலைமையான முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் நிதானமாகவும், படிப்படியாகவும் அரசியல் கிளர்ச்சிக்குச் செல்லவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினுர்கள். லிக்விடேட்டர்களின் உள்ளத்தைக் கொள்ளை

கொண்ட சொற்றொடர்களே இவை என்பதை வாசகர் கண்டுகொள்ளலாம். நடைமுறையில் இந்தப் ''பொருளாதாரவாதி''கள், மிதவாதத் தொழிலாளர் கொள்கையைப் பின்பற்றினர். அக்காலத்தில் ''பொருளாதாரவாதி''களின் தலைவர்களில் ஒருவராயிருந்த திரு. சே. நி. புரொகோபோவிச், அதன் சாரத்தைச் சுருக்கமாகக் குறித்தார்: ''தொழிலாளர்களுக்குப் பொருளாதாரப் போராட்டம், மிதவாதிகளுக்கு அரசியல் போராட்டம்'' என்று. தொழிலாளர்களின் சுயமுயற்சியைப் பற்றியும், வெகுஜன இயக்கத்தைப் பற்றியும் மற்றவர்களைவிட உரத்துக் கூச்சலிட்ட ''பொருளாதாரவாதி''கள் நடைமுறையில் தொழிலாளர் இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் போக்குடைய கீழ்மத்தியத்தர வகுப்பு-அறிவாளிப்பகுதியாகவே இருந்தனர்.

அரசியல் உணர்வுபெற்ற தொழிலாளர்களில் மிகப்பெரும்பாலோர், சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து, **பழைய** ''இஸ்க்ரா''வை ஆதரித்தனர். 1901-1903ல் அரசியல் குற்றம் சுமத்தப்பட்ட ஒவ்வொரு 100 பேரிலும் அறிவுஜீவிகள் 37 பேராக இருக்கும்போது, அரசியல் உணர்வுபெற்ற இந்தத் தொழிலாளர்கள் 46 பேராக இருந்தனர். ''இஸ்க்ரா'' நடத்திய மூன்று ஆண்டு (1901-1903) வேலையின் பயனாக, சோஷல்-டெமாக்ரடிக் கட்சியின் வேலைத் திட்டமும் அதன் போர்த்தந்திர அடிப்படைகளும் முரணற்ற மார்க்ஸீயத்தின் அடிப்படையில் தொழிலாளர்களின் பொருளாதார, அரசியல் போராட்டத்தை இணைக்கும் வடிவங்களும் அமைக்கப்பெற்றன. புரட்சிக்கு முற்பட்ட ஆண்டுகளில் தொழி

லாளர் பத்திரிகைகள் ''இஸ்க்ரா''வைச் சார்ந்து குவிந்தன; அதன் சித்தாந்தத் தலைமையின்கீழ் மிகப் பெரிய வளர்ச்சியை எய்தின. சட்டவிரோதத் தாள் களும், லைசன்ஸ் பெறாத அச்சகங்களும் எண்ணிக் கையில் அளவுக்கு மீறி அதிகமாக இருந்தன; அவை ருஷ்யா முழுவதிலும் விரைவாய்ப் பெருகின.

*1903*ல், ''பொருளாதாரவாதத்''தின் மீது ''இஸ்க்ரா'' பெற்ற முழு வெற்றி, அதாவது அறிவு ஜீவிகளின் சந்தர்ப்பவாதப் போர்த்தந்திரங்களின் மீதுமுரணில்லாத பாட்டாளி வர்க்கப் போர்த்தந் திரங்கள் பெற்ற முழு வெற்றி, சோஷல்-டெமாக் ரஸியின் அணிகளினுள் புதிய பல ''சகபிரயாணி'' கள் நுழைவதற்கு வழிசெய்தது. அதன் காரணமாகச் சந்தர்ப்பவாதம், **இஸ்க்ராவாதத்தின் மண்ணிலேயே** அதன் பகுதியாகவே, ''மென்ஷெவிஸம்'' என்றவடி வத்தில் மீண்டும் தழைத்தது.

(*1903* ஆகஸ்டில் நடந்த) ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டா வது பேரவைக்கூட்டத்தில், மென்ஷெவிஸம் உருப் பெற்றது. அதனைப் பின்பற்றியவர்கள், ''இஸ்க்ரா வாதி''களின் **சிறுபான்மையினரும்** (''மென்ஷின்ஸ்த் வோ.'' இச்சொல்லிலிருந்தே மென்ஷிவிஸம் என்ற பெயர் உண்டானது) **"இஸ்க்ரா"வின் சகல சந்தர்ப்பவாத எதிரிகளும்** ஆவர். மென்ஷெவிக்குகள் சிறிதளவு புதுப்பித்த வடிவத்தைக் கொண்ட ''பொருளாதார வாதத்''துக்குத் திரும்பச் சென்றனர். இயக்கத்தில் எஞ்சியிருந்த ''பொருளாதாரவாதிகள்'' யாவரும் அ. மார்தீனவ் தலைமையின்கீழ் ''மென்ஷெவிக்கு'' களின் அணிவரிசையில் திரண்டனர்.

1903 நவம்பர் தொடக்கத்திலிருந்து, மாற்றப் புட்ட ஆசிரியர் குழுவுடன் வெளிவந்த புதிய ''இஸ்க்ரா'', ''மென்ஷெவிஸத்'' தின் தலைமையான பத்திரிகையாயிற்று. அப்போது உற்சாகமிக்க மென் ஷெவிக்காக இருந்த டிராட்ஸ்கிய், ''பழைய 'இஸ்க் ரா'வுக்கும் புதிய 'இஸ்க்ரா'வுக்கும் இடையே ஆழ்ந்த பள்ளம் உள்ளது'' என்று வெளிப்படை யாகக் கூறினர். முரணற்ற மார்க்ஸீயத்தின் போர்த் தந்திரங்களுக்கு ஆதரவாகப் பழைய ''இஸ்க்ரா'' வுக்கு விசுவாசம் செலுத்திச் செயல்பட்ட முக்கிய ''போல்ஷெவிக்'' பத்திரிகைகள்—''வ்பெர்யோத்''[19] என்பதும் ''புரோலிதாரிய்'' (1905) என்பதும் ஆகும்.

வெகுஜனங்களுடன் உண்மையான தொடர்பு கொள்ளும் விஷயத்திலும், பாட்டாளிப் பொது மக்களின் போர்த்தந்திரங்களை வெளிப்படுத்தும் விஷயத்திலும், 1905 முதல் 1907 வரையுள்ள புரட்சி ஆண்டுகள், சோஷல்-டெமாக்ரஸியிலும் தொழிலாளி வர்க்கப் பத்திரிகை உலகிலும் உள்ள முக்கிய இரு போக்குகளையும்—அதாவது மென் ஷெவிக் போக்கு, போல்ஷெவிக் போக்கு என்ற இரண்டையும்—சோதித்தன. முற்போக்கான தொழி லாளர்கள் வெகுஜனங்களுடன் நெருங்கி இணைந்த தங்கள் நடவடிக்கைகளால் பகிரங்கமான சோஷல்- டெமாக்ரடிக் பத்திரிகைகளுக்கு வழிசெய்திராவிட் டால், 1905ம் ஆண்டு இலையுதிர் காலத்தில், இப்பத் திரிகைகள் உடனடியாகத் தோன்றியிருக்கமுடியாது. பகிரங்கமான சோஷல்-டெமாக்ரடிக் பத்திரிகை கள், 1905, 1906, 1907 வருடங்களில், இரண்டு

போக்குகளின் வெளியீடாக, இரண்டு உட்குழுக் களின் வெளியீடாக இருந்ததற்குக் காரணம் என்ன? அக்காலத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில், குட்டி பூர்ஷ்வாப் போக்கிற்கும் பாட்டாளி வர்க்கப் போக்கிற்கும் இடையே நிலவிய வேறுபாடுதான் அதற்கு ஒரே ஒரு காரணமாய் இருக்கமுடியும்.

பகிரங்கமான தொழிலாளர் பத்திரிகைகள், எழுச்சி ஏற்பட்டு, ஒப்புநோக்கில் ''சுதந்திரம்'' நிலவிய மூன்று காலகட்டங்கள் ஒவ்வொன்றிலும் தோன்றின. 1905 இலையுதிர் காலத்திலும் (''நோவ யா ஷிஸ்ன்''[20] என்ற போல்ஷெவிக் பத்திரிகை, ''நச்சாலோ''[21] என்ற மென்ஷெவிக் பத்திரிகை; பல பத்திரிகைகளுக்குள் முக்கியமானவற்றின் பெயர்களை மட்டுமே நாம் தந்துள்ளோம்), 1906 இளவேனில் காலத்திலும் (''வால்ன'', ''எகோ''[22] முதலியன போல்ஷெவிக்குகளால் வெளியிடப்பட் டன, ''நரோத்நயா டுமா''வும்[23] பிறவும் மென்ஷெ விக்குகளால் வெளியிடப்பட்டன), 1907 இளவே னில் காலத்திலும் பகிரங்கமான தொழிலாளர் பத்திரிகைகள் வெளிவந்தன.

அக்காலத்திய மென்ஷெவிக் போர்த்தந்திரங் களின் சாரத்தை லே. மார்ட்டோவ் என்பவரே பின்வருமாறு வரையறுத்து உரைத்தார்: ''அந் தக் குறிப்பிட்ட நெருக்கடியில், உடைமை வர்க் கங்களின் பிற்போக்கான பகுதியை அரசாங்க அதிகாரத்திலிருந்து நீக்குவதற்கு முயன்ற பூர்ஷ்வா-மிதவாத ஜனநாயகத்துக்கு உதவி செய் வது தவிர, பாட்டாளி வர்க்கம் பயன்தரத் தக்க பங்காற்றுவதற்கான வேறு வாய்ப்பு எதனை

யும் மென்ஷெவிக்குகள் காணவில்லை. ஆனால் பூர்ஷ்வா-மிதவாத ஜனநாயகத்துக்கு உதவியைச் செய்யும் போது, பாட்டாளி வர்க்கம் தனது முழுமையான அரசியல் சுதந்திர நிலையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்'' (ருபாகின் எழுதிய ''புத்தகங்களுக்கிடையே'', தொகுதி 2, பக்கம் 772). மிதவாதிகளுக்கு ''உதவி'' செய்யும் இந்தப் போர்த்தந்திரமே தொழிலாளர்கள் நடைமுறையில் மிதவாதிகளைச் சார்ந்திருக்கும்படி செய்தது; அது நடைமுறையில் மிதவாதத் தொழிலாளர் கொள்கையேயாகும். இதற்கு மாறாக, போல்ஷெவிக்குகளின் போர்த்தந்திரம் பூர்ஷ்வா நெருக்கடியில் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திர நிலையை உறுதிப்படுத்தியது; பூர்ஷ்வா நெருக்கடி முடிவுவரை செல்லும்படியான போராட்டத்தை நடத்துவதன்மூலமும் மிதவாதத்தின் துரோகங்களை அம்பலப்படுத்துவதன் மூலமும் அந்தத் துரோகங்களுக்கு எதிரிடையாகக் குட்டி பூர்ஷ்வாக்களை (குறிப்பாக, கிராமப்புறத்திலுள்ள குட்டி பூர்ஷ்வாக்களை) அறிவு ஊட்டி ஒன்று திரட்டுவதன் மூலமும் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திர நிலையை உறுதிப்படுத்தியது.

மென்ஷெவிக்குகளிலிருந்து இக்காலத்திய லிக்விடேட்டர்களான கல்த்ஸோவ், லெவிட்ஸ்கிய், முதலியோர் வரை அனைவரும் அந்த (1905-1907) வருடங்களில் தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் போல்ஷெவிக்குகளையே பின்பற்றினார்கள் என்பதைத் தாமாகவே பல முறை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். போல்ஷெவிஸம்அந்த இயக்கத்தின் பாட்டாளி வர்க்கத் தன்மையைப்

பிரதிபலித்தது; மென்ஷெவிஸம் கீழ்மத்தியத் தர வகுப்பு-அறிவுஜீவிகளின் சந்தர்ப்பவாதப் போக்கைப் பிரதிபலித்தது.

தொழிலாளர் பத்திரிகைகளில் புலனுன இரு போக்குகளின் போர்த்தந்திரங்களின் உட்பொருளையும் முக்கியத்துவத்தையும் மேலும் விரிவாக விளக்கிக் கூறுவதற்கு இங்கு இடமில்லை. முக்கியமான உண்மைகளைச் சரிநுட்பமாக நிறுவி வரலாற்று வளர்ச்சியின் முக்கியமான போக்குகளை வரையறுத்துக் காட்டுவதற்கு மேல் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளுக்கு ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு வரலாறு உண்டு. முதலில் அது ஆயத்த வரலாறு, அதாவது தொழிலாளிகளின், பாட்டாளிகளின் விடுதலை இயக்கத்தின் வரலாறு **அல்ல** — ''பொதுவான ஜனநாயகத் தன்மையுள்ள'' பூர்ஷ்வா-ஜனநாயக விடுதலை இயக்கத்தின் வரலாறே; அதனைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கப் பத்திரிகைகளின் சொந்த வரலாறு வருகிறது; இது பாட்டாளி இயக்கத்தின், பாட்டாளி ஜனநாயகத்தின் அல்லது சோஷல்-டெமாக்ரஸியின் இருபது ஆண்டு வரலாருகும்.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஜூபிட்டர் தலையிலிருந்து மினர்வா[24] வெளிப்பட்டது போலப் பாட்டாளி இயக்கம் தூய வர்க்கத்தன்மையோடு தயாராக உருவாகித் ''திடீரென்று'' பிறந்ததில்லை; அவ்வாறு பிறக்கவும் முடியாது. முன்னணித் தொழிலாளர்களும் அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்கள் அனைவரும், நீண்ட காலம் போராடியும்,

கடுமையாகப் பாடுபட்டும்தான், எல்லாவிதமான குட்டி பூர்ஷ்வாச் சப்புச் சவறுகள் கட்டுப்பாடுகள், குறுகிய மனப்பான்மை, திரித்தல்-புரட்டல்கள் ஆகிய அனைத்தையும் ஒழித்து அதன்மூலம் பாட்டாளி வர்க்க இயக்கத்தைத் தனிப்பிரித்து வலுப்படுத்துவதில் வெற்றியடைந்தார்கள். தொழிலாளி வர்க்கமும் குட்டி பூர்ஷ்வாக்களும் அடுத்தடுத்து வாழ்கின்றனர்; குட்டி பூர்ஷ்வாக்களின் அழிவு தொழிலாளி வர்க்க அணிகளை இடைவிடாமல் பெருக்கிக்கொண்டே இருக்கிறது. குட்டி பூர்ஷ்வாத் தன்மையிலும், பிலிஸ்டைன் தன்மையிலும் முதலாளித்துவ நாடுகளிடையே முதலிடம் வகிக்கும் ருஷ்யா, இப்போதுதான் பூர்ஷ்வாப் புரட்சிகளின் சகாப்தத்தினுள் நடைபோடுகிறது; இந்தச் சகாப்தம், உதாரணமாக, இங்கிலாந்தில் 17ம் நூற்றுண்டிலும், பிரான்சில் 18ம் நூற்றுண்டிலும் 19ம் நூற்றுண்டின் முதல் பாதியிலும் ஏற்பட்டது.

தனது சொந்தப் பணியை, அதாவது தொழிலாளர் பத்திரிகைகளை நிர்வகிப்பதும் அவற்றை நன்கு அமைப்பதும் வலுப்படுத்துவதும் வளர்ப்பதும் ஆகிய பணியை, மேற்கொள்ளும் ஒவ்வோர் அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளியும்—ருஷ்யாவில் மார்க்ஸீயத்திற்கும் சோஷல்-டெமாக்ரடிக் பத்திரிகைகளுக்கும் உள்ள இருபதாண்டு வரலாற்றையும் மறக்கமாட்டார்.

அறிவுஜீவிகளான சில பயங்கொள்ளி நண்பர்கள் தொழிலாளர் இயக்கத்திற்கு ஒரு கேடு செய்கிறுர்கள்; அவர்கள் சோஷல்-டெமாக்ரட்டுகளின் உள்போராட்டத்திலிருந்து ஒதுங்கி நின்று,

அப்போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்க வேண்டுமென்று வானம் முட்டக் கூக்குரலிடுகிறுர்கள். அவர்கள் நல்லவர்கள், ஆனுல் அறிவற்றவர்கள்; அவர்களது கூச்சல்களோ பொருளற்றவை.

சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து மார்க்ஸீயம் நடத்திய போராட்டத்தின் சரித்திரத்தைப் பயில்வதன்மூலமே, குட்டி பூர்ஷ்வாக் கந்திரகோளத்திலிருந்து சுதந்திரமான பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பிரிந்திருப்பதை ஆழமாகவும் விவரமாகவும் அறிந்துகொள்வதன்மூலமே, முற்போக்கான தொழிலாளர்கள் தமது அரசியல் உணர்வையும், தமது தொழிலாளர் பத்திரிகைகளையும் முற்றிலும் உறுதிப்படுத்தமுடியும்.

''ரபோச்சிய்'', எண் 1,
ஏப்ரல் 22, 1914

வி. இ. லெனின், நூல்கள்,
4வது ருஷ்யப் பதிப்பு,
தொகுதி 20, பக்கங்கள்
223-230

நமது கடமைகள்

ருஷ்யத் தொழிலாளர் பத்திரிகைகளின் வரலாற்றையும் ''பிராவ்தா''வின் தோற்றத்தையும் சுருக்கமாக விவரித்தோம். ருஷ்ய ஜனநாயக இயக்கங்களின் நூருண்டு வரலாற்றின் முடிவாக, மார்க்ஸீய சித்தாந்தக் கொடியின்கீழ் சுயேச்சையான தொழிலாளர் ஜனநாயக இயக்கம் எப்படி உருவானது என்பதைக் காட்ட முயன்ருேம். மேலும், ருஷ்யாவில் குட்டி பூர்ஷ்வா, சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிராகத் தொழிலாளி வர்க்க முன்னணிப் படை நடத்திய நாட்பட்ட போராட்டத்தின்விளைவாக, மார்க்ஸீயத்திற்கும் தொழிலாளர் இயக்கத்திற்கும் உள்ள இருபதாண்டு வரலாறு, ''பிராவ்தா''வின் தலைமையில்— 1912ல் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் புகழ்பெற்ற வசந்த கால எழுச்சியோடு பிறந்த ''பிராவ்தா''வின் தலைமையில்—அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்களில் மிகப்பெரும்பாலோர் ஒன்றுதிரளும் படி எப்படிச் செய்தது என்பதைக் காட்டவும் முயன்ருேம்.

அந்தச் செய்தித்தாள், தன் இரண்டு ஆண்டு வாழ்வில், அரசியல் உணர்வு பெற்ற பிராவ்திஸ்ட்

தொழிலாளர்களைச் சித்தாந்தத் துறையிலும், ஓரள விற்கு ஸ்தாபன ரீதியாகவும் எவ்வாறு ஒன்று திரட்டியது என்பதையும் அவர்கள் தம் முயற்சிகளால் முரணற்ற மார்க்ஸீயத் தொழிலாளர் பத்திரிகைகளை எப்படி உருவாக்கினர், அவற்றிற்கு எப்படி ஆதரவு கொடுத்தனர், அவற்றை வலுப்படுத்தி விருத்தி செய்தனர் என்பதையும் நாம் கண்டோம். முந்திய சரித்திர சகாப்தத்தின் ஸ்தாபனரீதியாகத் திரண்ட மார்க்ஸீயவாதிகளின் வழித்தோன்றல்களாகத் தாங்கள் செயல்படுவதைத் திண்ணமாக உறுதிப்படுத்திக்கொண்டும், அவர்கள் முடிவுகளில் எதனையும் மீருமலும், பழைய அஸ்திவாரத்தில் புதியதை நிறுவியும், முரணற்ற மார்க்ஸீயம் என்ற உறுதியாகவும் சரிநுட்பமாகவும் வரையறுக்கப்பட்ட குறிக்கோளை நோக்கி முறையாகவும் தளராமலும் முன்னேறியும் பிராவ்திஸ்ட் தொழிலாளர்கள் மிகமிகக் கடினமான, சரித்திர முக்கியத்துவம் கொண்ட கடமையைச் செய்ய முனைந்தனர்.

1908-11 ஆண்டுகளில் தொழிலாளி வர்க்க இயக்கப்பாதையில், உள்ளும் புறமுமாக எண்ணிறந்த எதிரிகளும் எண்ணிறந்த கஷ்டங்களும் கிளம்பின. உலகத்தின் எந்த ஒரு நாட்டிலும் இந்நாள்வரை தொழிலாளி வர்க்க இயக்கம், தன் பாரம்பரியத்தையும் தன் ஸ்தாபனத்தையும் பழைய முடிவுகள், வேலைத் திட்டம், போர்த்தந்திரங்கள் ஆகியவற்றின் மீது விசுவாசத்தையும் சிதையாமல் காத்துக் கொண்டு, இதுபோன்ற நெருக்கடிகளைச் சமாளித்த தில்லை.

ஆனல் ருஷ்ய இயக்கம், இன்னும் சரிநுட்ப

மாகச் சொன்னல், அகில ருஷ்யாவின் தொழிலாளி வர்க்க இயக்கம், கடந்த காலத்துக்கு விசுவாசியாக இருந்து கொண்டு, ஸ்தாபனரீதியான பாரம்பரியத்தைக் காத்துக்கொண்டு, அதேசமயம் இன்னும் நிறைவேற்றப்படாத பழைய சரித்திரக் கடமைகளைப் பழைய முறைகளில் நிறைவேற்றுவதற்காகத் தன் சக்திகளைத் தயாரிப்பதற்குரிய புது வடிவங்களையும் பாட்டாளி வர்க்கத்தின் இளந் தலைமுறைகளுக்கு அறிவு புகட்டி ஒன்று திரட்டுவதற்குரிய புதிய வழிகளையும் கற்றுத் தேர்ந்து, நம்ப முடியாத கஷ்டங்கள் நிறைந்த நெருக்கடியிலிருந்து கௌரவத்துடன் வெளிவருவதில் வெற்றி கண்டது.

ருஷ்ய சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களில் தொழிலாளி வர்க்கமே இவ்வாறு செய்வதில் வெற்றி கண்டது. பிறநாடுகளின் தொழிலாளர்களைவிட அது உயர்ந்த நிலையில் இருந்ததால்தான் இது சாத்தியமாயிற்று என்று சொல்லமுடியாது; மாருக, பிறநாடுகளின் தொழிலாளர்களோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் ஸ்தாபனத் துறையிலும் அரசியல் உணர்விலும் மிகவும் பின்தங்கியே இருந்தது. உலகம் முழுமையின் தொழிலாளர்களுக்குள்ள அனுபவத்தையும் அவர்களின் தத்துவார்த்த அனுபவத்தையும், அவர்களின் அரசியல் உணர்வு, விஞ்ஞானம் ஆகியவற்றின் சாதனைகளையும் மார்க்ஸீயத்தால் தொகுத்துரைக்கப்பட்ட அனுபவத்தையும், அருமையான தொழிலாளர் பத்திரிகைகளும் வெகுஜன ஸ்தாபனமும் உடைய அண்டை நாடுகளின் பாட்டாளிகள்

பெற்றிருந்த நடைமுறை அனுபவத்தையும் அது ஏககாலத்தில் சார்ந்திருந்ததால்தான், அந்த வெற்றி கிட்டியது.

மிகமிகக் கஷ்டமான, கடினமான காலத்திலும் புறத்தேயிருந்து வந்த கொடுந்துன்பங்களையும் அகத்தில் ஏற்பட்ட சோர்வு, நம்பிக்கையின்மை, தைரியக்குறைவு, துரோகம் ஆகியவற்றையும் எதிர்த்துத் தங்கள் சொந்தக் கொள்கையைப் பாதுகாத்துக் கொண்ட பிராவ்திஸ்ட் தொழிலாளர்கள், இன்று முழு மனத்தெளிவோடும் திண்ணமாகவும் பின்வருமாறு கூறலாம்: 'நாம் சரியான வழியில் செல்கிறோம். இது நமக்குத் தெரியும். ஆனால் இவ்வழியில் முதல் அடிகளே வைத்துள்ளோம். மிகக் கொடிய கஷ்டங்கள் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன. முற்றிலும் பூர்த்தியாகத் திடவுறுதி பெறுவதற்கும், பிற்பட்டும், உறக்கத்திலாழ்ந்தும், நசுக்கப்பட்டும் கிடக்கும் கோடானுகோடிப் பாட்டாளிகளை உணர்வுள்ள வாழ்க்கையில் பங்குகொள்ளும்படி விழிப்புறச் செய்வதற்கும் நாம் இன்னும் பல காரியங்களைச் செய்யவேண்டும்'.

பாட்டாளி வர்க்கத்தின் குட்டி பூர்ஷ்வா ''சகபிரயாணிகள்'', மிதவாதிகளை அடிமை மனப்பான்மையுடன் பின்பற்றிக்கொண்டு, ''மறைமுகமான ஸ்தாபனத்தை''ப் பற்றியும், ''சட்டவிரோதமான பத்திரிகைகளை விளம்பரப்படுத்துவதை''ப் பற்றியும் நையாண்டி செய்யட்டும். ஜூன் 3ம் தேதிய ''சட்டபூர்வமான நிலை''யில்[25] மயங்கி ஏமாறட்டும். இந்தச் ''சட்டபூர்வமான நிலை'' எவ்வளவு நிலையற்றது என்பது நமக்குத் தெரியும். சட்டவிரோதப்

பத்திரிகைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சரித்திரம் நமக்குக் கற்பித்துள்ள பாடங்களை நாம் மறக்கவே மாட்டோம்.

பிராவ்திஸ்ட் பணியை மேலும் விருத்திசெய்து கொண்டு, நாம் வெறும் பத்திரிகைத் தொழிலைத் தொழிலாளி வர்க்கக் காரியத்தின் எல்லாத் துறைகளோடும் கூட வளர்ப்போம்.

''பூத் பிராவ்தி'', இன்றுபோல் மூன்று, நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாக வினியோகமாக வேண்டும். தொழிற்சங்கங்கள், குழுக்கள் அனைத்தின் பிரதிநிதிகளின் உதவியுடன் ஒரு பொதுவான தொழிற்சங்க அனுபந்தத்தைப் பதிப்பிப்பது அவசியம். நமது பத்திரிகையின் (மாஸ்கோ, யூரல், காகேஷியன், பால்டிக், உக்ரேனியன்) வட்டார அனுபந்தங்களை வெளியிடுவதும் அவசியமாகும். ஒன்று பாக்கியில்லாமல் எல்லாத் தேசீய இனங்களையும் சேர்ந்த பூர்ஷ்வா தேசீயவாதிகளையும் குட்டி பூர்ஷ்வா தேசீயவாதிகளையும் எதிர்த்து ருஷ்யாவின் எல்லா தேசீய இனங்களின் தொழிலாளர் ஒற்றுமையை வலுப்படுத்தவேண்டும். இதற்காகவே ருஷ்யாவிலுள்ள வெவ்வேறான தேசீய இனங்களின் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றிய நமது பத்திரிகையின் அனுபந்தங்களையும் வெளியிடத் தொடங்க வேண்டும்.

''பூத் பிராவ்தி''யில், வெளிநாட்டுச் செய்திப் பகுதிக்கும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களின் ஸ்தாபன, சித்தாந்த, அரசியல் வாழ்வைப் பற்றிய செய்திக் கோவைக்கும் மிக அதிக இடம் தரவேண்டும்.

விலைக்குறைவான ''மாலைப் பிராவ்தா''வைத் தொடங்குவதும் அவசியம் ஆகும். ''பூத் பிராவ்தி'', இன்றுள்ள நிலையில், அரசியல் உணர்வுபெற்ற தொழிலாளர்களுக்கு இன்றியமையாததாகும்; அதனை விரிவுபடுத்தவும் வேண்டும். ஆயினும் சாதாரணத் தொழிலாளர்களுக்கு, சாமானிய மக்களுக்கு, இயக்கத்தில் இன்னும் ஈர்க்கப் பெறாத பல லட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதிகளுக்கு, ''பூத் பிராவ்தி'' அதிக விலையுள்ளதும், அதிகக் கடினமானதும், அளவில் அதிகப் பெரியதுமாக இருக்கிறது.... முன்னேறியுள்ள தொழிலாளர்கள் அவர்களை மறக்க மாட்டார்கள்; ஏனெனில் பிற தொழில்களைச் செய்யும் தொழிலாளிகளைப் புறக்கணிக்கும் குறுகிய மனப்பான்மை, தொழிலாளர்களிடையே சிலர் மேன்மக்களாக உயர்ந்து வெகுஜனங்களிடமிருந்து தனிமைப்படுவது ஆகியவை பாட்டாளிகளை உணர்வு மழுங்கச் செய்து, இழிவுபடுத்துகின்றன. அவர்களைக் கேவலமான பிலிஸ்டைன் மனப்பான்மைக்கும் அடிமைப்புத்திக்கும் உட்படுத்துகின்றன; அவர்களின் விமோசனத்திற்கான நம்பிக்கையை அறவே ஒழித்துவிடுகின்றன என்பது முற்போக்கான தொழிலாளர்களுக்கு நன்ருகத் தெரியும்.

விலைமலிவான ''மாலைப் பிராவ்தா''வைத் தோற்றுவிப்பது அவசியமாகும்; 2,00,000 அல்லது 3,00,000 பிரதிகள் விநியோகமானல் அது திரள் திரளான பாட்டாளிகளுக்கும், அரைப் பாட்டாளிகளுக்கும் கிட்டும். அவர்களுக்குச் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பற்றிய அறிவைப் புகட்டும்; தமது பலத்தில் நம்பிக்கை ஏற்

படுத்தும்; அவர்களை ஒன்றுசேரத் தூண்டும்; அவர்களுக்கு முழு வர்க்க உணர்வு உண்டாகவும் துணை புரியும்.

தனிப்பட்ட பாக்டரி, மில் அல்லது வட்டார வாரியாக ''பூத் பிராவ்தி'' வாசகர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதற்குத் தற்போது செய்யப்படுவதைவிட எவ்வளவோ அதிகமாக முயற்சி செய்யப்படவேண்டும். விஷயாதாரங்களைச் சேகரித்துத் தருவதிலும் பத்திரிகையை நடத்துவதிலும் அதை வினியோகம் செய்வதிலும் வாசகர்கள் மேலும் தீவிரமாகப் பங்கெடுக்கவேண்டும். செய்தித்தாளைப் பதிப்பிக்கும் பணியில் தொழிலாளர்கள் முறையாகப் பங்கெடுப்பதும் அவசியமாகும்.

இது அவசியம், அது அவசியம். எத்தனை விஷயங்கள் அவசியமாக இருக்கின்றன! தேவையாயுள்ள எல்லாவற்றையும் நாம் இங்கு வரிசைப்படுத்திக் கூறமுடியாது; நமது வேலையின் எல்லாத் துறைகளையுமோ அல்லது குறைந்தபட்சம் மிக முக்கியமான துறைகளையோ இங்கு தொகுத்துக் கூற விரும்பினால் நாம் பிறர் நகைப்பிற்கு, (அதைவிட மோசமானதற்கு) இலக்காவோம்.

நாம் சரியான வழியில் செல்கிறோம் என்பது நமக்குத் தெரியும். எல்லா நாடுகளின் முற்போக்குத் தொழிலாளர்களோடும் தோளோடு தோள் பொருந்த அணிவகுத்துச் செல்கிறோம் என்பது நமக்குத் தெரியும். நமது வேலையின் இந்தத் துறை முழுவேலையின் ஒரு சிறு பகுதிதான் என்பதும், நமது மகத்தான விடுதலைப் பாதையின் தொடக்கத்தில்தான் இன்

னும் இருக்கிறோம் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் இந்த வழியில் நம்மைத் தடுத்துநிறுத்தவல்ல சக்தி எதுவும் இவ்வுலகில் இல்லை என்பதும் நமக்கு நிச்சயமாகத் தெரியும்.

''ரபோச்சிய்'', எண் 1, ஏப்ரல் 22, 1914

வி.இ. லெனின், நூல்கள், 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 36, பக்கங்கள் 240-243

தொழிலாளர் வர்க்கமும் அதன் பத்திரிகைகளும்

அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்களுக்கு, தமது இயக்கத்தின் **உட்பொருளைப் புரிந்து கொண்டு** அதைப்பற்றித் **தீர்க்கமாக அறியும்** கடமையைவிட மிக முக்கியமானது வேறென்றுமில்லை. தொழிலாளி வர்க்க இயக்க பலத்துக்கு ஒரே ஓர் ஆதாரம்—வெல்லமுடியாத ஆதாரம்—இருக்கிறது. அவ்வாதாரமென்ன? தொழிலாளர்களின் **அரசியல் உணர்வு**, அவர்கள் போராட்டத்தின் விரிவு, அதாவது கூலிக்கு உழைக்கும் **வெகுஜனங்கள்** அதில் எந்த அளவுக்குப் பங்கெடுக்கிறார்கள் என்பது, ஆகியவையே.

செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் பல ஆண்டுகளாக இருந்துவரும் மார்க்ஸீயப் பத்திரிகைகள், தொழிலாளர் இயக்கத்தின் விரிவைப்பற்றியும், அதில் பல்வேறு போக்குகள் ஆதிக்கம் செலுத்துவதைப்பற்றியும் ஒன்றேயான, மிகச் சிறந்த, இன்றியமையாத, யார் வேண்டுமானாலும் சரிபார்த்துக் கொள்ளக் கூடிய விஷயாதாரங்களை அளிக்கின்றன. மிதவாதிகளும் லிக்விடேட்டர்களும் செய்வதுபோல உண்மையை மறைப்பதில் கண்ணும் கருத்துமாயுள்ளவர்கள் மாத்திரமே இவ்விஷயாதாரங்களை அசட்டை செய்யக் கூடும்.

1914 ஜனவரி 1 முதல் மே 13 வரை செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் மார்க்ஸீய (''பிராவ்திஸ்ட்'') செய்தித்தாள்களுக்கும், லிக்விடேட்டர்களின் கொள்கைச் செய்தித்தாள்களுக்கும் கொடுக்கப்பட்ட தொகைகள்

நன்கொடை வழங்கியவர்கள்	செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்						மாஸ்கோ						மாகாணங்கள்						மொத்தம்					
	பிராவ்திஸ்ட்			லிக்விடேட்டர்கள்			பிராவ்திஸ்ட்			லிக்விடேட்டர்கள்			பிராவ்திஸ்ட்			லிக்விடேட்டர்கள்			பிராவ்திஸ்ட்			லிக்விடேட்டர்கள்		
	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.	குழுக்களின் எண்ணிக்கை	வசூலான தொகை ரூ.	கோ.
தொழிலாளர் குழுக்கள்	2,024	13,943	24	308	2,231	98	130	865	—	25	263	52	719	4,125	86	338	2,800	62	2,873	18,934	10	671	5,296	12
தொழிலாளர் அல்லாதவரிடமிருந்து பெற்ற மொத்தம்	325	1,256	92	165	1,799	40	46	260	51	24	1,137	30	332	1,082	79	230	2,113	90	713	2,650	01	453	6,759	77
இதில்:																								
மாணவர், இளைஞர் குழுக்கள்	26	369	49	19	292	13	8	119	30	3	21	—	20	162	13	23	317	09	54	650	92	45	630	22
''ஆதரவாளர்கள்'', ''நண்பர்கள்'' முதலியோர் குழுக்கள்	8	164	—	14	429	25	6	42	10	5	892	—	28	252	72	35	1,129	35	42	458	82	54	2,450	60
மற்றக் குழுக்கள்	2	8	—	6	72	60	1	2	—	—	—	—	30	115	29	24	113	52	33	125	29	30	186	12
தனி நபர்கள்	281	650	96	120	966	72	29	63	61	14	197	80	221	332	05	132	443	80	531	1,046	62	266	1,608	32
பெயரை வெளிப்படுத்தாதவர்கள்	8	64	47	6	38	70	2	33	50	2	26	50	33	220	60	16	110	14	43	318	57	24	175	34
வெளிநாடுகளிலிருந்து	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	10	49	79	34	1,709	17
மொத்தம்	2,349	15,200	16	473	4,031	38	176	1,125	51	49	1,400	82	1,051	5,208	65	568	4,914	52	3,586	21,584	11	1,124	12,055	89

1914 ஜனவரி முதல் தேதியிலிருந்து மே 13ம் தேதி வரை செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில், ''பிராவ்திஸ்ட்'' (மார்க்ஸீய) பத்திரிகைகளுக்கும் லிக்விடேட்டர்களின் செய்தித்தாள்களுக்கும் வந்த வசூல்கள் பற்றிய முழு விபரங்களையும் தோழர் வி. அ. தி. தொகுத்திருக்கிறார். அவர் தயாரித்த அட்டவணை முழுவதையும் அச்சிடுகிறோம். விபரப் பெருக்கத்தால் வாசகர்களுக்கு வீண்தொல்லை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டி, இக்கட்டுரையில் இங்குமங்கும் தோராயமான முழு எண்களையே கொடுக்கிறோம்.

இதோ தோழர் வி. அ. தி. தயாரித்த அட்டவணை. (70ம் பக்கத்துடன் இணைந்துள்ள அட்டவணையைப் பார்க்க).

தொழிலாளர் குழுக்களின் **எண்ணிக்கை** பற்றிய புள்ளிவிபரங்களை முதலில் பார்ப்போம். இப்புள்ளிவிபரங்கள் ''பிராவ்திஸ்ட்'' பத்திரிகைகளும் லிக்விடேட்டர்களின் செய்தித்தாள்களும் இருந்து வந்த முழுக்காலத்திற்கும் உரியவை. **தொழிலாளர்** குழுக்களின் எண்ணிக்கையாவது:

	பிராவ்திஸ்ட் செய்தித்தாள்கள்	லிக்விடேட்டர்களின் செய்தித் தாள்கள்
1912 முழுவதும் . .	*620*	*89*
1913 முழுவதும் . .	*2,181*	*661*
1914 ஜனவரி முதல் தேதியிலிருந்து மே 13 வரை	*2,873*	*671*
மொத்தம்	*5,674*	*1,421*

எல்லாம் சேர்ந்து 7,095 குழுக்கள். சில குழுக்கள் திரும்பத் திரும்ப நன்கொடைகள் வழங்கின. ஆனால் அந்தக் குழுக்களின் எண்ணிக்கையைப் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.

மொத்தத் தொழிலாளர் குழுக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் மட்டுமே லிக்விடேட்டர்களிடத்தில் அபிமானம் வைத்திருக்கின்றனர் என்பதை நாம் காண்கிறோம். ''பிராவ்தா''க் கொள்கை, பிராவ்திஸ்ட் முடிவுகள், பிராவ்திஸ்ட் போர்த்தந்திரங்கள் ஆகிய யாவும் இரண்டரை ஆண்டுக் காலத்தில், அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்களில் ஐந்தில் நான்கு பகுதியினரை **ஒன்றுபடுத்தியுள்ளன.** தொழிலாளர் ஒற்றுமையைப் புலப்படுத்தும் இந்த உண்மையை, ''வ்பெர்யோத்''வாதிகள், ''பிளெகானவ்''வாதிகள், ''டிராட்ஸ்கிய்''வாதிகள் முதலிய பல்வேறு அறிவுஜீவிக் குழுக்கள் ''ஒற்றுமையை''ப் பற்றிப் பேசும் பேச்சோடு ஒப்பிட்டால், பயனுள்ளதாகும்.

1913, 1914 ஆண்டுகளின் புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம் (*1912*ம் ஆண்டின் புள்ளி விபரங்களை ஒப்பிடமுடியாது; ஏனெனில் ''பிராவ்தா'' ஏப்ரலிலும், ''லூச்''[26] அதற்குப்பின் ஐந்து மாதங்கள் கழித்தும் தோன்றின). பிராவ்திஸ்ட் குழுக்களின் அதிகரிப்பு *692* ஆகும், **அதாவது 31.7 சதவீதமாகும்.** லிக்விடேட்டர்கள் குழுக்களின் அதிகரிப்பு *10* தான், **அதாவது 1.5 சதவிகிதமே.** லிக்விடேட்டர்களின் செய்தித்தாள்களை ஆதரிக்கும் தொழிலாளர்களைக் காட்டிலும், **இருபது மடங்கு வேகமாக** பிராவ்திஸ்ட் செய்தித்தாள்களை

ஆதரிக்கும் தொழிலாளர்கள் பெருகிவருகின்றனர் என்பது இதிலிருந்து தெரியவரும்.

ருஷ்யா முழுவதிலும் இந்த இரு போக்குகளை யும் சேர்ந்த தொழிலாளர்கள் எவ்வாறு பரவியுள் ளனர் என்பதைப் பார்ப்போம்.

	தொழிலாளர் குழுக்களின் சதவீதம்	
	பிராவ்திஸ்ட் குழுக்கள்	லிக்விடேட்டர்களின் குழுக்கள்
செயின்ட்-பீட்டர்ஸ் பர்க்கில்	*86%*	*14%*
மாஸ்கோவில்	*83%*	*17%*
மாகாணங்களில் . .	*68%*	*32%*

முடிவு தெளிவாகிறது: எவ்வளவுக்கு உழைக் கும் வெகுஜனங்கள் முன்னேறியிருக்கிறார்களோ, எவ்வளவுக்கு அவர்களுடைய அரசியல் உணர்வும் செயலூக்கமும் முன்னேறியிருக்கின்றனவோ **அவ்வள வுக்கு** அவர்களிடையே பிராவ்திஸ்டுகளின் எண்ணிக் கையும் **பெருக்கமாகியிருக்கின்றது.** செயின்ட்-பீட் டர்ஸ்பர்க்கில், லிக்விடேட்டர்கள் அநேகமாக அகற் றப்பட்டுள்ளனர் (இப்போது இருப்பது *100ல் 14* தான்). மாகாணங்களில் வெகுஜனங்கள் அரசியலில் குறைந்த அறிவு கொண்டிருப்பதால் அங்குதான் இன் னும் எப்படியோ நிலைத்திருக்கின்றனர் (*100ல் 32*).

இதில் அதிகப் படிப்பினைக்குரிய விஷயம் என்ன வென்றால், முற்றிலும் வேறான வழியில் கிடைக் கின்ற புள்ளிவிபரங்கள் — அதாவது இன்ஷூரன்ஸ் சங்கங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தொழி லாளர் பிரதிநிதிகளைப் பற்றிய விபரங்கள்—தொழி

லாளர் குழுக்கள்பற்றிய புள்ளிவிபரங்களோடு சாலப் பொருத்தமாக ஒத்திருக்கின்றன என்பதே. தலைநகரில் இன்ஷூரன்ஸ் சங்கப் பதவிகளுக்கு நடந்த தேர்தலில், 37 பிராவ்திஸ்ட் பிரதிநிதிகளும் 7 லிக்விடேட்டர்களும், அதாவது முறையே 84 சதவீதமும் 16 சதவிகிதமும், தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையில், பிராவ்திஸ்டுகள் 70 சதவிகிதமாக (53ல் 37) அமைந்தனர். **அகில ருஷ்ய** இன்ஷூரன்ஸ் தேர்தலில், மொத்தம் 57ல் 47 பிராவ்திஸ்ட் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; அதாவது அவர்கள் 82 சதவீதமாக அமைந்தனர். லிக்விடேட்டர்கள், கட்சிச்சார்பற்றவர்கள், நரோத்னிக்குகள் ஆகியோர் இன்னமும் பூர்ஷ்வாச் செல்வாக்கின் கீழுள்ள குறைந்த சிறுபான்மைத் தொழிலாளரேயாவர்.

நிற்க, தொழிலாளர் குழுக்கள் வழங்கிய நன்கொடைத் தொகைகளின் சராசரி அளவைப்பற்றிய ருசிகரமான விபரங்கள் பின்வருமாறு இருக்கின்றன:

	தொழிலாளர் குழுக்களிடமிருந்து கிடைத்த சராசரித் தொகைகள்	
	பிராவ்திஸ்ட் குழுக்கள் ரூபிள், கோபெக்	லிக்விடேட்டர்களின் குழுக்கள் ரூபிள், கோபெக்
செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில்	6-88	7-24
மாஸ்கோவில் . . .	6-65	10-54
மாகாணங்களில் . .	5-74	8-28
ருஷ்யா முழுவதற்கும்	6-58	7-89

பிராவ்திஸ்ட் குழுக்களைப் பொறுத்தவரையில் சராசரித் தொழிலாளர் குழுவின் சராசரியான நன்கொடை உழைக்கும் வெகுஜனங்களின் சராசரிக் கூலி உயருவதற்கு ஏற்ப அதிகமாகிறது. இந்த நிகழ்ச்சி இயல்பானது; புரிந்துகொள்ளக்கூடியது; சகஜமானது என்றும் சொல்லலாம்.

லிக்விடேட்டர்களைப் பொறுத்தமட்டும் மாஸ்கோ குழுக்களின் (அவற்றின் மொத்தத் தொகை 25!) கை ஓங்கியிருப்பது நீங்கலாக மாகாணங்களிலுள்ள குழுக்களிலிருந்து கிடைத்த நன்கொடைகள் செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து கிடைத்த நன்கொடைகளைக்காட்டிலும் **அதிகமாக** இருக்கின்றதை நாம் காண்கிறோம்!!! இந்த விசித்திர நிகழ்ச்சிக்கு என்ன விளக்கம் தருவது?

இப்புள்ளிவிபரங்களை மேலும் அலசி ஆராய்ந்த பின்னரே, இக்கேள்விக்கு நம்பத்தகுந்த விடையைத் தரமுடியும். அப்படி அலசி ஆராய்வதற்கு அதிக உழைப்பு தேவை. நம்முடைய அனுமான விடை இதுதான்: லிக்விடேட்டர்கள் இயந்திரத் தொழிலின் சில துறைகளில் மிக அதிகக் கூலி பெறும் சிறுபான்மைத் தொழிலாளர்களை ஒன்றுசேர்க்கின்றனர். இந்தத் தொழிலாளர்கள் மிதவாதக் கருத்துக்களாலும், சந்தர்ப்பவாதக் கருத்துக்களாலும் அதிகமாகப் பீடிக்கப்படுகின்றனர் என்பது உலகம் முழுவதிலும் காணக் கிடக்கிறது. நம் நாட்டில், செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள அச்சகத் தொழிலாளர்கள், பிறரைக்காட்டிலும் நீண்டகாலம் லிக்விடேட்டர்களைச் சகித்துக்கொண்டனர். கடைசித் தொழிற்சங்கத் தேர்தல்களின் போதுதான்,

1914 ஏப்ரல் 27ல், பிராவ்திஸ்டுகள் நிர்வாகக் குழுவில் பாதிப் பதவிகளையும், பதிலாளிகளின் பதவிகளில் பெரும்பான்மையையும் கொண்டனர். எல்லா நாடுகளின் அச்சகத் தொழிலாளர்களும் சந்தர்ப்பவாதத்தின் பக்கம் அதிகமாகச் சார்ந்துள்ளனர்; அவர்களில் சில தரத்தினர், மிக உயர்வான கூலி பெறுகின்றனர்.

தொழிலாளிகளிடையே மேன்மக்கள் நிலை எய்திய சிறுபான்மைப் பகுதி லிக்விடேட்டர்களிடம் காட்டும் பரிவைப் பற்றிய நமது முடிவு, அனுமான முடிவாகவே இருந்த போதிலும், **தனி நபர்களைப்** பொறுத்தவரையில், எந்தவிதமான ஐயப்பாடும் இருக்கமுடியாது. தொழிலாளர் அல்லாதவர் நன்கொடைகளில் **பாதிக்கு மேல்** தனி நபர்களிடமிருந்து வருகின்றன (நமக்கு 713ல் 531; லிக்விடேட்டர்களுக்கு 453ல் 266). நமக்கு இத்தொகைகளின் சராசரி 1 ரூபிள் 97 கோபெக்குகள்; லிக்விடேட்டர்களுக்கு **6 ரூபிள் 05 கோபெக்குகள்**!!

முதலாவதாகக் குறிப்பிட்டவர்களில் குறைந்த கூலி பெறும் அலுவலக ஊழியர்கள், அதிகார வர்க்கத்தினர், முதலிய அரைப் பாட்டாளித் தன்மையுடைய குட்டி பூர்ஷ்வா நபர்கள் இருக்கின்றனர் என்பது தெளிவாகப் புலனாகிறது. லிக்விடேட்டர்கள், செல்வம் படைத்த பூர்ஷ்வா நண்பர்களால் ஆதரிக்கப் படுவதைப் பார்க்கிறோம்.

இந்தப் பணக்கார பூர்ஷ்வா நண்பர்கள், ''ஆதரவாளர் குழுக்களாகவும், நண்பர் குழுக்களாகவும், இன்னும் பிற தோற்றங்களிலும்'' மிகத் தெளிவாக நம்முன் காட்சியளிக்கின்றனர். இக்குழுக்களிடமிருந்து நமக்குக் கிடைத்தது 458 ரூபிள்

82 கோபெக்குகள்; அதாவது மொத்த நன்கொடைகளின் 2 சதவீதம்; ஒரு குழுவின் சராசரி நன்கொடை 10 ரூபிள் 92 கோபெக்குகள் ஆகிறது. இது தொழிலாளர் குழுவின் சராசரி நன்கொடையை விட 50 சதவிகிதம் மாத்திரம் அதிகமாக இருக்கிறது. ஆனல், மேற்குறிப்பிட்ட குழுக்கள் லிக்விடேட்டர்களுக்கு 2,450 ரூபிள் 60 கோபெக்குகள் கொடுத்தன; அதாவது நன்கொடைகளின் மொத்தத் தொகையில் 20 சதவிகிதத்திற்கு **மேல்**. ஒரு குழுவின் சராசரி நன்கொடைத் தொகையோ=**45 ரூபிள் 39 கோபெக்குகள்**; அதாவது, தொழிலாளர் குழுவின் சராசரி நன்கொடைத் தொகையைப்போல் **ஆறு மடங்கு ஆகும்!!**

வெளிநாடுகளில் நன்கொடை கொடுப்பவர்களில் பூர்ஷ்வா மாணவர்களே முக்கியமாக உள்ளனர். வெளிநாட்டிலிருந்து வந்த நன்கொடைத் தொகைகளை இங்கு சேர்க்கிறோம். அங்கிருந்து நமக்குக் கிடைத்தது 49 ரூபிள் 79 கோபெக்குகள்; அதாவது கால் சதவிகிதத்திற்கும் குறைவு. லிக்விடேட்டர்கள் பெற்றது 1,709 ரூபிள் 17 கோபெக்குகள்; அதாவது **14 சதவீதம்.**

தனிநபர்கள், ''ஆதரவாளர்கள், நண்பர்கள்'', வெளிநாடுகளிலிருந்து நன்கொடை அனுப்பியவர்கள் ஆகியோரை ஒன்ருகச் சேர்த்துப் பார்த்தால், இந்த மூலங்களிலிருந்து வந்த நன்கொடைகளின் மொத்தத் தொகையைப் பெறுகிறோம்.

பிராவ்திஸ்டுகளுக்குக் கிடைத்தது 1,555 ரூபிள் 23 கோபெக்குகள்; அதாவது மொத்தத் தொகையில் **7 சதவீதம்.**

லிக்விடேட்டர்களுக்குக் கிடைத்தது 5,768

ரூபிள் 09 கோபெக்குகள்; அதாவது மொத்தத் தொகையில் 48 சதவிகிதம்.

தொழிலாளர் குழுக்களிடமிருந்து கிடைத்தவற்றில் (18,934 ரூபிள்) பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகவே இந்த வழியில் நமக்குக் கிடைத்துள்ளது. லிக்விடேட்டர்களுக்கோ, தொழிலாளர் குழுக்களிடமிருந்து பெற்றதை (5,296 ரூபிள்) காட்டிலும் அதிகமாகவே கிடைத்தது.

முடிவு தெளிவாகிறது: லிக்விடேட்டர்களின் செய்தித்தாள் **பூர்ஷ்வாச்** செய்தித்தாள்; தொழிலாளர் செய்தித்தாள் **அல்ல**. அதற்கு முக்கியமாகப் பணம் தருவது **பணக்கார பூர்ஷ்வா நண்பர்களே.**

உண்மையில், லிக்விடேட்டர்கள் நமது புள்ளிவிபரங்கள் காட்டுவதையும்விட அதிகமாக, பூர்ஷ்வாக்களைச் சார்ந்துள்ளனர். விஷயம் என்னவென்றால், பிராவ்திஸ்ட் செய்தித்தாள்கள், தமது கணக்கு அறிக்கைகளை உலகறியப் **பன்முறை** வெளியிட்டன. வருவாயையும் நன்கொடைத் தொகைகளையும் சேர்த்துக்கூட்டுவதன்மூலம், அந்தச் செய்தித்தாள்களின் வரவும் செலவும் சரிக்கட்டி வந்தன என்பதை அவ்வறிக்கைகள் காட்டின. இத்னைப் புரிந்துகொள்ளமுடியும்: பிரதிகள் பறிமுதலான போதிலும், போதிய அளவு விளம்பரங்கள் இல்லாதபோதிலும், நாள்தோறும் 40 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன (1914 மே மாதத்திய சராசரி இது). லிக்விடேட்டர்களோ **ஒரே ஒரு முறைதான்** ('லூச்'', எண் 101) கணக்கு அறிக்கையை வெளியிட்டனர். அதுவோ 4,000 ரூபிள்கள் பற்றுக்குறையைக் காட்டிற்று. அதன்பிறகு அவர்கள்

கணக்கு அறிக்கையை வெளியிடாதிருக்கும் பூர்ஷ்வா வழக்கத்தைப் பின்பற்றினர். 15,000 பிரதிகளே விற்பனையாகும் நிலையில் வரவு செலவுக் கணக்கில் பற்றுக் குறை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது; திரும்பத் திரும்ப, பணம் படைத்த பூர்ஷ்வா நண்பர்கள் அந்தக் குறையை ஈடுசெய்கிறார்கள் என்பது வெளிப்படை.

மிதவாதத் தொழிலாள அரசியல்வாதிகளுக்குப் ''**பகிரங்கமான** தொழிலாளர் கட்சி''யைப் பற்றிக் குறிப்பிடுவதில் ஓரே பிரியம். ஆனால், தாங்கள் உண்மையில் பூர்ஷ்வாக்களைச் சார்ந்திருப்பதை உண்மையான தொழிலாளர்கள் அறியும்படி **பகிரங்கமாக** ஒப்புக்கொள்ளும் விருப்பம் அவர்களுக்கு இல்லையே! லிக்விடேட்டர்கள்-மிதவாதிகளுக்குப் பகிரங்கமான கணக்கு அறிக்கைகளை வெளியிடக் கற்றுக்கொடுப்பது, தலைமறைவாகவுள்ள ஊழியர்களாகிய நமது கடமையாகின்றது....

மொத்தத்தில், தொழிலாளர் நன்கொடைகளுக்கும் தொழிலாளர் அல்லாதவர்களின் நன்கொடைகளுக்கும் இடையிலுள்ள வீதம் பின்வருமாறு:

நன்கொடைகள்	செய்தித்தாள்களுக்குச் சேர்த்த ஒவ்வொரு ரூபிளில்	
	பிராவ்திஸ்டுகளுக்குக் கிடைத்தது	லிக்விடேட்டர்களுக்குக் கிடைத்தது
தொழிலாளர்களிடமிருந்து	87 கோபெக்குகள்	44 கோபெக்குகள்
தொழிலாளர் அல்லாதவரிடமிருந்து . . .	13 கோபெக்குகள்	56 கோபெக்குகள்
மொத்தம்	1 ரூபிள் 00 கோபெக்	1 ரூபிள் 00 கோபெக்

பிராவ்திஸ்டுகள் தாங்கள் பெறும் நிதி உதவி யில் ஏழில் ஒரு பாகத்தை பூர்ஷ்வாக்களிடமிருந்து பெறுகின்றனர். இவர்கள் நாம் முன் கண்டது போல, அதிக ஜனநாயகத் தன்மையும் குறைவான செல்வ மும் உடைய பூர்ஷ்வாப் பிரிவினர் ஆவர். லிக்வி டேட்டர்களின் முயற்சியோ, முக்கியமாக பூர்ஷ் வாக்களின் முயற்சியாகும்; அதனைச் சிறுபான்மைத் தொழிலாளர்கள் இன்னமும் ஆதரிக்கின்றனர்.

நன்கொடைகளின் மூலத்தைப் பற்றிய புள்ளி விபரங்கள், செய்தித்தாள்களை வாங்கும் வாசகர்க ளின் வர்க்க நிலையை வெளிப்படுத்திக் காட்டு கின்றன.

நிரந்தர வாசகர்களிடமிருந்தே, பத்திரிகைக் கொள்கையின் உணர்வுபூர்வமான ஆதரவாளர் களிடமிருந்தே, தம்மிச்சையான நன்கொடைகள் வந்து சேருகின்றன. மறு புறத்தில், செய்தித்தா ளின் கொள்கை, விரும்பியோ விரும்பாமலோ, வாசகர்களின் மிகச் ‘‘செல்வாக்குள்ள’’ பகுதிக்கு ஏற்றவாறு தன்னைத் ‘‘திருத்திக்கொள்கிறது’’.

நமது புள்ளிவிபரங்களிலிருந்து கிடைக்கும் முடிவுகள் இரு வகைகளைச் சேர்ந்தவை: முதலாவ தாக, தத்துவ முடிவுகள்; இவை தன் இயக்கத்தின் நிலைமைகளை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளத் தொழிலாளி வர்க்கத்திற்கு உதவும்; இரண்டா வதாக, நடைமுறை முடிவுகள்; அவை நம் வேலைக்கு நேராக வழிகாட்டுகின்றன.

ருஷ்யாவில் இரு வகைத் தொழிலாளர் பத்திரி கைகள் உள்ளன என்று சில சமயங்களில் சொல்லப் படுகிறது. அண்மையில் பிளெகானவ்கூட அதனைக்

கூறினர். ஆனல், அது சரியில்லை. இவ்வாறு பேசுப வர்கள் தங்கள் முழு அறியாமையை வெளிப்படுத்து கின்றனர்; அல்லது தொழிலாளர்களிடையே பூர்ஷ் வாச் செல்வாக்கைப் பரப்புவதில் லிக்விடேட்டர்க ளுக்கு உதவும் இரகசிய விருப்பத்தை வெளிப்படுத் துகின்றனர். கட்சித் தீர்மானங்கள், ரொம்ப நாட்களுக்கு முன்னே (உதாரணமாக 1908லும் 1910லும்) திரும்பத் திரும்ப லிக்விடேட்டர் களின் பூர்ஷ்வாத் தன்மையைச் சரிநுட்பமாகவும் தெளிவாகவும் நேராகவும் சுட்டிக்காட்டின. இந்த உண்மையை மார்க்ஸீயப் பத்திரிகைகளின் கட்டு ரைகள் பல நூறு தடவை விளக்கியுள்ளன.

வெகுஜனங்களிடம் வெளிப்படையாகப் பே சும் தினசரிப் பத்திரிகையின் அனுபவம், லிக்வி டேட்டர்களின் **போக்கின்** உண்மையான **வர்க்கத்** தன்மையைத் தவிர்க்கமுடியாதபடி **வெளிப்படுத்த** வேண்டியிருந்தது. வெளிப்படுத்தத்தான் செய்தது. லிக்விடேட்டர்களின் செய்தித்தாள் சிறுபான்மைத் தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்ற முதலாளித் துவ முயற்சியே என்பது நடைமுறையில் வெளியா யிற்று.

தவிரவும், ஏறத்தாழ, 1914 இளவேனிற் காலம் வரையிலும், லிக்விடேட்டர்களின் செய்தித் தாள் ஆகஸ்ட் கூட்டணியின்[27] பிரசாரக் கருவியாக இருந்ததை மறக்கக்கூடாது. லாத்வியர்கள்[28] இப் போதே கூட்டணியிலிருந்து விலகிக் கொண்டிருக் கின்றனர். டிராட்ஸ்கிய், எம். எல்., ஆன், புர் யானவ், யெகோரவ் ஆகியோர் லிக்விடேட்டர் களிடமிருந்து பிரிந்துவிட்டனர்; அல்லது பிரியப்

போகின்றனர். அக்கூட்டணி தொடர்ந்து சிதைந்து கொண்டிருக்கிறது. லிக்விடேட்டர்கள் **போக்கின்** பூர்ஷ்வாத் தன்மையும், ''வ்பெர்யோத்''வாதிகள், பிளெகானவ்வாதிகள், டிராட்ஸ்கிய்வாதிகள் முதலிய அறிவுஜீவிக் **குழுக்களின்** உயிர்த்துடிப்பின்மையும் தவிர்க்கமுடியாதபடி வெகு சீக்கிரத்தில் மேலும் துலாம்பரமாகும்.

நடைமுறை முடிவுகளைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

1) எண்ணிக்கை—பிராவ்திஸ்டுகள் $2^1/_2$ ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திற்குள் 5,674 தொழிலாளர் குழுக்களை ஒன்றுபடுத்தியுள்ளனர். ருஷ்யாவின் கடினமான நிலைமைகளில் இச்சாதனை மிகவும் அர்த்தபுஷ்டியுள்ளது. ஆனாலும் இது தொடக்கம் மட்டுமே. நமக்குத் தொழிலாளர் குழுக்கள் ஆயிரக்கணக்கில் அல்ல, பல்லாயிரக் கணக்கில் தேவை. நாம் பத்து மடங்கு அதிகக் கடுமையாக வேலை செய்யவேண்டும். சித்தாந்த ரீதியாகவும், ஸ்தாபனரீதியாகவும் நோக்கும் போது, பணக்கார பூர்ஷ்வா நண்பர்களிடம் 100 ரூபிள் நன்கொடை பெறுவதைக் காட்டிலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களிடமிருந்து கோபெக் கோபெக்காக வாங்கிப் பத்து ரூபிள் சேகரிப்பது அதிக முக்கியத்துவமும் அதிக மதிப்பும் உள்ளது. நிதிநிலைமையை நோக்கும்போதுகூட, தொழிலாளர்களிடமிருந்து திரட்டிய கோபெக்குகளைக் கொண்டு தொழிலாளி வர்க்கப் பத்திரிகையை உறுதியாக நிறுவமுடியும் என்பதையும் பூர்ஷ்வாக்களின் ரூபிள்களைக் கொண்டு **அவ்வாறு** செய்யமுடியாதென்பதையும் அனுபவம்

மிகத் தெளிவாக உணர்த்துகிறது. லிக்விடேட்டர்களின் முயற்சி, நீர்க் குமிழியாகும். அது உடைய வேண்டும், உடையத்தான் செய்யும்.

2) மாகாணங்கள் ரொம்பவும் பின் தங்கியுள்ளன. அவற்றில் தொழிலாளர் குழுக்களில் 32 சதவிகிதம் வரையில் லிக்விடேட்டர்களைப் பின்பற்றுகின்றன!! அரசியல் உணர்வு கொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் தன்னால் இயன்றதைச் செய்து, வருத்தமும் வெட்கமும் தரும் இந்நிகழ்ச்சிக்கு முடிவுகட்ட வேண்டும். நம்முடைய சக்தி முழுவதையும் மாகாணங்களில் ஈடுபடுத்தவேண்டும்.

3) நாட்டுப்புறத் தொழிலாளர்கள், இந்நாள் வரை இயக்கத்தால் அநேகமாக ஆகர்ஷிக்கப்பட வில்லை என்பது வெளிப்படை. அங்கே வேலை நடத்துவது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதனை மிகுந்த விடாமுயற்சியோடும் பிடிவாதத்தோடும் முடித்தே தீரவேண்டும்.

4) நோயுற்ற குழந்தையைத் தாய் அக்கறையுடன் பேணி அதற்கு நல்ல உணவு ஊட்டுகிறதைப் போல அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளிகள், லிக்விடேட்டர் கொள்கை என்ற நோயினால் பீடிக்கப்பட்ட தொழிலாளர்கள் உள்ள வட்டாரங்களிலும் பாக்டரிகளிலும் உன்னிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். பூர்ஷ்வாக்களிடையிருந்து வரும் இந்த நோயை இளமையான தொழிலாளர் இயக்கத்தில் தவிர்க்கமுடியாது. ஆனால், அந்நோயைச் சரியாகக் கவனித்து விடாமுயற்சியுடன் சிகிச்சை செய்தால் தொழிலாளர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அழியாத மிகக் கடுமையான தீமை உண்டாக்

காமல் அது சொஸ்தமாகிவிடும். லிக்விடேட்டர்களின் கொள்கை என்ற நோய்வாய்ப்பட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு மார்க்ஸீய இலக்கியத்தை விடாமுயற்சியோடு போதிக்கவேண்டும்; கட்சியின் சரித்திரத்தையும் போர்த்தந்திரங்களேயும், லிக்விடேட்டர் கொள்கையின் பூர்ஷ்வாத்தன்மை பற்றிய கட்சி முடிவுகளின் உட்பொருளேயும் அதிக உன்னிப்போடும் வெகுஜனரஞ்சகமான பாணியிலும் விளக்கவேண்டும்; பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் இன்றியமையாமையை மிக விவரமாக எடுத்துக் கூறவேண்டும்; அதாவது, சிறுபான்மையான தொழிலாளர்கள் பெரும்பான்மையினருக்குக் கட்டுப்பட்டு நடக்கும் இன்றியமையாமையை— அரசியல் உணர்வு பெற்ற ருஷ்யத் தொழிலாளர்களின் ஐந்தில் நான்கு பங்கினருக்கு, ஐந்தில் ஒரு பங்கினர் கட்டுப்பட்டு நடக்கும் அவசியத்தை எடுத்துக் கூறவேண்டும். இதுதான் நமது மிக முக்கியமான பணிகளில் ஒன்ருகும்.

''துருதவாயா பிராவ்தா'', எண்கள் 14, 15; 1914 ஜூன் 13, 14, கட்டுரைத் தொகுதி: ''மார்க்ஸீயமும் லிக்விடேட்டர்களின் கொள்கையும்'', பகுதி II. ''பிரிபோய்'' பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.
செயின்ட்-பீட்டர்ஸ்பர்க், 1914.
கையொப்பம்: **வி. இலின்**

வி. இ. லெனின், நூல்கள், 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 20, பக்கங்கள் 338-345

நம்முடைய செய்தித்தாள்களின் தன்மை

கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன விஷயங்களுக்கு— அரசியல் பிதற்றலுக்கு— நமது அரசியல் கிளர்ச்சியில் மிதமிஞ்சிய இடம் கொடுக்கப்படுகிறது, அதே சமயம் எந்தப் புது வாழ்வு நிர்மாணத்தைப் பற்றி நாம் மேலும் மேலும் உண்மைகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்க வேண்டுமோ, அதற்கு மிக மிகக் குறைவான இடம் ஒதுக்கப்படுகிறது.

பூர்ஷ்வாக்களுக்குக் குற்றேவல் புரியும் மென்ஷெவிக்குகளின் அருவருப்பான துரோகம், மூலதனத்தின் புனிதமான உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்காக நடைபெறும் ஆங்கிலோ-ஜப்பானியப் படையெடுப்பு,[29] ஜெர்மானியர்களை எதிர்த்து அமெரிக்கக் கோடீஸ்வரர்கள் நச்சுப்பற்களைக் காட்டி அச்சுறுத்துவது— இத்தியாதி விஷயங்களைப் பற்றி 200-400 வரிகள் எழுதுவதற்குப்பதிலாக, 20 வரிகளோ, அல்லது பத்தே வரிகள் மட்டுமோ எழுதினல் போதாதா? எல்லோருக்கும் தெரிந்த இந்த எளிய தெளிவான விஷயங்களை வெகுஜனங்கள் குறிப்பிடத்தக்க அளவு ஏற்கனவே புரிந்துகொண்டிருக்கின்றனர். இவற்றைப்பற்றிச் சொல்வது அவசியம், இவை சம்பந்தமான ஒவ்வொரு புதிய

நிகழ்ச்சியையும் எடுத்துச் சொல்லவேண்டும். ஆனல் கட்டுரைகளை எழுதவும் முன்பே சொன்னதைத் திருப்பிச் சொல்லவும் தேவையில்லை. பழைய கொள்கையின், முன்பே தெரிந்த, முன்பே மதிப்பிடப்பட்ட பழைய கொள்கையின் புதிய வெளியீடுகளைச் சில வரிகளில், ''தந்திப்பாணியில்'' அம்பலப்படுத்துவதே இப்போது வேண்டுவதாகும்.

''பழைய பூர்ஷ்வா சுபிட்சக் காலத்தில்'' பூர்ஷ்வாப் பத்திரிகைகள் தனிநபர்களுக்குச் சொந்தமான பாக்டரிகள், தொழில்கள் ஆகியவற்றில் நிலவிய நிலைமைகளைப் பற்றிப் பேசாதிருந்தன: அந்த நிலைமைகள் ''மிக மிகப் புனிதமானவை'' என்று கருதப்பட்டிருந்தன. இவ்வழக்கம் பூர்ஷ்வாக்களின் நலன்களுக்கு ஏற்றதாய் இருந்தது. நாம் இவ்வழக்கத்தை முற்றிலும் விட்டொழிக்கவேண்டும். நாம் இவ்வழக்கத்தை விட்டொழிக்கவில்லை. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்குச் செல்லும் சமுதாயத்தில் மாறவேண்டிய வகையில் நம் செய்தித்தாள்களின் மாதிரி இன்னும் மாறவில்லை.

அரசியல் சர்ச்சை குறைக! அரசியல் முழுமையாகத் ''தெளிவுபடுத்தப்பட்டு'' இரு முகாம்களுக்கிடையே நடைபெறும் போராட்டமே அரசியலின் சாரம் என்பது விளக்கப்பட்டுவிட்டது. இரு முகாம்களாவன: கிளர்ந்தெழுந்திருக்கும் பாட்டாளிகள் ஒருபுறம், ஆண்டைகளாகிய விரல்விட்டு எண்ணக்கூடிய முதலாளிகள் மறுபுறம் (இந்த முதலாளிகளுக்கு மென்ஷெவிக்குகளும் மற்றவர்களும் சேர்ந்த கும்பல் தொண்டு புரிகிறது). நான் திரும்பவும் சொல்கிறேன்: இந்த அரசியல் பற்றி நாம் மிகச்

சுருக்கமாகப் பேசக்கூடும்; அவ்வாறே பேச வேண்டும்.

பொருளாதாரச் சர்ச்சை அதிகமாகுக. ஆனல் ''பொது'' வாதங்கள், பாண்டித்தியம் மிகுந்த ஆய்வுரைகள், மதிவாணர்களின் திட்டங்கள் என்ற பொருளில் அல்ல; அவை அனைத்தும் மிகப் பெரும் பாலும் வெறும் குப்பையைத்தவிர வேறல்ல என்று வருத்தத்தோடு சொல்லுகிறேன். பொருளாதாரம் என்ருல், புதிய வாழ்க்கையின் உண்மையான நிர் மாணத்தைப் பற்றிய உண்மைகளைத் திரட்டுவதும், **கவனமாகச் சரிபார்ப்பதும்,** ஆராய்வதுமாகும் என்பதே நம் கருத்து. பெரிய பாக்டரிகள், விவசா யக் கம்யூன்கள், ஏழைகளின் கமிட்டிகள், தேசீயப் பொருளாதாரக் குழுவின் வட்டார அலுவலகங் கள் ஆகியவை புதிய பொருளாதாரத்தை நிர்மாணிப் பதில் **உண்மையாக** வெற்றிகள் பெற்றுள்ளனவா? இவ்வெற்றிகளதாம் என்னென்ன? அவை நிரூபிக் கப்பட்டனவா? இந்த விஷயத்தில் கட்டுக்கதை சொல்வதும் தற்பெருமை பாராட்டுவதுமில்லையா? அறிவுஜீவுகளின் நடையில் வாக்களிப்பது இல்லை யா (''எல்லாம் கிரமமாக நடைபெறுகிறது'', ''திட்டம் வகுக்கப்பட்டுவிட்டது'', ''செயலில் இறங்கிவிட்டோம்'', ''இப்போது வாக்குறுதி தருகி ருேம்'', ''முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ப தில் ஐயமில்லை'' முதலிய போலி மொழிகள் பேசும் வாய்ச்சொல் வீரத்தில் ''நாம்'' வல்லவர்களாயிற் றே)? அந்த வெற்றிகள் எவ்வாறு கைகூடின? அவற் றை விரிவுபடுத்துவதற்கு என்ன செய்யவேண்டும்?

தேசீயமயமாக்கப்பட்ட நாளிலிருந்து ஒழுங் கீனம், சிதைவு, அழுக்கு, போக்கிரித்தனம்,

புல்லுருவித்தனம் ஆகியவற்றின் முன்மாதிரிகளாய் இருந்துவரும் பிற்பட்ட பாக்டரிகளின் பெயர்களடங்கிய நிந்தனைப் பலகை எங்கே? அதனைக் காணோம். ஆனாலும் அத்தகைய பாக்டரிகள் உள்ளன. ''முதலாளித்துவ சம்பிரதாய வழக்கங்களின்'' இந்தப் ''பாதுகாப்பாளர்களுக்கு'' எதிராகப் போர் நடத்தாமல் நாம் நமது கடமையை நிறைவேற்றமுடியாது. அத்தகைய பாக்டரிகளை நாம் சகித்துக்கொள்ளும் வரையில், நாம் கம்யூனிஸ்டுகளல்ல, கந்தல் சுருணைகளாகவே இருப்போம். பூர்ஷ்வா வர்க்கம் நடத்தியதுபோல் நாம் செய்தித்தாள்களில், வர்க்கப் போராட்டத்தை நடத்தமுடியவில்லை. அது தனது வர்க்க விரோதிகளைப் பத்திரிகைகளில் எவ்வளவு திறமையாக வேட்டையாடி, எள்ளி நகையாடி, அவமானப் படுத்தி, ஒழித்துக் கட்டியது என்பதை நினைத்துப் பாருங்கள். ஆனால் நாமோ? தொழிலாளர்களில் சிலர், சிறிய குழுவினர், பகுதியினர் முதலாளித்துவத்தின் சம்பிரதாயங்களை (வழக்கங்களை) உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சோவியத் அரசைப் பழைய நோக்குநிலையிலிருந்து பார்க்கிறார்கள்; அதாவது ''அதற்காக''க் குறைவான, மோசமான வேலை செய்து, ''அதனிடமிருந்து'' அதிகப் பணம் பறித்துக்கொள்ள முயல்கிறார்கள். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்கிற சகாப்தத்தில் இவர்கள் அனைவருக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பது தானே வர்க்கப் போராட்டம், அல்லவா? சோவியத் அச்சகங்களில் அச்சுக்கோப்பவர்களிடையிலும் சோர்மவ், புதீலவ் தொழிற்சாலை

களில்[30] வேலை செய்யும் தொழிலாளர்கள் முதலியவர்களிடையிலும் அத்தகைய சில கயவர்கள் இல்லையா? அவர்களில் எவ்வளவு பேர்களை நாம் கண்டு பிடித்துள்ளோம்? எவ்வளவு பேர்களை அம்பலப்படுத்தியிருக்கிறோம்? எவ்வளவு பேர்களுக்குச் கசையடி கொடுத்திருக்கிறோம்?

பத்திரிகைகள் இதைப்பற்றி வாய் திறக்கவில்லை. ஒருவேளை இதைக் குறிப்பிட்டாலும், சலிப்பூட்டும் முறையில்; அதிகார வர்க்கத் தோரணையில் பேசுகின்றன. **புரட்சிப்** பத்திரிகைகளின் பாணியில் எழுதுவதில்லை; முதலாளிகள், முதலாளித்துவ வர்க்கத்தின் வழக்கங்களைப் பாதுகாக்கும் புல்லுருவிகள் ஆகியவர்களின் எதிர்ப்பை இரும்புக் கரத்தால் அழிப்போமென்பதைத் தன் செயல்கள் மூலம் காட்டிவரும் வர்க்கத்தின் **சர்வாதிகாரத்தின்** பிரசாரக் கருவியாகப் பத்திரிகைகள் எழுதுவதில்லை.

போர் விஷயத்திலும் இதையே சொல்லமுடியும். பயங்கொள்ளிப் படைத் தலைவர்கள் மீதும் உதவாக்கரைப் பேர்வழிகள் மீதும், சொல்லம்பு தொடுக்கிறோமா? ஒன்றுக்கும் உதவாத ரெஜிமென்டுகளை ருஷ்யா முழுவதின்முன் நாம் கண்டித்திருக்கிறோமா? தகுதியின்மை, கவனக்குறைவு, கட்டுப்பாடில்லாமை முதலிய குற்றங்களுக்காக பகிரங்கமாகக் குற்றப் பிரகடனம் செய்து ராணுவத்திலிருந்து நீக்கப்படவேண்டிய அழுகல் நபர்களைப் போதிய எண்ணிக்கையில் ''பிடித்தோமா''? **திண்ணமாகத்** தீங்கிழைத்தவர்கள் மீது பயன்தரத்தக்கதும் தயவு தாட்சண்யமில்லாததும் உண்மையில் புரட்சிகர

மானதுமான போரை நாம் நடத்துவதில்லை. வாழ்க்கையின் எல்லாத் துறைகள்பற்றியும் உயிரோட்டமுள்ள ஸ்தூலமான உதாரணங்களையும் முன்மாதிரிகளையும் எடுத்துக்காட்டி, **வெகுஜனங்களுக்குப் பயிற்சி அளிக்க** நாம் அநேகமாக ஒன்றுமே செய்வதில்லை. ஆனால் அதுவே, முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாறும்பொழுது பத்திரிகைகள் ஆற்றவேண்டிய தலையாய கடமையாகும். பாக்டரிகளிலும் கிராமங்களிலும் படைப்பிரிவுகளிலும் நிலவும் **அன்றாட** வாழ்க்கையில் நாம் கவனம் செலுத்துவதே கிடையாது எனலாம். அவ்விடங்களில் தான் மிக அதிகமாகப் புதியது அமைக்கப் படுகிறது. அவ்விடங்களில்தான் மிக அதிகக் கவனமும், விளம்பரமும், சமூக விமர்சனமும், கெட்டதைக் கண்டித்து நல்லதை ஏற்க அழைப்பதும் மிகவும் அவசியமாகின்றன.

அரசியல் பிதற்றல் குறையட்டும். மதிவாணர்களின் சொல்லாடம்பரங்கள் குறையட்டும். வாழ்வோடு மேலும் நெருங்கிய தொடர்பு கொள்வோம். தொழிலாளி, விவசாயி வெகுஜனங்கள் தங்களுடைய அன்றாட வேலையில், எவ்வாறு **புதியதை நடைமுறையில்** நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உற்றுக் கவனிப்போம். புதியது எந்த அளவுக்குக் **கம்யூனிஸ்ட்** தன்மையுள்ளது என்பதை மிக அதிகமாகச் **சரிபார்க்க** வேண்டும்.

''பிராவ்தா'', எண் 202,
செப்டம்பர் 20, 1918.
கையெழுத்து: என். லெனின்

வி. இ. லெனின், நூல்கள், 4வது ருஷ்யப் பதிப்பு, தொகுதி 28, பக்கங்கள் 78-80

குறிப்புகள்

[1] "பொருளாதாரவாதம்" — இந்தப் பதிப்பின் 49-53 பக்கங்களைப் பார்க்க.

பக்கம் 6

[2] "ரபோச்சேயே தேலோ" (தொழிலாளர் காரியம்) — பொருளாதாரவாதிகளின் சஞ்சிகை. ஜினீவாவில் 1899 ஏப்ரல் முதல் 1902 பிப்ரவரி வரையில் பதிப்பிக்கப்பட்டது.

பக்கம் 6

[3] "ரபோச்சயா மிஸில்" (தொழில்ாளர் சிந்தனை) — ''பொருளாதாரவாதி''களின் செய்தித் தாள். 1897 அக்டோபர் முதல் 1902 டிசம்பர் வரை பதிப்பிக்கப்பட்டது.

பக்கம் 6

[4] "இஸ்க்ரா" (தீப்பொறி) — முதன்முதலாக வெளியான அகில ருஷ்ய சட்ட விரோத மார்க்ஸீயப் பத்திரிகை. 1900 டிசம்பரில் லெனினுல் வெளி நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கிருந்து ரகசியமாக ருஷ்யாவுக்குள் கொண்டுவரப்பட்டது. ருஷ்ய சோஷல்-டெமாக்ரட்டுகளைச் சித்தாந்த ரீதியில் ஐக்கியப்படுத்துவதிலும் சிதறிக் கிடந்த ஸ்தல ஸ்தாபனங்களை ஒரு புரட்சிகரமான மார்க்ஸீயக்

கட்சியாக ஒன்றுபடுத்துவதிலும் மாபெரும் பாத்திரம் வகித்தது.

1903ல் நடைபெற்ற ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேரவைக் கூட்டத்தில் போல்ஷெவிக்குகளென்றும், மென்ஷெவிக்குகளென்றும் கட்சி பிளவுபட்ட பின்னர், மென்ஷெவிக்குகள் ''இஸ்க்ரா''வை (எண் 52லிருந்து) கைக்கொண்டனர். அப்போதிலிருந்து, **பழைய** லெனினிஸ்ட் **"இஸ்க்ரா"**விலிருந்து பிரித்துக்காட்டும்படி மென்ஷெவிக் ''இஸ்க்ரா'' **புதிய "இஸ்க்ரா"** என்று குறிப்பிடப் பெற்றுவந்தது.

பக்கம் 7

[5] இது 1901 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மாணவர்களும் தொழிலாளர்களும் நடத்திய கலகங்களையும் எழுச்சிகளையும்—கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றைக் — குறிப்பது. செயின்ட்-பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, கீவ், கார்கவ், யரொஸ்லாவல், தோம்ஸ்க், வார்ஸா, பெலஸ்தோக், முதலிய பல நகரங்களில் அந்நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

பக்கம் 13

[6] **ஜெம்ஸ்த்வோ** — ஜாரிஸ்ட் ருஷ்யாவின் மத்திய குபேர்னியாக்களில், பிரபுக்கள் தலைமையில் 1864ல் ஏற்படுத்தப்பட்ட ஸ்தல சுய ஆட்சி எனப்பட்ட ஸ்தாபனங்கள். (சாலை அமைப்பது, வைத்தியசாலைகள் கட்டுவது, புள்ளிவிபரம் சேகரித்

தல், இன்ஷுரென்ஸ் போன்ற) ஸ்தலரீதியான பொருளாதாரப் பிரச்சினைகளைக் கவனிக்கும் பொறுப்பு மட்டுமே அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டது. நிலப்பிரபுக்களும் பூர்ஷ்வாக்களின் பிரதிநிதிகளும் ஜெம்ஸ்த்வோக்களில் பெரும் பங்கு வகித்தனர். உள்நாட்டு அமைச்சகத்தாலும், குபேர்னியத் தலைவர்களாலும் ஜெம்ஸ்த்வோக்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. சர்க்காருக்குப் பிடிக்காத எந்த முடிவையும் அவர்களால் ரத்து செய்ய முடியும்.

ஜெம்ஸ்த்வோ பிரமுகர்கள் மத்தியிலிருந்து மிதமான எதிர்ப்புத் தன்மைகொண்ட மிதவாத-பூர்ஷ்வா இயக்கம் தோன்றியது. அது ஜாரின் ''மட்டு மீறிய செயல்களை'' மட்டும் எதிர்த்தது. ஜெம்ஸ்த்வோ மிதவாதிகள் விண்ணப்பங்களாலும் ''ராஜபக்தி'' நிறைந்த வேண்டுகோள்களாலும் ஜாரிடமிருந்து ஓர் அரசியல் சட்டத்தைப் பெற முயன்றனர். ஆனால் இந்த ''விண்ணப்ப இயக்கத்தை''யும் பொறுக்காமல், பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கியது ஜாராட்சி. அது ஜெம்ஸ்த்வோக்களின் உரிமைகளை மேலும் குறைத்தது. அவைகளின்மீது குபேர்னியத் தலைவர்களுக்கு இருந்த ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்தியது.

பக்கம் 21

7 "இஸ்வேஸ்தியா சோவேதா ரபோச்சிஹ் தெபுதாதவ்" (தொழிலாளிப் பிரதிநிதிகளின் சோவியத்தினுடைய செய்திகள்)—செயின்ட்-பீட்டர்ஸ்பர்க் தொழிலாளிப் பிரதிநிதிகளின் சோவியத்தின் அதிகார

பூர்வமான பத்திரிகை. *1905* அக்டோபர் *17 (30)*ல் இப்பத்திரிகை ஆரம்பமாயிற்று. *1905* டிசம்பர் *14 (27)* வரை வெளிவந்தது. செய்தி அறிக்கை வடிவம் கொண்டது. சோவியத்தின் வேலையைப் பற்றிய விவரங்களைத் தந்தது. அதற்கு நிரந்தர ஆசிரியர் குழு இல்லை. மேலும், தொழிலாளர்கள் அதைப் பல்வேறு பூர்ஷ்வாப் பத்திரிகைகளின் அச்சகங்களில் அனுமதியின்றி அச்சடித்தனர். பத்து இதழ்கள் வெளிவந்தன. அச்சகத்தில் இருக்கும்போதே *11*வது இதழ் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

பக்கம் *23*

[8] **''புரோலிதாரிய்''** *(பாட்டாளி)* — சட்டத்திற்கு விரோதமான போல்ஷெவிக் வார இதழ். ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் பிரதானப் பத்திரிகை. கட்சியின் மூன்றாவது பேரவைக்கூட்டத்தின் முடிவின்படி நிறுவப்பட்டது. வி. இ. லெனின் அதன் பொறுப்புள்ள ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ''புரோலிதாரிய்'' *1905* மே *14(27)* முதல் நவம்பர் *12(25)* வரையில் ஜினீவாவில் வெளிவந்தது. அது பழைய லெனினிஸ்ட் ''இஸ்க்ரா''வின் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தது; போல்ஷெவிக் செய்தித்தாளான ''வ்பெர்யோத்'' (முன்னேக்கி) பாரம்பரியத்தை வழுவாது உறுதியாகக் கடைப்பிடித்து வந்தது. ''புரோலிதாரி''யில் லெனின் *50*க்கு மேற்பட்ட கட்டுரைகளும் குறிப்புகளும் எழுதினர்.

பக்கம்*25*

[9] **அப்லோமவ்** — இ. அ. கொன்சரோவ் எழுதிய ''அப்லோமவ்'' என்ற நாவலில் வரும்

தலைமையான பாத்திரமாகும். ருஷ்ய நிலப்பிரபு அப்லோமவ், பழக்கவழக்கங்களில் ஒடுங்கிக்கிடக்கும் குணம், சோம்பேறித்தனம், ஜடத்துவம் ஆகியவற்றுக்கு ஓர் உதாரணமாகக் குறிக்கப்படுகிறார்.

பக்கம் 29

[10] ''பிராவ்தா'' (சத்தியம்) — போல்ஷெவிக்குகளின் சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகை. செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் பதிப்பிக்கப்பட்டது 1912 ஏப்ரல் 22 (மே5)ல் வி. இ. லெனினால் தொடங்கப்பட்டது. ''பிராவ்தா'' தொழிலாளர்களின் வெகுஜனப் பத்திரிகை. தொழிலாளர்களே கொடுத்த நன்கொடைகளால் நடத்தப்பட்டு வந்தது. தொழிலாளர் நிருபர்களையும், தொழிலாளர் எழுத்தாளர்களையும் கொண்ட அகன்ற வலைப்பின்னலான அமைப்பைப் பெற்றிருந்தது. ஓராண்டிற்குள் தொழிலாளர்கள் அனுப்பிய 11,000க்கு மேற்பட்ட செய்திகளை அது பதிப்பித்தது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 40,000 ''பிராவ்தா'' பிரதிகள் விற்கப்பட்டன. சில மாதங்களில் தினசரி விற்பனை 60,000 பிரதிகளாக உயர்ந்தது.

வி. இ. லெனின் வெளிநாட்டிலிருந்து ''பிராவ்தா''வுக்கு வழிகாட்டினார். அநேகமாக ஒவ்வொரு நாளும் அவரது கட்டுரைகள் அப்பத்திரிகையில் வெளிப்பட்டன. அவர் ஆசிரியர் குழுவிற்கு ஆலோசனை கூறிவந்தார். கட்சியின் சிறந்த எழுத்தாளர்களைப் ''பிராவ்தா''வில் எழுதும்படி செய்தார். ''பிராவ்தா''வைப் போலீஸ் இடைவிடாமல் துன்

புறுத்தியது. முதல் ஆண்டு மட்டும் அதன் பிரதிகள் 41 தடவை பறிமுதலாயின. அதன் ஆசிரியர்கள்மீது 36 தடவை வழக்குத் தொடுக்கப்பட்டது. அவர்கள் மொத்தமாக 47½ மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தார்கள். 2 ஆண்டுகள் 3 மாத காலத்தில் ஜாராட்சி ''பிராவ்தா''வை 8 தடவை தடைசெய்து அடக்கியது. ஆனல் அது ''ரபோச்சயா பிராவ்தா'' (உழைப்பின் சத்தியம்) ''சேவெர்னயா பிராவ்தா'' (வடக்கத்திய சத்தியம்), ''பிராவ்தா த்ருதா'' (உழைப்பின் சத்தியம்) ''ஜா பிராவ்தூ'' (சத்தியத்துக்காக), ''புரோலிதார்ஸ்கயா பிராவ்தா'' (பாட்டாளி வர்க்க சத்தியம்), ''பூத் பிராவ்தி'' (சத்திய வழி), ''ரபோச்சிய்'' (தொழிலாளன்), ''த்ருதவயா பிராவ்தா'' (உழைப்பாளர் சத்தியம்) என்ற வெவ்வேறு பெயர்களில் மீண்டும் மீண்டும் வெளிவந்தது. 1914 ஜுலை 8 (21)ல், முதல் உலகப் போர் தொடங்குவதற்கு முன்னல், ''பிராவ்தா'' அடக்கப்பட்டது. மீண்டும் பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் அது வெளிவரத் தொடங்கியது.

1917 மார்ச் 5 (18)லிருந்து ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் பிரதானப் பத்திரிகையாகப் ''பிராவ்தா'' வெளிவந்தது. ஏப்ரல் 5 (18)ல் வெளிநாட்டிலிருந்து திரும்பிய வி.இ. லெனின் அதன் ஆசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்துகொண்டார்; அவர் அதன் வேலைக்கு வழிகாட்டியாக விளங்கினர். 1917 ஜுலை 5 (18)ல் ராணுவப் பள்ளி மாணவர்களும் கஸாக்குகளும் அதன் பதிப்பகத்தைத் தாக்கினர்கள். 1917 ஜுலை

முதல் அக்டோபர் வரை ''பிராவ்தா'' தாற்காலிக சர்க்காரின் கொடுமைக்கு உள்ளாயிற்று. எனவே அது தன் பெயரை மீண்டும் மீண்டும் மாற்றிக்கொண்டது. ''லிஸ்தோக் பிராவ்தி'' (சத்தியத்தின் செய்தி அறிக்கை), ''புரோலிதாரிய்''(பாட்டாளி),''ரபோச்சிய்'' (தொழிலாளி), ''ரபோச்சிய் பூத்'' (தொழிலாளர் பாதை) ஆகிய பெயர்களில் வெளிவந்தது. அக்டோபர் 27 (நவம்பர் 9)ல் இது ''பிராவ்தா'' என்ற தன் முதன்முதலான பெயரை வைத்துக் கொண்டது. பக்கம்36

[11] *1912* ஏப்ரல்-மே மாதங்களில் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், வேலை நிறுத்தங்கள் ஆகியவை செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கிலும், மாஸ்கோவிலும், ருஷ்யாவின் இதர தொழில் மையங்களிலும் தொழில் பிரதேசங்களிலும் நடைபெற்றன. ஏப்ரல் 1912ல் (சைபீரியாவில்) லேனு தங்கச் சுரங்கத் தொழிலாளர்களை ஜார் படைகள் சுட்டுத் தள்ளியதைக் கண்டித்து, இம்முறையில் பாட்டாளிகள் தம் எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டினர். பக்கம்38

[12] **டிசெம்பரிஸ்டுகள்**—ருஷ்யப் பிரபுக்கள் வர்க்கத்தில் தோன்றிய புரட்சியாளர்கள். 1825 டிசம்பரில் ஜாரிஸ்டு யதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஆயுத மேந்திய கலகம் செய்தனர்.

பக்கம்42

[13] ''**கோலகல்**'' (மணி)—*1857* முதல் *1867* வரை, அ. இ. கெர்ட்ஸன், நி. பி. ஒகர்யோவ் ஆகியவர்களால் வெளிநாட்டில் பதிப்பிக்கப்பட்ட

புரட்சிகரமான சஞ்சிகை. ருஷ்யாவில் சட்ட விரோதமாக வினியோகிக்கப்பட்டது. யதேச்சாதிகாரக் கொடுமை, பண்ணையடிமை முறை, மிதவாதம் ஆகியவற்றுக்கு எதிராகக் ''கோலகல்'' பிரசாரம் செய்தது. ருஷ்யாவின் புரட்சி இயக்க வளர்ச்சியில் அப்பத்திரிகை பெரும் பங்கு வகித்தது.

பக்கம் 42

[14] நரோதிஸம்—ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் குட்டி பூர்ஷ்வாப் போக்கு. 1860க்கும் 1880க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தோன்றிய அறிவாளி ரஸ்னோசினெட்ஸுகளைப் பிரதானமாகத் தழுவியது. யதேச்சாதிகாரக் கொடுமையை எதிர்த்துப் போராடுவதற்கு விவசாயிகளைத் தட்டியெழுப்பக் கருதி, இந்தப் புரட்சிகரமான இளைஞர்கள் ''மக்களிடம்'' கிராமங்களுக்குச் சென்றனர். ஆனால் அங்கு அவர்களுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ருஷ்யாவில் முதலாளித்துவம் ஏற்பட்டது தற்செயலான நிகழ்ச்சி என்றும், அது வளராது என்றும், ஆகவே பாட்டாளி வர்க்கமும் பெருகி வளராது என்றும் நரோத்னிக்குகள் கருதினர். அவர்கள் விவசாயிகளைப் பிரதானமான புரட்சிச் சக்தியாகக் கருதினர். கிராமச் சமுதாயம் என்பதில் சோஷலிஸத்தின் கருவைக் கண்டனர். சரித்திர வளர்ச்சியில், வர்க்கப் போராட்டம் வகித்துவரும் பாத்திரத்தைப் பற்றிய தவறான கருத்தை அடிப்படையாகக் கொண்டு சரித்திரத்தை ஆக்குவோர் வீரர்கள், பிரமுகர்கள் என்றும் வெகுஜனங்கள் எதிர்ப்பின்றி அவர்களைப் பின்தொடர்கிறார்களெனவும் நரோத்னிக்குகள் கருதினர்.

பக்கம் 43

[15] **காடெட்டுகள்** — அரசியல் சட்ட-ஜனநாயக வாதக் கட்சியினர் என்று பொருள்படும் சொற்களின் சுருக்கமாகும். 1905 அக்டோபரில் தோன்றிய ருஷ்ய மிதவாத-முடியாட்சி பூர்ஷ்வாக் கட்சி இது. அரசியல் சட்டத்தின் வரம்புக்குட்பட்ட ஜாராட்சியைப் பாதுகாக்க அவர்கள் விரும்பினர்.

லிக்விடேட்டர்கள் — 1905-1907 புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்து பிற்போக்கான காலகட்டத்தில் மென்ஷெவிக்குகளிடையே ஆதிக்கம் வகித்த சந்தர்ப்பவாதப் போக்கைப் பின்பற்றியவர்கள். அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான சட்டவிரோதக் கட்சியைக் கலைக்க வேண்டுமென்றும் அதற்குப்பதிலாக ஜாராட்சி சூழ்நிலைகளில் சட்டபூர்வமாகச் செயல்படும் சந்தர்ப்பவாதக் கட்சி ஒன்றை நிறுவவேண்டுமென்றும் கோரினர்கள்.

பக்கம் 43

[16] **''உழைப்பு விமோசன''க் குழு**: முதன்முதல் அமைந்த ருஷ்ய மார்க்ஸீயக் குழு. 1883ல் ஜினீவாவில் கி. வ. பிளெகானவ் இதனை நிறுவினர். அது ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேரவைக்கூட்டம் வரை (1903) இருந்தது.

''உழைப்பு விமோசன''க் குழு ருஷ்யாவில் மார்க்ஸீயத்தைப் பரப்புவதற்குப் பெருந்தொண்டு புரிந்தது. அது ''சோஷல்-டெமாக்ரஸியின் தத்துவ அடிப்படைகளை நிறுவியது. மேலும் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் தொடர்பு

கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தது'' (லெனின்). மார்க்ஸீயத்தின் ஸ்தாபகர்களாகிய மார்க்ஸும் எங்கெல்ஸும் எழுதிய ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'', மார்க்ஸ் எழுதிய ''கூலி உழைப்பும் மூலதனமும்'', எங்கெல்ஸ் எழுதிய ''கற்பனுவாத சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும்'', முதலான நூல்களை ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளிநாட்டில் அச்சடித்து, ருஷ்யாவில் ரகசியமாகப் பரப்பினுர்கள் அக்குழுவினர். கி.வ. பிளெகானவும் அவருடைய குழுவும் நரோதிஸத்தின்மீது தீர்மானமான தாக்குதலைத் தொடுத்தனர். அதே நேரத்தில் ''உழைப்பு விமோசன''க் குழு பெருந்தவறுகளைச் செய்தது. பிற்காலத்தில் பிளெகானவும் இக்குழுவின் பிற அங்கத்தினர்களும் தழுவிய மென்ஷெவிக் கருத்துக்களுக்குக் கருவான தவறுகள் அவை.

பக்கம் 44

[17] **"செயின்ட்-பீட்டர்ஸ்பர்க் ரபோச்சிய் லிஸ்தோக்"** (செயின்ட்-பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் செய்தித்தாள்) — சட்டவிரோதமான செய்தித்தாள், செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் அமைந்த ''தொழிலாளி வர்க்க விமோசனப் போராட்ட சங்கத்'' தின் பத்திரிகை. இரண்டு இதழ்கள் வெளிவந்தன. முதல் இதழ் 1897 பிப்ரவரியில் (ஜனவரி என்று குறிப்பிடப்பெற்று) ருஷ்யாவில் வெளியானது. சுமார் 300-400 பிரதிகள் பதிப்பிக்கப்பட்டன. 2வது இதழ் 1897 செப்டம்பரில் ஜினீவாவிலேயே வெளியானது.

பக்கம் 48

[18] **ஸிண்டிக்கலிஸ்டுகள்** — 19ம் நூற்றுண்டின் கடைசியிலும் 20ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் நடைபெற்ற ஸிண்டிக்கலிஸம் என்ற தொழிலாளர் இயக்கத்தின் குட்டி பூர்ஷ்வாப் போக்கைப் பின் பற்றியவர்கள். பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தையும் பாட்டாளி வர்க்க அரசை அமைப் பதன் அவசியத்தையும் மறுத்தனர்.

பக்கம் 51

[19] **"வ்பெர்யோத்"** — சட்டவிரோதமான போல் ஷெவிக் செய்தித்தாள். 1904 டிசம்பர் 22 (1905 ஜனவரி 4)லிருந்து 1905 மே 5 (18) வரையில் ஜினீவாவில் பதிப்பிக்கப்பட்டது. 18 இதழ்கள் அச் சிடப்பட்டன. வி. இ. லெனின், அந்தச் செய்தித்தா ளின் ஸ்தாபகராகவும் சித்தாந்த வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்தார்.

பக்கம் 54

[20] **"நோவயா ஷிஸ்ன்"** (புது வாழ்வு) — போல் ஷெவிக்குகளின் முதலாவது சட்டபூர்வப் பத்திரி கை. 1905 அக்டோபர் 27 (நவம்பர் 9) முதல் டிசம்பர் 3 (16) வரை, செயின்ட்-பீட்டர்ஸ்பர்க் கில் நாள்தோறும் வெளிவந்தது. நவம்பர் தொ டக்கத்தில் லெனின் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து செயின்ட்-பீட்டர்ஸ்பர்க் அடைந்ததும், அவருடைய நேரடியான தலைமையில் அந்தச் செய் தித்தாள் வரத் தொடங்கியது. நாள்தோறும் சுமார் 80,000 "நோவயா ஷிஸ்ன்" பிரதிகள் விற் பனையாயின. அது பலப்பல தடவை கொடுமைகளுக்கு உள்ளாகியது. 27 இதழ்களில் 15 இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. டிசம்

பர் 2(15) தேதியன்று 27வது இதழ் வெளிவந்த பிறகு, சர்க்கார் ''நோவயா ஷிஸ்ன்'' பத்திரிகையைத் தடைசெய்து அடக்கியது. 28வது இதழ் தான் கடைசி இதழ். இது சட்டவிரோதமாக அச்சிடப்பட்டது.

பக்கம் 55

21 ''**நச்சாலோ**'' (ஆரம்பம்) — மென்ஷெவிக்குகளின் சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகை. 1905 நவம்பர்-டிசம்பரில் செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் வெளிவந்தது.

பக்கம் 55

22 ''**வால்னு**'' (அலை) — போல்ஷெவிக்குகளின் சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகை. செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் ஏப்ரல் 26 (மே 9)லிருந்து 1906 மே 24 (ஜூன் 6) வரை பதிப்பிக்கப்பட்டது. மொத்தமாக 25 இதழ்கள் வெளிவந்தன. 1906 மே 5 (18)ல் வெளிவந்த 9வது இதழிலிருந்து லெனினே அப்பத்திரிகையின் தலைமை ஆசிரியப் பொறுப்பை நிர்வகித்தார் (நான்காவது பேரவைக்கூட்டம் முடிந்துலெனின் ஸ்டாக்ஹோமிலிருந்துவந்தபிறகு). அவருடைய கட்டுரைகள் 20க்கு மேல் அதில் அச்சடிக்கப்பட்டன. ''வால்னு'' அடிக்கடி போலீஸ் கொடுமைக்கு உள்ளாயிற்று, கடைசியில் அது ஜார் அரசாங்கத்தால் ஒடுக்கப்பட்டது. ''வ்பெர்யோத்'' என்ற போல்ஷெவிக் சட்டபூர்வப் பத்திரிகை அதைத் தொடர்ந்து வெளிவந்தது.

''**எகோ**'' (எதிரொலி) — சட்டபூர்வமான போல்ஷெவிக் செய்தித்தாள். அரசாங்கத்தாரால் ஒடுக்கப்பட்ட ''வ்பெர்யோத்'' பத்திரிகையைத்

தொடர்ந்து, செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் 1906 ஜூன் 22 (ஜூலை 5) முதல் ஜூலை 7 (20) வரை பிரசுரமாயிற்று. 14 இதழ்கள் வெளிவந்தன. உண்மையில் ''எகோ''வின் ஆசிரியராகப் பொறுப்பு நிர்வகித்தவர் லெனின்தாம். ஒவ்வொரு இதழிலும் அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன. ''செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும்'' என்ற பகுதியில் அவர் நேரடியாகப் பங்கு கொண்டார். ''எகோ''வின் ஏறக்குறைய எல்லா இதழ்களுமே போலீஸ் தொல்லைக்குட்பட்டன.

பக்கம் 55

23 ''நரோத்நயா டூமா'' (மக்கள் சிந்தனை)— செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் 1907 மார்ச்-ஏப்ரலில் வெளியான மென்ஷெவிக் தினத்தாள்.

பக்கம் 55

24 ஜூபிட்டர்: பண்டைய ரோமானியர்களின் தலைமைத் தெய்வம். அவனது மகள் மினர்வா அறிவு, கலைகள் ஆகியவற்றிற்குரிய பெண் தேவதை. இவள் தந்தையின் தலையிலிருந்து சர்வாயுதபாணியாக வெளிவந்ததாகக் கூறுவர்.

பக்கம் 57

25 1905-1907 புரட்சியின் பயனாக ருஷ்யாவில் அமைந்த சட்டமன்றமான இரண்டாவது அரசாங்க டூமாவை 1907 ஜூன் 3ம் தேதி ஜாராட்சி கலைத்தது. மேலும் டூமா தேர்தலுக்கான சட்டத்தை மாற்றியது. அரசாங்கக் கொள்கையில் ஏற்பட்ட தலைகீழான மாறுதலைத் தொடர்ந்த காலகட்டம் முழுவதும் பிற்போக்கின் ஆதிக்கம் நிலவி

யது. அக்காலகட்டம் ''ஜூன் 3 ஆட்சி'' எனப்படுகிறது. இந்த ஆட்சியில் ஜாரிஸ்ட் போலீஸ் மார்க்ஸீயப் பத்திரிகைகளின் சட்ட உரிமைகளை மூர்க்கமாகத் தாக்கிக்கொண்டேயிருந்தது. உதாரணமாக போல்ஷெவிக் சட்டபூர்வப் பத்திரிகையான ''பிராவ்தா'' இரண்டு ஆண்டுகளிலே 8 தடவை ஒடுக்கப்பட்டது.

பக்கம் 63

26 ''லூச்'' (கதிர்)— மென்ஷெவிக்-லிக்விடேட்டர்களின் சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகை. செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில், 1912 செப்டம்பர் முதல் 1913 ஜூலை வரை பிரசுரமாயிற்று.

பக்கம் 70

27 1912ல் லெனினீயத்துக்கு விரோதமான சகல போக்குகளையும் குழுக்களையும் சேர்த்துக்கொண்டு டிராட்ஸ்கிய் அமைத்ததே கட்சி எதிர்ப்புக் கூட்டணி. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கட்சி எதிர்ப்பு அம்சங்களின் கதம்பக் கூட்டணியாகவிருந்த அது சட்டவிரோதப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்காகப் போராடி போல்ஷெவிக்குகளின் தாக்குதலால் விரைவில் சிதறுண்டது.

பக்கம் 79

28 லாத்வியப் பிரதேசத்தைச் சேர்ந்த சோஷல்-டெமாக்ரட்டுகளைக் குறிக்கிறது.

பக்கம் 79

29 1918ல் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் தலை

யீட்டைக் குறிக்கிறது. அந்தக் குறுக்கீட்டில் பிரிட்டிஷ், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் பங்கு கொண்டனர்.

பக்கம் 83

[30] இது சோர்மவ் நகரத்திலுள்ள தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களையும் பெட்ரோகிராடிலுள்ள புதீலவ் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களையும் குறிக்கிறது.

பக்கம் 87

பெயர்ப் பட்டியல்

ஆன் (ஜொர்தானியா, நோஇ நிகலாயெவிச்) *(பிறப்பு 1870)—ஜார்ஜியாவின் மென்ஷெவிக் தலைவர், 79.*

குச்கோவ், அலெக்ஸாந்தர் இவானவிச் *(1862-1936)—ருஷ்ய ஏகாதிபத்தியவாத பூர்ஷ்வா வர்க்கத் தலைவர், முடியரசுவாதி, புரட்சியின் தீவிர ஏதிரி, 25.*

கெர்ட்ஸன், அலெக்ஸாந்தர் இவானவிச் *(1812-1870)—மாபெரும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, லோகாயதவாதத் தத்துவஞானி, எழுத்தாளர், கட்டுரையாளர், 42, 43.*

செர்னிஷேவ்ஸ்கிய், நிகலாய் கவ்ரீலவிச் *(1828-1889)—மாபெரும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, லோகாயதவாதத் தத்துவஞானி, விமர்சகர், எழுத்தாளர், 1860-70ல் புரட்சிகர ஜனநாயகவாத இயக்கத்தின் தலைவர், ருஷ்ய சோஷல்-டெமாக்ரஸியின் அசாதாரண முன்னேடிகளில் ஒருவர், 43.*

பிளெகானவ், கியோர்கிய் வலென்தினவிச் *(1865-1918)—ருஷ்ய, அகில உலக சோஷலிஸ்ட் இயக்கத்தின் பிரபலச் செயலாளர், மார்க்ஸீயத்தின் அசாதாரணப் பிரசாரகர். பிளெகானவ் தோற்றுவித்த ''உழைப்பு விமோசன'' க் குழுவின் செயல்திட்டத்தில், ஜாரின் தன்னுட்சிக்கு எதிரான போராட்டம் பிரதான இடம் பெற்றது, 6, 51, 78.*

பெலீன்ஸ்கிய், விஸ்ஸரியோன் கிரிகோரியெவிச் *(1811-1848)—மாபெரும் ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, லோகாயதவாதத் தத்துவஞானி, விமர்சகர், கட்டுரையாளர்.*

அவரது இலக்கியத் தொண்டின் விளைவு அவருடைய புகழ் பெற்ற ''கோகலுக்கு எழுதிய கடிதம்''. பண்ணையடிமைக் குடியானவர்களின் புரட்சிகர உணர்ச்சியை இது பிரதிபலித் தது; பண்ணையடிமை முறைமீது அவர் கொண்டிருந்த வெறுப்பும், மக்கள்மேல் உளமார்ந்த அன்பும், அவர்களது விடுதலையில் அவருக்கிருந்த நம்பிக்கையும் இதில் பொங்கித் ததும்புகின்றன, *42.*

மார்ட்டோவ், லே. *(1873-1923)*—மென்ஷெவிக் தலைவர் களில் ஒருவர். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் முறைக் கும் தீராப் பகைவர், *55, 79.*

எம். எல். (லூகோம்ஸ்கிய், மி. யூ.) *(பிறப்பு 1872)*— சோஷல்-டெமாக்ரட், மென்ஷெவிக், *79.*

யெகோரவ்: பார்க்க **மார்ட்டோவ்.**

ருபாகின், நிகலாய் அலெக்ஸாந்த்ரவிச் *(1862-1946)*— பிரசித்தி பெற்ற ருஷ்ய நூல்விவரத் தொகுப்பாளர். ''புத்தகங்களுக்கிடையே'' என்பது அவரது பிரதான நூல் விவரத் தொகுப்பாகும். இந்தத் தொகுப்பில், அறிவின் எல்லாத் துறைகளிலும் ருஷ்ய இலக்கியத்தைப் பற்றிய முறையான பார்வையீட்டை வழங்குவதற்கு அவர் முயன் றார், *56.*

லீப்க்னெஹ்ட், கார்ல் *(1871-1919)*—ஜெர்மானிய, அகில உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தில் அசாதார ணப் பங்காற்றியவர், ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட் சியின் ஸ்தாபகர்களில் ஒருவர், *7.*

வி. அ. தி. (திகமீரவ் வி. அ.) *(1889-1919)*—பழைய போல்ஷெவிக். 1914ல் ''பிராவ்தா'' அலுவலகத்தில் வேலை செய்தவர், *69.*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை அயல் மொழிப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Foreign Languages Publishing House, 21, Zubovsky Boulevard, Moscow, U.S.S.R." என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.